பிஸ்மில்லாஹி

# அருட்பெருஞ்ஜோதி
# ஸுல்தானுல் ஆரிஃபீன்
# அஃகுமத் கபீர் ரிஃபாயி (ரலி)

கௌரவ ஆசிரியர்:-
அல் மர்ஹூம் ஹுஸைனுல்லாஷா
அஷ்ஷெய்கே காமில் முஹம்மது ஹுஸைன் சாஹிப் (ரலி)
கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி க்ஷிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி

இரண்டாம் அட்டைப்படம்:-
(ஹலரத் காதிர் ஒலி நாயகம் தர்கா ஷரிஃபில் தஃபுடன் ஷெய்குனா ஹுஸைனுல்லாஷா நிற்கும் காட்சி)

ஆசிரியர்:-
M.A. ஹைதர் அலீ யகீனுல்லாஷா. B.A.
கலிஃபத்துல் காதிரி ஷத்தாரி க்ஷிஸ்தி சர்கலிஃபா ரிஃபாயி


மும்தாஜ் பதிப்பகம்
39/20, முஸ்லிம் கருமார் தெரு
நெல்லிக்குப்பம் - 607105
Ph: 04142-273254
Mob: 9894746014
தமிழ்நாடு, இந்தியா.


www.netsufi.com


பதிப்புரிமை பெற்றது :-

| | | |
|---|---|---|
| பெயர் | : | அருட்பெருஞ்ஜோதி ஸுல்தானுல் ஆரிஃபீன் அஹ்மத் கபீர் ரிஃபாயி (ரலி) |
| பதிப்பு | : | முதல் பதிப்பு பிப்ரவரி 2014 |
| ஆசிரியர் | : | எம்.ஏ. ஹைதர் அலீ |
| பக்கம் | : | |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| விலை | : | ரூ.60/- |

அச்சு:-
யுனைடட் பைண்ட் கிராஃபிக்ஸ்
கீழ்ப்பாக்கம்
சென்னை


www.netsufi.com

*நீயே வானின் தோரணமாம்*
*நீயே ஞானப் பூரணமாம்*
*நீயே காலப் பரிணாமம்*
*நீயே தூரப் பரிமாணம்*
*நீயே ஆதி காரணமாய்*
*நின்றாய் வாழி பராபரமே*
*நீயே எனக்குள் நானாகி*
*நிகழ்ந்தாய் உன்னை வணங்குறேன் !*
*-ஹஜ்ரத் காதிர் ஒலி **

## 1.ஏகத்துவத்தின் ஜோதிகள்

[1]"வானங்களையும், பூமியையும் ஒழுங்காக படைத்து நடத்தாட்டுகின்ற ஏக இறைவன் அல்லாஹ்வின் பக்கம் என் முகத்தை முன்னோக்கி நிற்கிறேன், நான் அந்த இறைவனுக்கு இணை வைப்பவர்களை விட்டும் நீங்கி விட்டேன்" என்று ஹனீஃப்களாகிய ஏகத்துவ வாதிகளின் பிரார்த்தனையை மனமுருகி ஓதியபடி ஹனீஃப்களின் தலைவரும், முன்னோடியுமாகிய நபிமார்களின் தந்தை என்று அழைக்கப்படும் தீர்க்கதரிசி,

இன்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விரைந்தோடும் ஜோர்தான் ஆற்றின் மேலை கரையில் நின்றிருந்தார்கள்-ஆம் மாமனிதர் நபி இபுறாஹிம் அலைஹிஸ்ஸலாம். மெசபடோமியாவின்(ஈராக்) ஊர் என்ற ஊரில் தோன்றிய அவர்கள் நூறு வயதை கடந்த வாலிபராக ஒட்டகையின் மேல் அமர்ந்திருக்க கண்டு ஆற்றின் அலைகளில் பரந்து திரியும் கூழக்கடா, கொக்கு, மடையான், கடல் வாத்து, பறவைகளுக்கு அற்புத போர் வீரராக காட்சியளித்தார்கள்.

ஈச்ச மர மட்டைகளிலிருந்து ஓலைகளின் சலசலப்பு, நெடுந்தொலைவில் வானில் மினுமினுக்கும் நட்சத்திரங்கள், பாலை நிலப்பரப்பின் கதகதப்பான இனிய மணம் ஆற்றின் கரையோரங்களில் செடார் மரங்கள் நீர் பரப்பின் மீது குனிந்து வளைந்து நின்றன.

---

**ஹஜ்ரத் காதிர் ஒலி அவர்களின் சொற்பொழிவிலிருந்து கவியாக்கம் ஆசிரியர்*



தான் பிறந்த திக்ரிஸ் ஃபுராத் நதிகளின் நிலப் பரப்பிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் ஜோர்தான் பாலை நிலத்தின் ஹெப்ரானில் புகுந்து அந்த சிற்றூரை நகரமாக உருவாக்கி மனைவி மக்களோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள், நபி அவர்களோடு மனைவி சாராவும் மகன் ஈசாக்கும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்க,

கிழக்கே ஆயிரம் மைல்களுக்கு அப்பால் அரபு பாலை நிலத்தில் பக்கா (மக்கா ஷரீஃப்) என்னும் பள்ளத்தாக்கில் இறைவனின் உத்தரவில் பணிந்து மற்றொரு மனைவி ஹாஜராவையும் அவள் பெற்றெடுத்த செல்வம் இஸ்மாயிலையும் விட்டு பிரிந்து வந்துவிட்டதை நெஞ்சில் நினைத்தவர்களாக அந்த பேராற்றின் கரையிலே வந்து நின்றார்கள்,

நபி அவர்கள் நெஞ்சில் மிதந்த வேதனை மேகங்களை மணற் குன்றுகளும் ஆற்றுப்படுகை நீர்ப்பரப்புகளும் ஆங்காங்கே பசுமை பரப்பிய அழிஞ்சி புதர்களும் பருத்தி மரங்களும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லைதான்.

ஆனால் அகில பிரபஞ்சமென்ற அனைத்துக்கும் ஆதாரமாய், அவர்களின் அடிநாள் தோழமையாய் இதயத்தில் உருவாகி எங்குமாகி நிற்கும் ஆதி பராபரன் அல்லாஹ்வின் பேருணர்வு, அதன் உத்தரவுக்கிணங்க மைந்தன் இஸ்மாயிலுடன் நின்றுபக்கா என்னும் பள்ளத்தாக்கில் ஆதிபிதா ஆதமின் சமாதியின் மீது அல்லாஹ்வின் இல்லமென்ற பள்ளிவாசலை உருவாக்கி நாடு கடந்து வந்த பின்னும்,

இன்றும் அந்த கஅபா என்னும் ஆதி ஆலயத்தை முன்னோக்கி அதிகாலை வைகரையிலும் அந்திமாலை கருக்கிருட்டிலும் தன்னை தலை வணங்கி தொழுது வரும் அந்த நல்லடியாரின் உள்ளத்தை அந்த ஏகமாகிய ஓரிறை உணர்ந்திருக்காதா?

---

*1. இன்னீ வஜ்ஹத்து வஜ்ஹியலில்லதி ஃபதரஸ்ஸமாவாத்தி வல் அர்ள ஹனீஃபன்*
*வமா அன மினல் முசிரிகீன்- தொழுகையில் நின்றவுடன் முதலில் ஓதும் வஜ்ஹத்து.*

அந்த ஆளரவமற்ற நதிக்கரைப் பிரதேசத்தில் நதியின் நிலைக்கண்ணாடி போன்ற ஆற்றொழுக்கு மணற்பாங்கான கரைகளுக்கு மத்தியில் முடிவற்று மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. கடல் பறவைகள் கூட்டம் கூட்டமாய் நதிப் படுகைக்கும் வானவெளிக்கும் இடையே திடீர்திடீரென கும்பல் கும்பலாய் பறக்கும் போது உண்டாகும் ஒலி இடியோசைப் போல் எழுந்தது.

மெசபடோமிய சுமேரிய பாபிலோனிய நாகரீக சமுதாயங்கள் வணங்கி வந்த என்கி, இனானா, ஆன், என்லில், நினர்ஷா, அனுனகி,எரிடு, இர்கெல்லா,எரெஸ்கிலானா, உரூக், நம்மு, தியாமத், நன்னா, நிங்கல், நின்லில், நிப்பூர், நினர்த்தா, கிர்ஸுு, லாகஸ், உது, சிப்பா, மர்துக், எனுமா, எதுசி (சுமார் 2004 கடவுளர்) ,

இப்படி ஆயிரக்கணக்கான கற்பனை கடவுளர்களை போராடி ஒழியச்செய்து, பாபெல் நகரில் பேரரசன் நம்ரூதின் நெருப்புக் குண்டத்திலும் தீய்ந்து கருகாமல் தன்னை தப்ப வைத்த தனக்குள்ளான ஆன்மாவிலும் ததும்பி நிற்கும் அவன் அற்புதத்தில் எப்படித்தான் அவர்கள் நம்பிக்கை இழப்பார்கள்.

தான் கண்ட கனவுக்கிணங்க தன்னை வழி நடத்தும் உள்ளமையின் உள்ளமைக்கு ஒப்புரவு தப்பாமல் மைந்தன் இஸ்மாயிலை நரபலி கொடுக்க முயன்ற போது தடுத்தணைத்து மகனுக்கு பதிலாக ஓர் கொடியாட்டை பலி கொடுக்கச் செய்த பராபரனை எப்படி அவர்கள் பிறழ்ந்து நடப்பார்கள்.

"இறைவனின் விதிவச திட்டமென்னும் பாயிலே நீ படுத்து விடு. அந்த முரட்டு அசுவம் உன் தலையை மிதித்து விட்டு செல்லட்டும். அவன் மீது உனது நேசம் சிதறாமல் நீ இருந்து விடுவாயேயானால் ஆண்டவன் உன் முன் நிச்சயமாக வந்து விடுவான்"[1] என்று அவர்களின் கனத்த இதயம் முனுமுனுத்து கொண்டிருந்த போது,

அவர்கள் கிழக்கில் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உருவாக்கிய கஃபாவின் திசையிலிருந்து தன் தோற்றம் போன்ற ஒரு ஒளி உருவம் அகன்ற ஜோதி பிரகாசமாய் தன்னை நெருங்குகிறது, "இப்ராஹிமே நான் தான் உமது இதய நேசன். மனித சமுதாயத்தில் நீரே எனது நேசர், "(கலீலுல்லாஹ்!) " என்று கூறக்கண்டு திடுக்கிட்டார்கள்.



ஆணா அல்லது பெண்ணா? என்று அறிந்துணர முடியாத அந்த ஜோதி உடல் அவர்களை நெருங்கி வரவும், தன் உடல் உயிர் உள்ளமெல்லாம் வாழ்நாளில் எந்த பெண்ணிடமும் கண்டிராத பேரின்பம் நுழைவதையும் கண்டு இதயம் புளாகாங்கித்து வெகுநேரம் நின்றிருந்தார்கள்.

அவர்கள் நாவு மட்டும் மீண்டும் உச்சரித்தது அந்த பிரார்த்தனையை! ஆம் பக்காவென்னும் பள்ளத்தாக்கில் தான் தன் மகனோடு நின்று கொண்டு இறை இல்லம் கஃபாவை உயர்த்தி கட்டி இரு கரம் ஏந்திய பிரார்த்தனையை,

"இறைவா எனது இந்த நற்செயலை ஒப்புக்கொள்,என் குடும்பத்தினரின் மீது கருணை காட்டு, என்னுடைய சந்ததிகளிலிருந்து உன்னுடைய நேசர்களை உண்டாக்கு"

அதோ அந்தி சாயும் அந்த கருக்கிருட்டில் அவர்களின் கண்முன் தோன்றுகிறார்கள் ஈசாக்கின் சந்ததியில் இறை தூதர்களான நபிமார்கள், யாக்கூப், யூசுப், மூஸா, ஈஸா, அதோ அந்த வரிசை முடிவில் திடீரென காற்று வீசத் தொடங்கியது, கிழக்கு திசையிலிருந்து வீசியக் காற்றில் கருமேக கூட்டங்கள் மிதந்து வந்தன இருள் கவிழந்தது.

அம்மாமனிதர் தன் ஒட்டகையின் லகானை இழுத்து மேற்குப் புறமாகப் பயணப்பட்டார்கள். வானும் புவியும் கன்னங்கரிசலாய் மாறத் தொடங்கியது.

மின்னல்களின் தொடர் வெளிச்சத்தில், பயணப் பாதையில் சிற்றோடைகளாக மாறிவிட்ட நொடித் தடங்களைத் தாண்டி ஒட்டகையில் விரைந்து செலுத்தினார்கள். ஒரு கல் தூரம் பயணித்த நேரம் மேற்கு வானில் மேகங்கள் கலைந்து முழுநிலா பளிச்சென வெளித் தோன்றியது.

அதோ அந்த முழுமதியின் முகத்தில் ஒரு மனித முகம், அது அண்ணல் முகம்மதின் முகம், நிம்ரூதின் நெருப்புக் குண்டத்தில் பாய்ந்த போது தடுத்தாட்கொண்ட கலிமா வாக்கியத்தில் வெளிப்பட்ட ஒலிரூபம் ,

அரஃபாத் பெருவெளியில் மைந்தன் இஸ்மாயிலின் கழுத்தை கூர் கத்தியால் அறுக்க முயன்ற போது குறுக்கிட்டு இரட்சித்த காருண்ய கலிமா சொற்றொடரில் இடம் பெற்றிருந்த "முகம்மத் " என்ற வார்த்தையின் வண்ண முகத்தோற்றம்.

---

1. *கௌதுல் அஃளம் பத்ஹுர் ரப்பானி*

அதோ அந்த முழுமதியின் முகத்தில் ஒரு மனித முகம், அது அண்ணல் முகம்மதின் முகம், நிம்ரூதின் நெருப்புக் குண்டத்தில் பாய்ந்த போது தடுத்தாட்கொண்ட கலிமா வாக்கியத்தில் வெளிப்பட்ட ஒலிரூபம் ,

அரஃபாத் பெருவெளியில் மைந்தன் இஸ்மாயிலின் கழுத்தை கூர் கத்தியால் அறுக்க முயன்ற போது குறுக்கிட்டு இரட்சித்த காருண்ய கலிமா சொற்றொடரில் இடம் பெற்றிருந்த "முகம்மத் " என்ற வார்த்தையின் வண்ண முகத்தோற்றம்.

மைந்தன் இஸ்மாயிலின் சந்ததியில் தந்தையையும் மைந்தன் ஈசாக்கின் சந்ததியில் தாயையும் பெற்ற அப்துல்லா ஆமினாவின் மைந்தர் முகம்மதென்னும் நிறைமதி, அகிலத்தில் ஏகத்துவ உள்ளமையின் அறுதி தூது !

அதோ நிறைமதியின் வெளிவட்ட ஓரங்களில் ஒளிக்கின்ற அந்த மூன்று நட்சத்திரங்கள்! , அவர்கள் யோசிக்கும் முன்னரே தான் பிறந்த மெசபடோமியாவின் ஊருக்கு வடக்கிலும் தெற்கிலுமாக அந்த நட்சத்திரங்கள் வால் நட்சத்திரங்களாக பாய்ந்து செல்ல காண்கிறார்கள், இபுறாஹிம் நபி அவர்களின் காதுகளில் இல்ஹாமென்னும் உள்ளொலி ஓசை எழுகிறது,

"இவர்கள் இருவரும் ஏகத்துவ முகம்மதென்னும் கமாலியத்தின் ஜமால் ஜலால் என்ற இரண்டு ஒளிச்சுடர்களாக நீர் பிறந்த தேசத்தில் ஜீலானிலும் பஸ்ராவிலும் பிறந்து உலக இறுதி நாள் வரை எமது மஹ்பூபு ஆகிய காதலராகவும் மஹ்சூக்கு ஆகிய காதலியாகவும் விளங்குவார்கள்!"

கௌதுல் அஃளமென்றும், சுல்தானுல் ஆரிஃபென்றும் பெயர் விளங்கும் அவர்கள் இருவரைக் கொண்டும் இபுராஹிமே உமது இதயத்தில் நிறைந்து ஏக உள்ளமை மனித கோடிகளுக்கு அருளாகவும் அன்பாகவும் விளங்கி இரட்சிப்பார்கள்,

"உமது பிரார்த்தனையை ஏற்று கொண்டேன் உமது சந்ததிகள் என் நேசர்களை உண்டாக்குவதாக ஒப்புக்கொண்டேன்,

"சாந்தி நிறைந்த ஆத்மாவுடன் நபி இபுராஹிம் அலை ஹிப்ரான் நகரை நோக்கிப் பயணப்பட்டார்கள்,

*" இறைவா நபி இபுறாஹிம் (அலை) அவர்கள் மீதும் அவரது கூட்டத்தார் மீதும் சாந்தியைப் பொழிந்தது போல முகம்மதின் மீதும் அவரது கூட்டத்தார் மீதும் நீ சாந்தியைப் பொழிவாயாக,*



*இறைவா நபி இபுறாஹிம் (அலை) மீதும் அவர் கூட்டத்தார் மீதும் நீ அருளைப் பொழிந்தது போல நபி முகம்மதின் மீதும் அவர்களது கூட்டத்தார் மீதும் உனதருளை பொழிவாயாக !ஆமீன்!"**

**அல்லாஹு்ம்ம ஸல்லி அலா முகம்மதின் வஅலாஆலி முகம்மதின் கமா ஸல்லைத்த அலா இபுராஹீம வஅலாஆலி இபுராஹிம இன்னக ஹமீதுன் மஜீது ,*

*அல்லாஹு்ம்ம பாரிக் அலா முகம்மதின் வஅலாஆலி முகம்மதின் கமா பாரக்த்த அலா இபுராஹீம வஅலாஆலி இபுராஹிம இன்னக ஹமீதுன் மஜீது , -தருதே இபுராஹிம்*

*உனக்குள் ஹுஹு என்றோடும்*
*உயிரின் மூச்சில் கவனம் வை!*
*பனிக்கும் உந்தன் பார்வையினை*
*பாதத்தின் மேல் இருக்கச்செய்!*
*கனக்கும் கல்பு கரைந்துருக*
*ஹக்கின் மீது காதல்வை!*
*தனக்குள் தானாய் இருப்பவனை*
*தம்பிரானை தேடிக்கொள்!*
*-ஹஜ்ரத் காதிர் ஒலி.*

## 2.பரமனின் பாதையில் வீரமும் காதலும்

அது மதினாவின் காலைப் பொழுது. இளம் மனைவி ஆயிஷாவின் இல்லத்தில் படுத்தபடி,எம்பிரான் முகம்மத் (ஸல்) மஸ்ஜிதிலிருந்து அஸ்ஹாபுல் ஸூஃபா என்னும் திண்ணைத் தோழர்கள் எழுப்பும் இறைநாம திக்ரின் தியான ஓசை கேட்டு, புன்னகைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறார்கள்.

அன்றைக்கு முதல் நாளில் மஸ்ஜிதில் தோழர் அபுபக்கர் சித்தீக்கின் (இமாமத்) தலைமையில் முதன் முதலாக முஸ்லிம்கள் நின்று தொழுகை நிகழ்த்தியதைக் கண்டு இன்புற்றிருந்த அவர்கள் இதயம், இப்போது பேரின்பத்தில் மூழ்கியது.

"ஆயிஷா" என்று துணைவியாரை விளித்தழைத்து "ஒரு சாஅத் நொடி நேரம் இறைவனை தியானித்து அவனை அறிய முயல்வது ஓரிரவு முழுதும் நின்று அவனை தொழுது வணங்குவதற்கு அத்தமானது" என்றார்கள்.

ஆயிஷா புன்னகைத்தார்கள், "அல்லாஹ்வை அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறீர்கள்! அப்படித்தானே!"

"ஆம்ஆயிஷா தன் நப்ஸ் என்னும் தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தவனாவான் (மன் அரப நஃப்ஸஹு ஃபகத் அரப ரப்பஹு)" என்றார்கள்நபி பிரான்.

திண்ணையிலிருந்து லாயிலாஹ இல்லல்லாஹ் என்று ஆரம்பித்து எழுந்த திக்ரின் ஓசை இப்போது ஆவேசமாக அதன் உச்ச நிலையை அடைந்து "ஹு ஹுஹு " என்று மஸ்ஜிதையும் தெரு வீதிகளையும் கடந்து வானம் முட்ட ஆர்ப்பரித்து எழுகிறது



அந்த ஓசை அடங்கியதும் ஒச்சமற்ற அமைதி எங்கும் நிறைகிறது, மதினாவின் பசுஞ்சோலைகளிலிருந்து எழுந்துவரும் தென்றல் வீதிகளில் பரவுகிறது. பேரிச்சை மரங்களில் கனிந்த கனிகளின் மதன வாசனை வீடுகளில் நிறைகிறது.

எம்பெருமானார் தன் காதலி ஆயிஷாவை அணைத்துக் கொண்டு தாழ்ந்த தொனியில் பேசினார்கள்.

"ஆயிஷா! மனமென்னும் நஃப்ஸு எப்போதும் இதை செய் அதை செய்!, இங்கே செல் அங்கே செல்! என்று மனிதனை ஏவிக் கொண்டே இருக்கிறது. அலை பாயும இநத மனதை கட்டுப் படுத்துவதே திகர் தியான யோக முறையாகும்! எண்ணங்களை கட்டுப்படுத்தி அதை அல்லாஹ்வாகியப் பரம் பொருளிலேயே நிலை பெறச் செய்வது என்பதுதான் ஃபனா ஃபில்லாஹ் தன் தான் என்னும் தன்மையில் தெய்வீகம் ததும்பச் செய்வதாகும்!"

ஆனால் இது வீசும் காற்றை நிறுத்துவதை விட கடினமானதாகும். வெறும் கைகளை வீசி வேகப் புயலை நிறுத்த முயற்சிப்பது பைத்தியக்காரத் தனமல்லவா? தூர வானத்தில் தவழும் மேகங்களை தடுத்து அதன் பாதையைத் திருப்ப முடியுமா?

அழகு மயில் ஆயிஷா குழம்பினார்கள், அண்ணலோ மேலும் பேசினார்கள் "ஆயிஷா குழப்பம் வேண்டாம் நேரம் நெருங்குகிறது, என்னிடமிருந்து சில விஷயங்களை நீர் இப்போது அறிந்து கொள்ள வேண்டும்.

"அல்லாஹ்வாகிய இறைவனின் அடியான் அவனை அவனது (தாத் ஆகிய) பூரண பராபர நிலையயைத் தனக்குள் (ஹாஸில்) பழக்கமாக்க வேண்டும். இப்படிச் செய்தால் இறைவன் அடியானின் இதயத்தில் (வாசில்) நிறைவாகி விடுவான். இதற்கு இறை விசுவாசமென்ற தேட்டத்தை தன்மனதில் அதிகரிக்க வேண்டும்.

"இதுதான் இறை மார்க்கத்தின் முதல்படி, இது இர்ஃபான் என்னும் மெய்யறிவு (அவ்வலுத்தீனி மஹ்ரிபத்துல்லா) இரண்டாவது நிலை ஈமான் என்னும் நம்பிக்கை விசுவாசம், மூன்றாவது தான் இஸ்லாம் என்னும் சன்மார்க்கம்.

"இர்ஃபான் என்னும் மெய்யறிவு அல்லது மெய்ஞ்ஞானத்தின் தொடக்கம் (எகீன்) நிர்ணயங்களை கொண்டுள்ளது. இறைவனாகிய அல்லாஹ் அனைத்தையும் அறிய வல்லவன், இகபர அகபுற அகிலங்கள் அனைத்திலும் நிறைந்திருப்பவன் என்றும்,

"அவனுடைய வல்லமையைக் கொண்டு எது ஒன்றிலும் இயலாதவனல்ல, அவனுடைய வல்லமை (குத்ரத்) அவனது தத்துவம் (ஹிக்மத்) பரிபூரணமானது என்றும் உணர வேண்டும்."!

"நம்பிக்கை (ஈமான்) கொள்வது விதிப்பும் கடமையுமாகும், அதாவது எது ஒன்றையும் அவன் விரும்பினால் அதை நடத்தி விடுவான். அவன் விரும்பாவிட்டால் எது ஒன்றையும் அவன் தடுத்து நிறுத்திவிடுவான்.[1]

"அவனுக்கு ஜலாலியத் ஜமாலியத் ஆகிய இரண்டு குணங்கள் உண்டு, ஒன்று ஆவேசமும், ஒன்று சமாதானமும் ஆகும். அவன் விரும்பினால் ஒன்றை தன் அடியான் அறியச்செய்வான், அவன் விரும்பாவிட்டால் அடியான் அறிவதை தடுத்துவிடுவான்."

எல்லாவற்றையும் அமைதியுடன் செவி மடுத்தார்கள் ஆயிஷா(ரலி) பின்னர் வினவினார்கள், "தன்னை கொண்டு தன் நாயனை அறிவது எப்படி?" அதற்கும் அண்ணல் பதிலுரைத்தார்கள். "ஆம் லா நுஃபரிக் பய்ன அகதும் மின் ருஸ்லி-ஏகனாகிய இறைவனுக்கும் அவன் தூதராகிய இரசூலுக்கும் இடையே திரை கிடையாது" என்ற திருக்குர்ஆன் வாக்கியத்தை அறிவாய் தானே" என்றார்கள்.

அடுத்த சில நாட்களில் அண்ணலெம் பெருமானார்(ஸல்) காலமானார்கள். மதினா நகரெங்கும் அழுகுரலும் ஆர்ப்பரிப்பும் எழுந்தது. நகரின் எல்லையில் அமைந்த ஈச்ச மரச் சோலைகளில் சோகம் கப்பிக்கிடந்தது. நகர மக்கள் ஆண்களும் பெண்களும் ஓலமிட்டவாறு அண்ணலர் வாழ்ந்த பள்ளிவாசலின் பக்கத்து வீட்டுக்கு ஓடோடி வந்தனர். நேற்றுவரை விரைந்தோடிய வாதிகள் வரண்டு கிடந்தன. பறவைகளும், விலங்குகளும் ஆங்காங்கே படுத்து உறங்கின. ஒட்டகங்களும், குதிரைகள், கோவேறி கழுதைகளும் அழுதன.

அந்நேரம் மதினாவிலிருந்து வெளியூர் சென்றிருந்த தோழர் உமர் கத்தாப் சோக நிகழ்வை கேள்விப்பட்டு விரைந்தோடி வந்தார்கள். "பெருமான் நபி காலமாகி விட்டார்கள் என்று யாராவது கூறினால் சிரசை கொய்து விடுவேன்" என்று கூர்வாளை கையிலேந்தி கொண்டு குதித்தார்கள்.

---

*1.வ இன்னல்லாஹ அலா குல்லி ஷையின் கதீர் யத் அலுல்லாஹி மாஷா வலஹ்கும் மாயுரீது பிஇஜ்ஜத்தி -அல் குர்ஆன்.*



ஆயிஷாவின் தந்தையார் தோழர் அபுபக்கர் சித்திக்(ரலி) அவர்கள் ஹலரத் உமரை தடுத்து அமைதிப் படுத்தி கொண்டிருந்தார்கள்.

அந்நேரம் பெருமானார் (ஸல்) சடலம் குளிப்பாட்டி பள்ளி வாசலினுள்ளே கிடத்தப்பட்ட தருணம், பக்கவாட்டில் அமைந்த இல்லத்தின் உள்ளே தலை குனிந்து கண்ணீருகுத்த படி அமர்ந்திருந்த மூமீன்களின் தாய் ஆயிஷா (ரலி) ஒரு அதிசய அனுபவத்தைப் பெற்றார்கள்.

ஆம் ஆயிஷாவினுள் அண்ணல் பெருமானாரின் (ரூஹ்) ஆன்மா (ஹாளிர்) அரூபமாகத் தோன்றியது, ஆயிஷாவிடம் பெருமானாரின் அந்த புனித ஆன்மா பேசியது, "ஆயிஷா, ! "உங்களுக்குள் உங்கள் அல்லாஹ்வுடைய ரசூலாகிய தூதர் தோற்றரவாகியுள்ளதை நீங்கள் காணவில்லையா?" இந்த புனித ஃபுர்கான் வாக்கியத்தை நீர் விளங்காததென்ன? ஆயிஷா நான் உமக்குள் இருக்கின்றேன்"! என்று கூறிவிட்டு அண்ணலின் ரூஹ் மறைந்தது.

காலம் கடந்தோடியது!

ஆயிஷா தன்னுள் பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மாவை (ஹாளிர்) தோற்றரவாக்கி கொண்டு வாழ்ந்த நாட்களில் ஒரு அந்தி நேரம், புவியெங்கும் அமைதி நிலவுகிறது ஆயிஷாவின் வீட்டு வாசலில் பாலைவன மான்கள் ஓடி விளையாடுகின்றன. வானில் புறாக்களும் பருந்துகளும் விரைந்து இராப்பகல் தேடி பறக்கின்றன.

பரந்த பரிசுத்த வானத்தில் முழுமதி தோன்றியது அம்முழுமதியைச் சுற்றி மூன்று நட்சத்திரங்கள் தோன்றின.

தனக்குள்ளான ஞானத்தை தன்னில் தனது தலைவர் ஆன்மா ரூபமாய் நிலைத்திருப்பதை உலகுக்கு எப்படி உணர்த்துவது எப்போது என்று அவர்கள் எண்ணி கொண்டிருக்கும் போது,

நிலவைச் சுற்றியிருந்த இரண்டு நட்சத்திரங்களும் வால் நட்சத்திரங்களாய் மதினாவின் வடகிழக்காகவும் தென் கிழக்காகவும் சென்று நின்றன. மூமின்களின் தாய் ஆயிஷாவின் இதயத்தில் உள்ளொலி பிறந்தது அவர்களினுள்ளிருந்து பெருமானாரின் ஆன்மா எழுந்தமர்ந்து பேசியது,

“ஆயிஷா உமக்குள் பொதிந்திருக்கும் அற்புத ஞானம் இன்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு பிறகு, பலஸ்தீனத்திலுள்ள பாக்தாத் பஸ்ரா என்ற இரு பட்டணங்களில் வெளிப்படும்,

“உமது பேரர்களான ஹஸன்(ரலி) ஹுஸைன் (ரலி) ஆகிய இருவரின் வம்மிசத்தில் தோன்றி கௌதுல் அஃளமென்னும், சுல்தானுல் ஆரிஃபீனென்றும் இறைவனால் புகழப்படும் இரு இறை நேசர்களால் உலகுக்கு உணர்த்தப்படும்,

“முதல்வர் உமக்கு நாம் போதித்த இறைவனை நெருங்கும் மார்க்கத்தை வீராவேசமாகப் பேசி சத்திய தத்துவத்தை வெளிப்படுத்துவார். இரண்டாமவர் அந்த மெய்ப்பொருளான இறைவனை அறிந்து காதலிக்கும் ஞான மார்க்கம் இசை மொழியில் மௌனமாக போதிப்பர்.

“முன்னவர் மஹ்பூப் சுப்ஹானி, பரிசுத்தமானவர் என்றும், பின்னவர் மஹ்சூக்கு ரஹ்மானி பேரின்ப காதலி என்றும் போற்றப்படுவார்கள்.”

பெருமானாரின் ரூஹ் ஆகிய ஆன்மா நொடிப் பொழுதில் ஆயிஷாவின் மேனியில் படிந்து மறைந்தது.



*ஆதம் நபியைப் படைத்தவனே*
*ஹவ்வாவின் காதலில் இணைத்தவனே*
*சூது குணத்தன் இபுலீஸின்*
*சூட்சியால் அவர்களை கெடுத்தவனே!*
*ஈதே நீதி என அவர்கள்*
*இருவரையும் புவியில் எறிந்தவனே!*
*பேதை உன் பெருமை நானறியேன்*
*பித்தன் என்னை மன்னிப்பாய்!*
*-உமர்கய்யாம்*

## 3. அரஃபாத்தில் நிகழ்ந்த அற்புதம்

ஹிஜ்ரி ஐநூராம் ஆண்டு துல்ஹஜ் மாதம் ஒன்பதாம் பிறைநாள்,

இஹ்ராமின் தைக்காத வெள்ளை ஆடைகளை உடுத்தியவர்களாக பல்லாயிரக் கணக்கான மக்கள் திருமக்காவின் கிழக்கில் அரஃபாத் பெருவெளியை நிறைந்திருந்தனர்.

**இதோ வந்தேன் இறைவா*
*இதோ நான் வந்துவிட்டேன்*
*உன்முன் நான் வந்துவிட்டேன்*
*இறைவா உனக்கு இணையில்லை!*
*அருட் கொடையாளனே*
*ஐயமின்றி எல்லாப்புகழும் உனக்குரியது!*
*மேலாதிக்கம் உன்னுடையது*
*மேலானவனே உனக்கு துணையில்லை!*

அப்பெருவெளியில் ஒலித்த ‘தல்பியாவின்’ ஓசை ஜபலே ரஹ்மத் என்ற கருங்கல் மலை குன்றின் மீது மோதி எதிரொலித்தது,

அந்த பெருங்கூட்டத்தினிடையே தடுமாறி நுழைந்து, ஜபலே ரஹ்மத் மலை மீது ஏறமுயன்ற மனிதரை மக்கள் வினோதமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

**லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்*
*லப்பைக்க லாஷரீகலக லப்பைக்!*
*இன்னல் ஹம்த வநிஃமத்*
*லகவல் முல்க லாஷரீகலக்!*

அவர் மற்ற ஹாஜிகளைப் போல தல்பியாவை ஓதியபடி ஓடுகிறார், ஆனால் அவர் சிரசைசுற்றி ஒரு ஒளிவட்டம் அது பார்க்கும் மற்ற ஹாஜிகளை, ஆண்களையும், பெண்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

மெய்யாகவே அன்று வானம் மேக மூட்டமாய் காணப்பட்டது. ஆண்டு முழுதும் பகலில் வெய்யிலும், இரவில் பனிமூட்டமும் கவிழும் அந்த வரண்ட நிலப்பரப்பில் அதிசயமாக அன்று மழை மேக இருள் கவிழ்ந்திருந்தது.

மழைத்தூரலுக்கு பயந்த மக்கள் கூடாரங்களை நோக்கி ஓடி கொண்டிருந்த போது, அந்த அதிசய மனிதர் மட்டும் மலை மீது ஏறி கொண்டிருந்தார். ஏழு வண்ண வானவில் அவரது சிரசை சுற்றியும் இடுப்பைச்சுற்றியும் ஒளி வீசியது.

"அவர் யார்? அவர் யார்?" என்று மக்கள் உசாவிக் கொண்டிருந்த போது கூட்டத்தில் திடீரென மற்றொரு, ஹாஜி, கூக்குரலிடத் தொடங்கினார்.

"மலை மீது ஏறும் அவர்தான் அவர்தான் அபுல் ஹஸன் அலீ பதவி! அவர் உலகில் உயிர் வாழும் இறைநேசச் செல்வர்களில் ஒருவர். இந்த நன்னாளிலே, அவரை சந்தித்து ஆசிபெறுமாறு இறைவன் என்னிடம் கனவில் அறிவித்துள்ளான். நான் உம்முல் உபைதாவிலிருந்து பயணப்பட்டு அவரை தேடி வந்திருக்கிறேன். விலகுங்கள்!, வழிவிடுங்கள்!" என்று கூவிக் கொண்டு ஓடியவரைக் கண்டு ஹாஜிகள் மேலும் அதிர்ந்தார்கள்.

ஓடிய அந்த புதியவரோ ஜபலே ரஹ்மா மலையின் மீது முன் சென்றுவிட்ட ஹாஜியை சென்றடைந்தார். ஒரு கால் பாதத்தை மறுகாலின் முட்டில் ஏற்றி வைத்து ஒற்றை காலில் நின்றபடி தல்பியாவை ஓதிக் கொண்டிருக்கும் அவரை நெருங்கி ஆரத்தழுவி அவர் கைகளை முத்தமிடுகிறார்.

"இறை நேசச் செல்வரே! தங்கள் இதய தாபத்துக்கு, தங்களுக்கோர் நல்லடியார் மைந்தராகப் பிறக்க வேண்டுமென்ற வேட்கைக்கு, இறைவன் பதில் தந்து விட்டானே, தங்கள் சிரசையும் இடுப்பையும் சுற்றி சுழலும் வானவில் ஒளியை தாங்கள் பார்க்கா விடினும் அதோ அரஃபாத் பெருவெளியில் நின்றிருக்கும் ஆயிரக் கணக்கான மக்கள் பார்க்கிறார்களே"!

தன்னை தொடர்ந்து மலைமீது ஏறிவந்து புதுமையாகப் பேசும் மனிதரையும், மைதானிலிருந்த ஆண்பெண்களான ஹாஜிகள் தன்னை உற்றுப் பார்ப்பதையும் கவனித்துவிட்ட அபுல் ஹஸன் அலீ நாணமுற்று தன் மடங்கிய காலை நீட்டி தரை மீது இரு பாதங்களையும் பதித்து நின்றார்.



புதியவர் தொடர்ந்து பேசினார். "நானும் தங்கள் சொந்த நகரமான பதாயிகிலிருந்துதான் வருகிறேன், சில நாட்களின் முன் ஒரு நீண்ட கனவில் இறைவன் தங்களைப் பற்றியும், தங்கள் புருவ மத்தியில் குடியிருக்கும் பாலகரைப் பற்றியும் அறிவித்தான்.

"இறைவன் என்னை ஹஜ்ஜுக்கு புறப்படுமாறும், அரஃபாத் வெளியில் ஜபலே ரஹ்மத் குன்றின் மீது ஒற்றை காலில் நின்று கொண்டிருக்கும் உமதூரை சேர்ந்த அபுல் ஹஸன் அலீ என்ற நமது நேசரிடம் சென்று அவருடைய கோரிக்கை நம்முடைய சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது " என்று கூறுமாறும் பணித்தான்.

வானில் மேக மூட்டங்கள் விரைந்து விலகின. நீல வானம் நிர்மலமாகியது, சூரியன் பிரகாசமாகவும் கதகதப்பாகவும் ஒளி வீசத் தொடங்கியது. அதோ அந்த இருவரையும் நெருங்கி வரும் மூன்றாமவர் யார்?

அவர்கள் தான் மண்ணில் மரணமிலா பெருவாழ்வு வாழும் மாநபி கிலிறு அலைஹிஸ்ஸலாம்! அவர்கள், இப்போது அபுல் ஹஸன் அலீயின் சிரசை சுற்றி இருக்கும் வானவில்லை நோக்கி,

அஸ்ஸலாமு அலைக்கும் "யா சுல்தானுல் ஆரிஃபீன்!" என்று அழைக்கிறார்கள். அந்த வானவில்லிருந்தே பதில் ஸலாம் வருகிறது. அதிசயித்து நின்ற பதாயிகு வாசிகளிடம் நபி கிலிறு (அலை) தெளிவு படுத்தினார்கள்.

"ஆம் அபுல் ஹஸன் அலீயே! உமது கருவரையில் இறைவன் தன் நேசர்களில் உன்னதமானவரை, முஹம்மத் (ஸல்) அவர்கள் நபிமார்களின் தலைவராக இருப்பது போல், இறை நேசர்களான அவுலியாக்களின் தலைவராக இருப்பவரை அமைத்துள்ளான்.

"நீர் நாடு திரும்பியதும் உமது ஊரிலுள்ள பெரியார் அஷ்ஷெய்கு மன்சூர் ரிஃபாயி என்பாருடைய சகோதரி, ஷெய்கு அபுபக்கர் ரிஃபாயியின் மகளை மணமுடித்துக் கொள்ளும்"

என்று கூறிவிட்டு மறைந்தார்கள். அரஃபாத் மைதானில் கீழிறங்கி வந்து கொண்டிருந்த அருளாளர் அபுல் ஹஸன் அலீயை, ஹாஜிகள் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் கைகளிரண்டையும், இடம் பொருள் பாராமல் அவர்களின் பாதங்களையும் முத்தமிட்டு மகிழ்ந்தார்கள்.

*அங்கும் இங்கும் இழுத்து எனை*
*அடிக்கடி அலைய வைக்கின்றாய்*
*இங்கிருந்து என்னை எந்நேரம்*
*எங்கே இழுத்து விடுவாயோ*
*கங்குல் பகல் கருக்கல் இருள்*
*கால கடலில் தடுமாறி*
*முங்கும் என்னை காப்பதற்கு*
*முடுகி வருவாய் படைத்தவனே!*
*- ஸூஃபி உமர்கய்யாம்*

## 4.பாக்தாதும் பஸ்ராவும்

ஸையிதினா அபுல் ஹஸன் அலீ அவர்களும், அங்கு அரஃபாவில் சந்தித்த ஜாகிது அகுமத் அவர்களும் ஹஜ்ஜின் கிரியைகளை முடித்துக் கொண்டு ஒன்றாகவே ஒட்டகைகளில் பயணித்து பஸ்ராவை வந்தடைந்தார்கள்.

நபி கிலிறு (அலை) அவர்களின் உத்தரவின் படி அபுல் ஹஸன் அலீ அவர்களுக்கு ரிஃபாயா குடும்பத்தில் பெண் பேசும் பொறுப்பை ஜாகிர் அகுமத் அவர்களே ஏற்றுக் கொண்டார்.

பஸ்ரா என்னும் ஈராக்கின் துறைமுகம் பட்டினம் ஷத்தல் அல் அரப் என்ற ஆற்றின் கரையில் பாரசீக வளைகுடாவின் கழிமுகத்தில் அமைந்திருந்தது.

ஈராக்கின் இரு முக்கிய நதிகளான, திக்ரீஸூம், ஃபுராத்தும், ஈராக்கின் மத்தியப் பிரதேசத்தில், அல்குர்னா என்ற இடத்தில் சந்தித்து ஷத்தல் அல் அரப் என்ற நீரோட்டமாகப் புறப்படுகிறது.

இந்த நதியின் பாய்ச்சலால் அக்காலத்தில் பஸ்ரா பெருநகரத்தை உள்ளடக்கிய பஸ்ரா மாவட்டம் அகன்ற கால்வாய் பாதைகள் அமைந்த, பேரீச்சை காடுகள் அடர்ந்த நிலப் படுகையாக காட்சியளித்தது.

ஷத்தல் அல் அரப் நீரோட்டத்தின் கிழக்கு கரையில் ஈரானின் அபதான், கொரம் ஷாஹர் என்ற இரு நகரங்கள் அமைந்திருந்தன. பஸ்ரா நகரை இரண்டாகப் பிரித்து தெற்கில் விரையும் நதி எழுபது மைல் தூரம் அகலமாயும் ஆவேசமாயும் பாய்ந்து பாரசீக வளைகுடாவை சென்றடைகிறது.



ஈராக்கின் மற்ற நகரங்களை விட்டும் பாக்தாத்தும் பஸ்ராவும் கலைகளாலும், கலாச்சாரத்தாலும் முன்னேறியிருந்தன. அப்பாஸிகளின் ஆட்சியில் பஸ்ரா அறிவார்ந்த நகரமாக உருவாகியிருந்தது. கணிதவியல் மேதை இபுனுல் ஹைதம், இலக்கிய விற்பன்னர் அல் ஜாஹிர் புகழ்பெற்ற பெண் ஸூஃபி ஞானியரான ராபியா பஸ்ரி ஆகியோர் இந்நகரில் தோன்றியவர்களே.

கலிஃபா உமர்(ரலி) அவர்களின் காலத்தில் தான் அரபுகள் இங்கு குடியேறி பஸ்ராவை நகரமாக உருவாக்கினார்கள், என்று இந்நகரின் வரலாறு கூறுகிறது. மேலும் இந்நகரம் கீழை நாடுகளின் இஸ்லாமியப் படையெடுப்புகளுக்கு படைத்தளமாகவும் உருவாக்கப்பட்டது.

அல் பஸ்ரா என்ற சொல்லுக்கான அரபி மொழி பொருள் ‘மேலோட்ட நிர்வாகம்’ அல்லது ‘அனைத்தையும் பார்வையிடும் அதிகார பீடம்’ என்றும் பொருள்படும். ஆனால் பாரசீக மொழிக்கான அரும்பொருள் ‘பல பாதைகள் கூடுமிடம்’ என்பதாகும்.

ஹலரத் உமர் (ரலி) அவர்கள் காலத்தில் இந்நகர் உருவான போது அதன் முதல் ஆளுநராக அபுமூஸா அல் அஷரி நியமிக்கப்பட்டார். கலிஃபா உதுமான் (ரலி) அவர்களின் காலத்தில் அப்துல்லா இபுனு ஆமிர் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

ஹலரத் உமர் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட போது கிலாஃபத்தை ஏற்றுக் கொண்ட ஹலரத் அலீ(ரலி), உதுமான் இபுனு ஹனீஃபாவை ஆளுநராக்கினார்கள். கலிஃபாக்களின் ஆட்சியின் போது சாஸ்ஸனிடுகளின் மன்னாதி மன்னர் நம் யெஸ்தேகர் தோற்கடிக்கப்பட்டார். பாரசீகத்துடன் எல்லை வரையறை ஏற்படுத்தப்பட்டது.

ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டு, அதாவது கி.பி. 12ம் நூற்றாண்டு உலக வரலாற்றில் மத்திய காலம் என்பதில் சேர்கிறது. இது ஐரோப்பாவின் இருண்ட காலம் ஆனால் இசுலாமிய கலாச்சாரத்தின் ஒளிவீசும் பொற்காலம் என்று உணரப்பட்டிருக்கிறது.

அரபகத்தின் ஹிஜாஸ் மாகாணத்தில் இறை தூதர் முகம்மத்(ஸல்) அவர்களின் பிறப்பால் இஸ்லாம் என்கின்ற இறை மார்க்கம் உதயமாகியது என்றாலும் ஈராக்கின் தலைநகரம் பாக்தாதிலிருந்துதான் இஸ்லாமிய கலாச்சாரம் உருவாகி உன்னத நிலையை அடைந்தது.

இக்கால கட்டத்தில் அரபு மொழி உலகளாவிய அறிவியல், அரசியல் மொழியாக விரிவடைந்தது. ரெனய்ஸான்ஸ் என்று வரலாறு போற்றும் கலாச்சார மறுமலர்ச்சி ஐரோப்பாவில் தோன்றும் முன்னர் பாக்தாதில் தொடங்கியது. பாக்தாத், கெய்ரோ, கார்டோவா, தாலதோ, பஸ்ரா ஆகிய நகரங்கள் பிரசித்திப் பெற்ற நாகரீக நகரங்களாக விளங்கின.

பரந்த இஸ்லாமிய நிலப்பரப்பில் தோன்றிய பல்துறை அறிஞர்களின் எண்ணிக்கை அளவிட முடியாததாகும். அவர்களில், ஜாபிர் பின் ஹையான், அல் கிந்தி, அல் கார்ஜிமி, அல் ஃபர்கானி, அல்ராஜி, தாபித் பின் கர்றா, அல்பதௌனி, ஹுனைன் பின் இஷாக்,

அல் ஃபராபி, இபுறாஹிம் இபுனு ஸினான், அபுல் காஸிம், இபுனுல் ஜஸீர், அல் பைரூனி, இபுனு ஸினா, இபுனு யூனுஸ், அல்கர்ஹீ, இபுனு ஹைதம், அலீபின் ஈசா, அல் கஸ்ஸாலி, அல்ஸர்கலி, உமர்கய்யாம் போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

கிரேக்க மொழியிலிருந்து ஃபலாஸிஃபா என்ற மெய் விளக்க தத்துவ கலை நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. யூனானி மருத்துவக்கலை நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு மேலும் மருத்துவர்கள் அக்கலையினை அடிப்படையாகக் கொண்டு மருத்துவத்தை வளர்த்தார்கள்.

அறிவியல் கண்டுபிடிப்புகள் வாழ்க்கை வசதிகளை உயர்த்தின, வான ஆராய்ச்சி கூடங்கள் நிறுவப்பட்டன. சூரியனைப் பற்றியும் அதைச் சுற்றி சுழலும் கோள்களைப் பற்றியும் அவற்றின் சுழல் பாதை பற்றியும் கண்டறியப்பட்டது .

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரம் கண்டு பிடிக்கப்பட்டது. உஸ்தர்லப் என்ற வான ஆராய்ச்சி பூதக் கண்ணாடி உருவாக்கப்பட்டது. ஜோதிடமும் கணிதக் கலையும் வளர்ந்தது, ஆகாயத்தில் பறக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.



இசை கலை வளர்ந்தது. தாவர ஆராய்ச்சிகள், பறவைகள், விலங்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நில நூலறிவு வளர்ந்தது. அமெரிக்காவின் தரையில் முதன்முதலில் அடியெடுத்து வைத்தவர்கள் அரபு முஸ்லிம்களே என்ற தகவலும் ஆதாரமும் உண்டு.

இந்த கலாச்சார மறுமலர்ச்சி காலத்தின் உச்சத்தில் ஹிஜ்ரி 490ம் ஆண்டில் ஜீலான் நதிக்கரையில் நீஃப் என்ற சிற்றூரில் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் இருபதாண்டு பருவத்தினராய் பாக்தாதிலுள்ள நிஜாமியா கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது...

ஹிஜ்ரி 511ம் ஆண்டு ஒரு புனித நந்நாளில் ஷெய்கு அபுல் ஹஸன் அலீ மணவாளருக்கும், பஸ்ராவின் புகழ்மிகு ரிஃபாயா குடும்பத்தில் தோன்றிய மணவாளி ஆயிஷாவுக்கும் மைந்தராக அம்மாதின் கற்பத்தில் தரித்தார்கள் சுல்தான் ஆரிஃபீன் சையிது அஹ்மது கபீர் நாயகம் அவர்கள்.

*படைத்தவனே நீ கொடுத்த உடல்*
*பழுதாய்ப் போனது காலத்தால்*
*கிடைத்ததை இழந்து கிழடாகி*
*கிடக்கின்றேன் என்னை பார் தோழா!*
*அடிக்கடி உனது நினைவெழுந்து*
*அலைகிறதே மனம் என் செய்வேன்*
*கொடுப்பாயா உன் பேரின்ப*
*குடிப்பை அருந்தி எழுவேனா?*
*- ஸூஃபி உமர் கய்யாம்*

## 5.காதலின் பன்முகம்

ஆயிஷாவின் கருத்துள்ள பேச்சு கணவர் அபுல் ஹஸன் அலீயை அவ்வப்போது சிந்தனையில் ஆழ்த்தி அவரை அறிஞராகவும் ஆக்கிவிடும். அன்றும் அவ்வாறு அவர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்று கொண்டிருந்தது.

''அன்பரே என்னை மனைவியாக அடைந்து கொள்ளும்படி அரஃபாத்தில் ஜபலே நூர் குன்றின் மீது நின்று கொண்டு நபி கிலிறு அலைஹிஸ்ஸலாம் ஏவியதாக சொல்கிறீர்கள். ஆனால் பஸ்ராவின் கால்வாய்களில் படகில் பயணித்தப்படி என்னை எங்கள் மாளிகையின் ஜன்னலில் பார்த்து விட்டு, எங்கள் வீட்டு வாசலில் வந்து தயங்கி நின்றீர்கள்?

''முதல் பார்வையிலேயே என் கண்களை சந்தித்துவிட்டு காதலித்தது உண்மையா? அல்லது என் தந்தையாரின் பெயரையும் முகவரியையும் வைத்து கொண்டு என்னை தேடி வந்து அடைந்து கொண்டது உண்மையா? உமக்கு என் மீது காதல் உண்டாகி திருமணமாக நிகழ்ந்ததா? அல்லது நபி கிலிறுவின் ஏவலுக்காக என்னை திருமணம் முடித்து காதலில் விழுந்தீரா? ''

அன்னப்பேடு ஆயிஷாவின் கேள்விக்கு பதில் கூற முடியாமல் பரிதவித்த அபுல்ஹஸன் அலீ அமைதியாக ஆழ்ந்து சிந்தித்து விட்டு ''இரண்டும் ஒன்றாகத்தான் தோன்றுகிறது. அவன் தூண்டிவிட்டான் நான் காதலித்தேன், நான் காதலித்தேன் அவன் கை கொடுத்தான்.'' என்றார்.



பஞ்சணையில் படுத்திருந்த பருவமயில் ஆயிஷா குறும்பு சிரிப்பு சிரித்து விட்டு கூறினார், ''மன்திக் (தர்க்க சாத்திரம்) படித்தவரல்லவா, திறமையாகப் பேசுகிறீர்! சரி இது என்ன? '' என்று தன் அழகிய தொப்புளின் மீதான மெல்லிய வண்ண சல்லாவை அகற்றி விட்டு, சற்றே உப்பியிருந்த அடிவயிற்றை காட்டி, இது காதலின் ஆவேசமா? மண வாழ்க்கையின் மர்மமா?'' என்றார்.

பாக்தாதின் நிஜாமியா கல்லூரியில் ஐந்தாண்டுகள் பயின்று ஆலிம் என்று பட்டம் பெற்ற அபுல் ஹஸன் அலீ, ஆயிஷாவின் தர்க்க விளையாட்டை தவிர்த்துக் கொண்டு, ''உமக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கப்போவதாகவும், அவர் இறை நேசச் செல்வர்களில் உன்னதமானவரென்றும் அவர்களே, ஆம் நபி கிலிறு அவர்களே கூறினார்களே'' என்றார்கள்.

''ஆம்! எனக்கும் அது புரிகிறது, என் வயிற்றிலிருந்து ஒரு குழந்தையின் குரல் எனக்கு அடிக்கடி 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று ஸலாம் கூறுவதை அவதானிக்கிறேன். இந்த மகனை நான் நேசிக்கிறேன். ஆம் நான் அவரை காதலிக்கிறேன்.'' என்றார்கள்!.

''ஆயிஷா நீர் உமக்குப் பிறக்கப் போகும் மைந்தனை காதலிப்பதாக கூறுகிறீர்? அப்படியென்றால் 'முஹப்பத்' என்ற காதல் பன்முகம் கொண்டதா? பேசும் ஆயிஷா! உமது பேச்சை நான் நன்றாகவே ரசிக்கிறேன்!''.

ஷத்தல் அல் அரப் நீரோட்டத்தின் அகன்ற கால்வாய் ஒன்றின் கரையில் அமைந்த அரண்மனை போன்ற வீட்டின் மேல் தளத்தில் அமைந்த, பளிங்குகள் பதித்த சயன அறையின் சாளரத்தில் காலை தென்றல் புகுந்தது, சாளர கண்ணாடிகளின் மேல் உறை பனி படிந்திருந்தது.

ஆற்றின் அகல கால்வாய்களுக்கிடையே தீவு போல காட்சிளித்த பரந்த தோட்டத்தில் தேவதாரு மரங்களின் கிளைகளுக்கிடையே உயர்ந்து, வளர்ந்த பேரீச்சை மரங்களிலிருந்து கனிந்த பழங்களின் இன்சுவை காற்றில் கலந்திருந்தது.

காலை வெய்யில் பளிச்சென்று வீசியது. வெய்யிலின் வெப்பம் பனியின் குளிரை மாற்றப் போராடிக் கொண்டிருந்தது. பட்சி ஜாலங்களின் கூக்குரலுக்கிடையே கால்வாய்களில் மிதந்த படகுகளில் எழுந்த பயணிகளின் கூச்சல்கள் தொலை தூர சங்கீதமாக தோன்றியது.

சிறிது நேரம் சிந்தனை வயப்பட்ட ஆயிஷா கணவரிடம் இப்போது கனிவுடன் பேச ஆரம்பித்தார்.

"ஆம்! அன்பரே,முஹப்பத் என்னும் காதல் பன்முகம் கொண்டதுதான். தாய்க்கும் மகவுக்கும் இடையே அது பாசம், யுவனுக்கும் யுவதிக்கும் இடையே சிற்றின்ப காமம், இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் இடையிலோ அது பேரின்ப தாபம்.

"இதயத்தின் இந்த உணர்வு இந்த மூன்று நிலைகளிலும் 'முஹப்பத்' என்னும் காதல்தான். காதல் தன்னை மட்டுமே தருகிறது. தன்னை மட்டுமே அடைந்து கொள்கிறது. அது எதையும் அடைய முயல்வதில்லை. தன்னை மட்டுமே அடைய முயல்கிறது. காதலே காதலுக்கு போதுமானது.

"காதல் தன்னை மட்டுமே நிறைவு செய்து கொள்ள விரும்புகிறது. ஆனால் நீ காதலிப்பாயேயானால், காதலால் சில ஆசைகளையும் நீ வளர்த்து கொண்டிருப்பாயேயானால்,

"நீ நள்ளிரவின் இருளில் பாடி கொண்டு பாய்ந்தோடும் நீரருவியாக மாறிவிடு, உன் மனதின் சோகத்தை பாடியபடி விரைந்தோடு, "தன்னை காதலுக்காக அர்ப்பணிக்கும் வருத்தத்தை நீ உணர்வதற்காக காயப்படும் காதலின் வேதனையை அறிவதற்காக,

"சிறகு விரித்துப் பறக்கும் காலை விடியலில் காதலின் வானத்தில் மீண்டும் பறப்பதற்காக

"அந்தி மாலையில் காதலால் அலுத்து நன்றி கூறி முடங்குவதற்காக,

"இரவின் இருளில் உன் இதயத்திலுள்ள காதலனுக்காக உன் உதடுகளில் ஒரு வேண்டுதலை இசையோடு உச்சரித்தபடி நீ உறங்கி சமாதானம் கொள்வதற்காக"!

"ஆயிஷா! பாடியது போதும். உமது காதல் கருத்தோட்டம் கவிதையாக மாறிவிட்டது, எனக்கு இப்போது 'தெய்வீக காதல் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்". என்றார் அபுல் ஹஸன் அலீ.

ஆயிஷா சிரித்தார்கள் பிறகு கூறினார்கள், "அப்படி எதுவும் கிடையாது, மனிதர்களின் காதல், காதலிக்கும் ஒரு உருவத்தின் மீது அதிலிருந்து கிடைக்கும் இன்பத்தின் மீது மையம் கொண்டிருக்கிறது. அது துளிரும், வளரும், துவண்டுவிடும் அதை தெயவீகம் என்றெல்லாம் பேசுவது தவறு!



"ஆனால் தெய்வத்தின் மீது, பரம்பொருளின் மீது இறைவனின் மீது, மனிதகுலத்திலிருந்து ஒருஆணின் அல்லது பெண்ணின் உள்ளத்தில் தோன்றும் பேரின்ப காதலிருக்கிறதே, அது முடிவற்றது எல்லையற்றது, அதன் முடிவில் தான் காதல் தன்னையே அடைந்து தன்னிலேயே நிறைவு பெறுகிறது."

ஆயிஷாவின் அற்புத சொற்பொழிவை கேட்டு நிமிர்ந்து அமர்ந்தார்கள் அபுல் ஹஸன் அலீ. நூறாண்டுகளுக்கு முன்பு அதே பஸ்ராவின் வனப்பகுதியில் ஒரு மாளிகையில் வேலைக்காரியாகப் பணியாற்றி பின்னர் பரமனின் பாதையில் பக்தை சிரோமணியாக பெண் ஸூஃபி ஞானியாக வாழ்ந்து புகழ்பெற்ற ராபியா பஸ்ரி என்ற மாதரசி இப்போது அவர் கண்முன் தோன்றினார்.

ராபியா பஸ்ரியாவை தன் மனைவியிடம் அவர் பார்த்தார். ஆயிஷாவிடம் மீண்டும் ஒரு கேள்வியை முன் வைத்தார் அவர், "அப்படியானால் ஆயிஷா சிற்றின்பத்துக்கும் பேரின்பத்துக்கும் இடையே என்னதான் வேறுபாடு?"

ஆயிஷா கூறினார் "சொர்க்கத்தின் பேரின்பம் உலகத்தில் சிற்றின்பத்தை விட நூறு மடங்கானது என்று நபி பிரான் (ஸல்) கூறியிருக்கிறார்கள்! இது குவளை நிறைந்த பால், அது கடலளவு பாலமுதம்".

"ஆயிஷா ராபியா பஸ்ரியாவைப் போலவே பேசுகிறீர். ராபியா பஸ்ரி குவளைப் பாலை குடித்தாரா இல்லையா?"

ஆர்ப்பாட்டமாக சிரித்தார்கள் ஆயிஷா, "ஒரு கடலளவு பாலமுதம் கைவசமாகிவிட்டவர் ஒரு குவளைப் பாலை குடித்தால் என்ன குடிக்காவிட்டால் என்ன?" அபுல் ஹஸன் அலீ அமைதியானார்.

அந்த அமைதியான சூழ்நிலையில் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஒரு மழலைக் குரல் ஒலித்தது. தம்பதிகள் அங்குமிங்கும் பார்த்து அதிசயித்தார்கள். மீண்டும் "அஸ்ஸலாமுஅலைக்கும்", என்று குரல் கேட்டது. இப்போது ஆயிஷாவின் வயிற்றிலிருந்து வருகிறது என்பது அவர்களுக்கு புலனாகிறது.

ஆயிஷாவின் அடி வயிற்றிலிருந்து மழலையின் பேச்சு தொடர்ந்தது, "தந்தையே என் தாயாரின் அடிவயிரான என் தற்போதைய இருப்பிடத்தை சுட்டி காட்டி இது என்ன? என்று தர்க்கித்தீர்களே, உங்கள் இருவருக்கும் இப்போது நான் பதில் சொல்லவா? என் தாயின்,ஆம் உங்கள் காதல் மனைவியின் உப்புதலான அடிவயிறு பேரின்பத்தின் குடியிருப்பு!

"ஆம் உங்கள் இருவருக்கும் இடையில் நான் சிற்றின்பத்தின் தோற்றம். ஆனால் எனக்கும் என் இறைவனுக்கும் இடையில் நான் பேரின்பத்தின் உற்பவம். அவன் என்னை நாடுகிறான். நான் அவனை நாடியவனாக பூமிக்கு வரப் போகிறேன், என் பெயர் ஸுல்தானுல் ஆரிஃபீன் அஹ்மத் கபீர் ரிஃபாயி.

தம்பதிகள் இருவரும் மலர்ப்படுக்கையில் அதிர்ந்து அலமலர்ந்து அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அறையைச் சுற்றி சிறிது நேரம் எழுந்த தஃப் என்னும் கொட்டோசையை அது எங்கிருந்து வருகிறதென்று அவர்களால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

---

குறிப்பு :- "நான் நான்கு மனைவிகளை மணந்தேன். நாற்பத்தொன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்தேன், ஆயினும் உங்களுடைய சிற்றின்பத்தைப் பற்றி தெரியாது , நான் பேரின்பத்திலேயே வாழ்கிறேன்". -முஹ்யித்தீன் ஆண்டகை -ஃபுதுகுல் ஃகைப்.



*எத்தனை எத்தனை மனிதர்கள்*
*எண்ணிக்கையில்லா விலங்குகள்*
*புத்தம் புதுமலர் கூட்டங்கள்*
*புலரும் முன் பறக்கும் பறவைகள்*
*அத்தனையும் உயிர்கள் ஆனால் உனை*
*அடையாளம் காட்ட எவருமில்லை*
*கர்த்தனே நீயும் கற்பனையா?*
*கண்முன் வந்து நிற்பாயா?*
*- ஸூஃபி உமர் கய்யாம்*

## 6.உலகம் அறியாத ஒரு உண்மை

ஹிஜ்ரி 500ம் வருடம் ரஜப் மாதம் பிறை 27 அன்று திங்கள் கிழமை அதிகாலையில் சுல்தானுல் ஆரிஃபீன் இப்புவியின் மீது அவதரித்தார்கள்.

பஸ்ரா நகரில் ரிஃபாயா குடும்பத்தினரின் மாளிகை ஒன்றில் மங்கைநல்லார் ஆயிஷாவின் மைந்தனாக அவர்கள் அவதரித்த போது முஸ்தஸ்ஹிர் பில்லா பாக்தாதில் அப்பாஸி கலிஃபாவாக வீற்றிருந்தார்.

முஸ்தஸ்ஹிர்பில்லாவின் ஆட்சி காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் மாபெரும் சம்பவங்கள் நிகழ்ந்தன. இஸ்லாமியப் புவிப்பரப்பில் கீழை பிரதேசத்தில் பாத்தினி கொள்கையாளர் கூட்டம் தலை தூக்கியது.

பாத்தினிகள் திருமறையின் ஒவ்வொரு வசனத்துக்கும் உட்பொருள் கற்பிக்க முயன்றார்கள். அஸரியா, முதாஸியா கொள்கைவாதிகளோ மறை வசனங்களை பகுத்தறிவால் அளக்க முயன்றார்கள். பஸ்ராவில் தோன்றிய இக்வானுஸ்ஸபா இரகசிய அரபு இயக்கத்தினர் வான சாஸ்திரம், ஜோதிடம் மற்றும் கிரேக்க தத்துவங்களின் அடிப்படையில் மார்க்கத்தை பரிசுத்தப்படுத்துவதாக கூறினார்கள்.

மேற்குப் பகுதியிலோ சிலுவைப் போர் ஆரம்பமாகியது. மிஸ்ர் (எகிப்து) நாட்டின் பாத்திமீய கிலாஃபத் பீடம் பாத்தினி கொள்கையாளர்களுக்கு ஆதரவு தந்து அப்பாஸிய கிலாஃபத்தை தகர்க்க முனைந்தது.

பைத்துல் முகத்தஸ், அந்தாக்கியா, ரிஹா போன்ற பிரதேசங்கள் கிறிஸ்துவர்களின் கைவசமாகிவிட்டது. முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இடையே யுத்தம் நடைபெற்று கொண்டிருந்தது.

எல்லைகளில் மதப் போர்களாலும் உள் நாட்டில் தவறான கொள்கைவாதிகளாலும் இஸ்லாம் சீர்குலைந்து, முஸ்லிம்கள் நிம்மதியின்றி வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அன்று மாலை அசரின் தொழுகைக்குப் பின்னர் குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரிஃபாயா மாளிகையில் பட்டுக் கம்பளங்கள் விரிக்கப்பட்டு நகரின் முக்கியஸ்தர்கள் பலர் வந்தமர்ந்திருந்தனர்.

தாய்வழி பாட்டனார் ஷெய்கு அபுபக்கர் அவர்களின் மடியில் குழந்தை படுத்திருந்தது. ஜாமிவுல் அஸ்கர் பள்ளி வாசலின் இமாம் பாங்கு ஓதி பாலரின் இரு காதுகளிலும் ஊதி, " என்ன பெயர் வைக்க வேண்டும்? " என்று குடும்பத்தினரை உசாவினார்.

பெரியார் அபுபக்கர் ரிஃபாயி தன் மைந்தர் மன்சூர் ரிஃபாயி அவர்களையும், சம்பந்தர் ஷெய்கு எஹ்யா (ரலி) அவர்களையும் கண்களால் கேள்விக் குறியோடு பார்த்தார்கள். ஆனால் அவர்களில் எவரும் பேச முன் வாராத போது. அபுபக்கர் ஹஸன் அலீ அவர்கள், அரஃபாத்தில் சந்தித்த பெரியார் மகான் ஜாஹிர் அஃகுமத் "நான் பேசலாமா?"என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு,

ஜமாத்தினற்கு ஸலாம் கூறிவிட்டு கூறினார், "இந்த பாலகருக்கு 'அஃகுமத் கபீர் ' என்பதாக பெயர் சூட்டப்பட வேண்டும். "இந்த இறை நேசச் செல்வரின் பெயர் மற்றும் இவர் பற்றிய விவரங்களை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இறைவன் எனக்கு ஒரு அற்புதக் கனவில் அறிவித்துவிட்டான்".

ஷெய்கு ஜாஹிர் அஃகுமதின் விசித்திரமான பேச்சை கூடியிருந்த உற்றார் உறவினர், ஊராரும் அதிசயமாக கவனித்து கொண்டிருக்க அவர் தொடர்ந்து பேசினார். பஸ்ரா பட்டினத்தில் அவர் மக்களால் அறியப்பட்ட ஸூஃபியாகவும் ஷெய்காகவும், 'கன்ஜுல் ஆரிஃபீன்' மெய்ஞ்ஞானிகளின் பொக்கிஷம் என்று புகழப்பட்டவராகவும் இருந்ததால் அவருடைய பேச்சில் யாருமே குறுக்கிட விரும்பவில்லை.



அவர் கூறினார்:-

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அதிகாலைப் பொழுதில் தொழுகைக்குப் பிறகு நான் சுஹுத் தியானத்தில் அமர்ந்தேன். அடுத்த கணம் அதிரடியாக என் உடலை விட்டு பிரிந்து சூக்கும உடலோடு ஆலமே மலக்கூத் என்ற ஆன்ம உலகில் புகுந்தேன்.

"அந்த ரூயா என்னும் நினைவுக்கும் கனவுக்குமான நடுநிலை காட்சியில் சொர்க்கத்தின் கடைவீதியில் நான் நடந்து சென்றேன். அங்கு படைத்தவனின் அருள்,ரஹ்மத் எனும் பொருட்கள் விற்கப்படும் கடைகள் திறந்து கிடக்கின்றன.

"அப்போது வானில் ஒரு ஒளிப்பிரவாகம் அதை தொடர்ந்து ஒரு பேச்சொலி, "குற்றமற்ற இறை நேசச் செல்வர்களே எனக்க உவப்பானவர்களே! உங்கள் விருப்பமான விஷயங்களை என் கடைகளிலிருந்து அள்ளி கொள்ளுங்கள் " என்று அசரீரியாக ஒலிக்கிறது.

"அப்போது நான், 'இறைவா எனக்கு ஒரு விளக்கம் மட்டும் உன்னிடமிருந்து தேவைப்படுகிறது. தற்காலம் உயிரோடிருக்கும் உனது ஒலிமார்களில் மஹ்பூபல் அஃளம் அலீ இபுனு ஹைத்தி (ரலி) அவர்களும், தாஜுல் ஆரிஃபீன் அபுல் வபா (ரலி) அவர்களும் பேரும் புகழும் பெற்று விளங்குகின்றனர். இறைவா ! இவ்விருவரில் உயர்ந்தவர் யார்?'

"இவ்வாறு நான் உசாவிய நேரத்தில் அடுத்த கணம், வானில் தெய்வீக அசரீரி ஒலித்தது:-

"எனது ஹபீபும் ஆஷிக்குமான (நேசரும் காதலருமான) ஓர் ஆடவர் இக்கடை வீதி வழியாக வரவிருக்கிறார். எனது பராபரவஸ்துவாகிய 'தாத்' தில் இருந்து எனது குணப்பாடுகளாகிய 'சிஃபத்து' கள் உதயமான காலத்தின் மீது ஆணையாக,

"ஒளிப்பல்லக்கில் அமர்ந்தவராக உங்களிடையே வந்து கொண்டிருக்கும் அவர் எனது ஹபீபு(நேசன்)! நான் அவரது ஹபூபு(நேசன்) அவர் பாதையில் தடையின்றி அனைவரும் ஒதுங்கி நில்லுங்கள்!" .

வானரதம் ஒன்று ஞானபூமியில் இறங்கி வந்தது. அதில் அமர்ந்திருந்த ஜோதிமயமான வாலிபரை நோக்கி கடைத் தெருவின் இரு புறமும் நின்றிருந்த இறைநேசச் செல்வர்கள் சப்தமாக ஸலாம் கூறுகிறார்கள்.

"வ அலைக்கும் ஸலாம்! யா அவுலியா அல்லாஹ்! (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். பராபரனின் நேசர்களே)! என்று அவ்விளைஞர் பதில் ஸலாம் கூறி பார்வையை உயர்த்தாமலே தலை குனிந்து கொள்கிறார்.

"அந்த ஒளிப்பல்லக்கு விரைந்து செல்கிறது, கூடியிருந்த இறை நேசர்கள் தஸ்பீஹூம், தஹ்மீதும், தக்பீரும் எழுப்பி இறைவனை புகழ்கிறார்கள்.

*"சுப்ஹானல்லாஹ்*
*(பராபரனே! நீ பரிசுத்தன்)*

*அல்ஹம்துலில்லாஹ்*
*(உனக்கே புகழனைத்தும்)*
*அல்லாஹூ அக்பர்*
*(நீயே மகாபெரியவன்)"*

என்ற கோஷத்துக்கிடையே ,

"தெய்வீக அசரீரி மீண்டும் ஒலித்தது. அவ்வாலிபருக்கு நாம் சூடும் நாமம் 'அஹ்மத் கபீர்' அவர், பஸ்ராவைச் சேர்ந்த ஷெய்கு அபுல் ஹஸன் அலீ என்பவருக்கும், அதே நகரில் வாழும் ரிஃபாயா குடும்பத்தைச் சேர்ந்த செல்வி ஆயிஷாவுக்கும் மைந்தராகப் பிறப்பார்!. என்று அசரீரி தொடர்ந்தது..

"நேசரே ஜாஃகிர் அஹ்மதே! அபுல் ஹஸன் அலீ இவ்வாண்டு ஹஜ்ஜு செய்ய புறப்பட்டு சென்றுள்ளார். நீர் அவரை தொடர்ந்து சென்று அரஃபாவில் அவரை சந்தித்து நமது அறிவிப்பை எடுத்து கூறும்".

"ரூயா என்னும் சூக்கும மெய்க்காட்சி கலைந்ததும் நான் திடுக்கிட்டு விழித்தெழுந்தேன். இப்போது, ஜமாத்தினரான உங்கள் முன் இந்த மெய் காட்சியை எடுத்து வைப்பது என்மீது கடைமை" என்றார்.

"நாரே தக்பீர்! அல்லாஹூ அக்பர்"! என்று மன்றத்தில் கூடியிருந்தோர் குரலெழுப்பினார்கள்.

ஷெய்கு அபுபக்கர் (ரலி) யின் மடியில் படுத்திருந்த பாலகரின் உதட்டில் தேனில் துவைத்த பேரீச்சங்கனியை ஆலிம் சாஹிப் ஊட்ட முயன்ற போது அந்த இளம் சிசு தன் உதடுகளை இறுக்கி மூடிக்கொண்டது.



கூட்டத்தில் இறுக்கம் நிலவியது, இந்த சிசு ஏன் இப்படி அமுதத்தை மறுக்கிறது, என்று அங்கு குழுமியிருந்த ஆண்களும்,பெண்களும் அலமலர்ந்து கவலையுடன் அமர்ந்திருந்த போது,

அந்த மாளிகையின் வாசலில் வனாந்தரத்தில் உலவும் சிம்மம் போன்று, பார்க்கவே நடுங்க வைக்கும் ஆஜானுபாகுவான முப்பது வயது வாலிபர் ஒருவர் வந்து நின்றார். மலை வரை போன்ற அவர் தோள்களும், பௌர்ணமி நிலா போன்ற அவரது முகமும், அச்சத்துடன் பக்தியையும் கூடியிருந்தோரிடம் உண்டாக்கியது.

"அஸ்ஸலாமு அலைக்கும்" என்று கூறியவராக அவர் மன்றத்தில் வந்து நுழைந்தார். அவரை பார்த்ததும் மரியாதையுடன் பலர் எழுந்து நிற்க முயன்றனர். அவர் அனைவரையும் கையமர்த்திவிட்டு ஷெய்கு அபுபக்கரும், ஆலிம் சாஹிபும் அமர்ந்திருந்த இடத்துக்கு சென்றார்.

பாட்டனார் மடியில் படுத்தபடி தன்னை பரபரப்போடு பார்த்து கொண்டிருக்கும் பாலகரின் அருகில் நெருங்கி, அங்கிருந்த வெள்ளிக் கிண்ணத்திலிருந்து பேரீச்சங்கனியொன்றை எடுத்து மற்றொரு கிண்ணத்திலிருந்த தேனில் நனைத்து அந்த பாலகரின் உதட்டில், பிஸ்மில்லாஹ் என்று உச்சரித்து "சுல்தானுல் ஆரிஃபீனே! அஹமத் கபீரே! உண்ணும்"என்று உத்தரவிட்டார்.

அந்த இளம் சிசு இப்போது பேரீச்சங்கனியை நாவசைத்து சுவைக்கத் தொடங்கியது. 'அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹூ அக்பர்!' என்று கூட்டத்தினரின் குரல் எழுந்து ஓயும் முன் அந்த வனசிங்கம் அங்கிருந்து மறைந்து போய்விட்டது.

"அவர் யார்? அவர் யார்?", என்றுஅங்கு ஜமாத்தினர் விடை காண முடியாமல் தவித்த போது ஷெய்கு ஜாஹிர் அஹ்மதும் வேறு சில ஊராரும் "அவர் அப்துல் காதிர்! சமீப காலமாக கிர்க்காட்டில் கிஸ்ரா கோட்டையில் கடும் தவம் மேற்கொண்டு திரியும் மஜ்தூப் இறைகாதலர்!" என்று சம்சமயமாகப் பேசி கொண்டனர்.

பாலகர் அஹ்மது கபீர் ஜமாத்து கூட்டத்தினரிடமிருந்து தாய்மாமன் ஆகிய இளைஞர் மன்சூர் ரிஃபாயியின் கைகளால் தூக்கப்பட்டு, திரைக்கு அப்பால் ஊர் உறவு பெண்களின் நடுவே அமர்ந்திருந்த மாதரசி ஆயிஷாவின் மடியில் கிடத்தப்பட்ட போது,

அன்று பிறந்த அக்குழந்தை தன் உதடுகளை அசைத்து "யா முஹ்யித்தீன்!" என்று மழலை மொழிந்தது. அருகிலிருந்த பெண்கள் அதிசயித்து குழந்தையை உற்று கவனித்த போது அப்பாலகர் மீண்டும் மும்முறை "யா முஹ்யித்தீன்! யா முஹ்யித்தீன்! யா முஹ்யித்தீன்!" என்று உச்சரித்ததை கேட்டனர்.

வந்த வனராஜரின் பெயர் 'முஹ்யித்தீன்!' என்று பாலகர் அஹ்மத் கபீர் கூறுகிறார். என்று யாரோ ஒருவர் கூட்டத்தில் கூச்சலிடவே மன்றத்தின் வாசலிலும் தெருவிலும் நின்று கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் மெய் சிலிர்த்தனர்.

நாயகம் சுல்தானுல் ஆரிஃபீனுக்கு பெயர் சூட்டியவர்கள் எஜமான் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) என்பதையும், ஹலரத் அப்துல் காதிர் ஜீலானி அவர்களை முதன் முதலாக 'முஹ்யித்தீன்' என்று புகழ்ந்து உச்சரித்தது அஹ்மது கபீர் ரிஃபாயி நாயகம் என்பதையும், இன்று வரையிலும் இந்த உலகம் அறியவே இல்லை!

*அல்மதத் யா முஹ்யித்தீன்!*
*அல்மதத் யா அகமத் கபீர்!*



*குருவாம் அவர் உன் தெய்வமா*
*குருவின் இல்லம் கோயிலடா*
*சரியை கிரியை யோகமெல்லாம்*
*சற்குருவின் சொல் வண்ணமோ*
*உருவாம் அவரை உருவில்லான்*
*உருவாய் கண்டு நீ தொழவே*
*பரிவாய் உன்னை பராபரனும்*
*பக்தா வாவென்று அழைத்திடுவான்*

## 7. ஹுஸைன் (ரலி)யின் வாரிசு

இருண்ட வானத்தின் தென் கிழக்கு மூலையிலிருந்து குமுறல் ஒலி எழுந்தது. அவ்வப்போது மின்னல் கொடி வானத்திரையில் பளிச்சிட்டது. யானைக் கூட்டம் போன்ற கார்முகில்கள் வானில் அங்குமிங்கும் அலைந்தன.

திடீர் திடீர் என்று வீசிய சூறைக்காற்று உயர மரங்களை உலுக்கி சுழற்றி இலைகளை முறித்துக் கொண்டிருந்தது. பஸ்ராவின் மழைக்கால பருவத்தில் சகஜமான காட்சிகள் என்றாலும், அன்று மக்கள் மனங்களில் நிம்மதியற்ற நிலை குடிகொண்டிருந்தது.

அதிகாலையிலிருந்தே ரிஃபாயா மாளிகை வாசலில் நகரின் பல்வேறு பகுதிளிலுமிருந்து முக்கியஸ்தர்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். பஸ்ராவின் பகுதியான வாஸிதி வட்டத்தின் ஹசன் நகரில் அமைந்த அந்த மாளிகை அரண்மனை போல் விரிந்து அதன் வாசல் அரசவை போல் காட்சியளித்தது.

நூற்றுக் கணக்கில் குடியிருந்த மனிதர்களின் முகத்தில் வேதனை படர்ந்திருந்தது. பல்வேறு திசைகளிலிருந்தும் வந்து கொண்டிருந்த 'பிளேக்' நோயைப் பற்றிய செய்திகள் மேலும் மேலும் அந்த மன்றத்தில் அதிர்ச்சியை உண்டாக்கியது.

குர்திஸ்தானிலிருந்து புறப்பட்ட இந்த ஆட்கொல்லி நோய் ஈராக்கின் மலைக் குன்றுகளைத் தாண்டி, மோஸுல், அர்பில், பாக்தாத், அல்ஹிலா, அல்குர்னா நகரங்களிலும் அசுரனைப் போல் புகுந்து ஆயிரக் கணக்கான மக்களை கொன்று குவித்துவிட்டு இப்போது பஸ்ராவிலும் காலை வைத்துவிட்டது.

செத்துவிழும் எலிகளின் துர் நாற்றத்தில் தொடங்கி அதிவேக சுரம், வயிற்றுப்போக்கு என்று ஆரம்பித்து எந்த மருத்துவத்துக்கும் கட்டுப்படாத அந்த கொடிய நோய்க்கு வயது வித்தியாசமின்றி மக்கள் மரணித்துக் கொண்டிருந்தார்கள்.

எனவே தான் அரண்மனை போன்ற ரிஃப்பாயா மாளிகையின் அகன்ற வாசலில் பொது பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டு அஷ்ஷெய்கு அபுபக்கர் (ரலி) அஷ்ஷெய்கு எஹ்யா(ரலி) மற்றும் நகரின் ஆலிம்கள் உலமாக்களின் முன்னிலையில் ஷெய்கு மன்சூர்(ரலி) அவர்கள் தெய்வீக திக்ரு திருநாம ராத்தீபை உச்சரித்து ஓத, கூடியிருந்தவர்களின் திக்ரோசை வானம் வரை எழுந்து மோதியது.

ஷத்தல் அல் அரபு பேராற்றின் கழிமுகப் பகுதியில் அமைந்த பஸ்ரா மாவட்டம் சதுப்புநில காடாகவே அந்நாளில் காணப்பட்டது. பேரீச்சை மரங்களும் தேவதாரு மரங்களும், வனத்தின் பல்வேறு இன மரங்களும் அடர்ந்த கால்வாய்களும் நீர்ப் பாதைகளும் அப்பகுதி மழை காலத்தில் ஈரம் மாறாத சதுப்பு நிலமாகவே காட்சியளித்தது.

ஈரடிப்பான சதுப்பு நிலங்களையே தனது வேட்டைக்களமாக மாற்றிக் கொள்ளும் ‘பிளேக்’ நோய் அந்த ஆண்டில் ஆவேசப் பேய் போல நாட்டையும் நகரங்களையும் ஆட்டிப் படைத்து கொண்டிருந்தது.

காடுகளில் வாழும் காட்டெருமைகள் போன்ற வன விலங்கினங்களும், அப்பகுதியின் கானக மரங்களில் குடியிருக்கும் தேனி உண்ணி, பஞ்ச வண்ண மீன் கொத்தி, மீனுண்ணி, ஐகானா பறவைகள் ஆகிய உயிரினங்களும் மனிதர்களின் அவலக் குரலை கேட்டு அஞ்சி நடுங்கின.

ரிஃப்பாயா மாளிகையின் வாசலில் நடந்த திக்ரு தியான மஜ்லீஸின் ஓசை உச்சத்தை எட்டியபோது அதிசய நிகழ்வு ஒன்று அங்கு நிகழ்ந்தது. மாளிகையின் தெருவாசல் கதவுகளை நீக்கி கொண்டு ஐந்து வயது பாலகரான அஃகுமத் கபீர் வெளியில் வந்தார். அவர் கையில், பாதுகாத்து வீட்டில் புராதன பொக்கிஷமாக வைக்கப்பட்டிருந்த இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் நீண்ட வாள் காணப்பட்டது.



அந்த கனத்த வாளை அந்த பாலகர் எப்படி தூக்குகிறார் என்று கூடியிருந்தவர்கள் குழம்பிய போதும், அந்த பாலகர் அநாயாசமாக ஷெய்குமார்கள், ஆலிம் உலமாக்கள் அமர்ந்திருந்த முன் வரிசையில் வந்து நின்றார், வாளின் கைப்பிடியை முகத்துக்கு முன் வைத்துக் கொண்டு அதன் கூர் முனையை தரையின் மீது ஊன்றினார்.

பாலகர் அஃகுமத் கபீரின் பாட்டன்மார் இருவரும், நெருங்கிய உறவினர்களும் பதை பதைத்தார்கள். இந்த சிறுவர் எப்படி இந்த வாளை தேடி கண்டு பிடித்தார்?. அதை கையில் ஏந்தியபடி ஏன் இங்கு வந்து நிற்கிறார்கள்?...

அந்த வீர வாளின் வரலாறு கர்பலா கொலை களம், எஜீதின் வஞ்ச நெஞ்சம் கொண்ட படைத்தளபதிகள், எதிரிகளை நோக்கி ஸையிதினா ஹுஸைன் (ரலி) அவர்கள் இந்த வீரவாளை ஏந்தி மதிப்புடன் விரைந்து சென்ற காட்சி...

அந்த வீர ஆவேசத்தின் பின்னணியிலே ஒரு வரலாற்று காட்சி...

அது எம்மான் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அந்திக் காலம். மதினா மாநகரில் உடல் நலமின்றி அன்புத் துணைவி ஆயிஷா(ரலி)யின் இல்லத்தில் படுத்திருந்த அவர்களைப் பார்க்க வந்த அலீ(ரலி) அவர்களுக்கு நற்செய்தி ஒன்றை விளக்கி, மகளார் ஃபாத்திமா அவர்களிடம் அதனை தெரிவித்து விடுமாறு கூறினார்கள்.

“நபியே !” ஃபாத்திமா இரவும் பகலும் தங்கள் நினைவிலேயே நாட்களை கழிக்கிறார். ஃபாத்திமா என் ஈரலின் ஒரு பகுதி என்று தாங்களும் கூறியிருக்கிறீர்கள். இப்படி நீங்கள் இருவரும் ஒருவர் மனதில் ஒருவர் நிறைந்திருக்கும் போது எனக்கென்று யாரிருக்கிறார்கள், என்று விசனத்தோடு வினவிய அலீயின் முகத்தைப் பார்த்து சிரித்தார்கள் நபிகள் பிரான்.

பின்னர் “அலீயே! (லகுமிக லகுமி தம்முக தம்மி)‘ உமது இரத்தம் என்னுடைய இரத்தம், உமது தசை என்னுடைய தசை!” என்று கூறி அலீயை சமாதானப் படுத்திவிட்டு தொடர்ந்து பேசினார்கள்.

“அலீயே! மகளார் ஃபாத்திமாவிடம் கூறும்: உங்கள் இருவரின் மைந்தர்களான ஹஸனும் ஹுஸைனும் என்னுடைய வாரிசுகளாவார்கள். இவ்வுலகுள்ள வரை அவர்கள் இருவருடைய சந்ததிகளிலும் அல் உலமாவு வரதத்துல் அன்பியா- அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகள் என்பதாக அற்புத ஞான வான்கள் தோன்றுவார்கள்”.

மகிழ்ச்சியோடு ஹஜரத் அலீ(ரலி) அவர்கள் விடைபெற்றுச் சென்ற அடுத்த சில மணித்துளிகளில் எதிரில் தோன்றினார் வானவர் ஜிபுரீல்(அலை) என்றுமில்லா சோகம் படர்ந்திருந்த வானவரின் முகத்தைப் பார்த்துவிட்டு திடுக்கிட்ட நபியின் முன் அவர் வருத்தத்துடன் பேசினார்,

“நபியே! தங்கள் மீது சாந்தி உண்டாவதாக. இறைவன் தங்களிடமிருந்து ஒரு அனுமதியை எதிர்ப் பார்க்கிறான். உங்கள் கண்மணியான பேரர்கள் இருவரையும் தன்னுடைய மார்க்கத்தின் வெற்றிப் பாதையில் உயிர் தியாகிகளாக ஷஹீதுகளாக ஆக்க விரும்புகிறான்”.

அதிர்ந்து போன நபியிடம் ஜிபுரீல் (அலை) விளக்கினார்கள். “அதற்குப் பகரமாக உலக இறுதிநாள் வரையில் புவியில் தோன்றும் மனித கோடிகளை இரட்சித்து கரையேற்றும் ஷஃபாஅத் என்னும் மன்றாட்ட உரிமையைத் தங்களுக்கு வழங்க விரும்புகிறான்”.

மனித கோடிகளை மன்னித்து உலக நரக இன்னல்களிலிருந்து பாதுகாக்கும் ஷஃபாஅத் என்னும் மன்றாட்ட உரிமை! அவர்கள் யோசிக்கும் முன் ஆன்ம ஒளி ஒலி காட்சிகள் அண்ணல் நபி அவர்கள் பார்வையில் தோன்றின.

அதோ மதினா முனவ்வராவில் பேரர் ஹஸனார் நாற்பது வயதில் லோகாயத ஆட்சியர்களால் விஷம் வைத்து கொல்லப்பட்டார்கள்.

அண்ணல் ஹுஸைனாரோ ஃபுராத் நதிக்கரையில் எதிரிகளை நோக்கி செல்லும் முன் தனது உறவினர்களுடன் நிற்கும் மனைவியை நெருங்கி வருகிறார்கள். அம்மாதரசியின் கரங்களில் தவழும் தன் மைந்தர் முகம்மத் பாக்கரை கண்களால் அருளொழுகப் பார்க்கிறார்கள்.



பின் தன் சிரசின் மீதிருந்த பசுமை தலைப்பாகையை கழற்றி அதிலிருந்து ஒரு பகுதியை கிழித்து இளவல் முகம்மத் பாக்கரின் சிரசில் சுற்றி அந்த தலைப்பாகையின் மீது தன் தீனின் வாளை சிறிது நேரம் வைத்து பெருமானார்(ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதிவிட்டு அங்கிருந்து விடைபெறுகிறார்கள்....

ஹுஸைனார், அன்று தன் மைந்தரின் முகம்மத் பாக்கரின் சிரசின் மீது தன் ஞான தலைப் பாகையை சுற்றி, அதன் மீது வைத்து ஆசி புரிந்த வீர வாளைத்தான் இதோ சிறுவர் அஃகுமத் கபீர் தன் கைகளில் ஏந்தியபடி மாளிகையின் மாமன்றத்தில் நின்று கொண்டிருக்கிறார்.

அடுத்த கணம் பாலகர் அஃகுமத் கபீர் ஆவேச திக்ரோசையை, ‘ஹுஹுஹு ’ என்ற இறை நாமத்தை உரத்த குரலில் உச்சரித்த படி, அந்த மன்றத்தை சுற்றி சுற்றி வருகிறார். ‘தூர் தூர் தூர் சலோ சைத்தான், தேவ், ஜின்,முஸீபத் தூர் சலோ’ என்று அந்த பாலர் எழுப்பிய குரல் ஆவேசமாக ஒலித்தது.

அடுத்த சில மணித்துளிகளில் வானில் சூழ்ந்திருந்த மேக கூட்டங்கள் விலகி சூரியனின் இதமான ஒளி எங்கும் படர்ந்தது. பாலகர் அஃகுமத் கபீரின் ஆவேச திக்ரின் ஓசையும் முஸீபத்தை விரட்டும் குரலோசையும் மாளிகையைத் தாண்டி, வன வனாந்திரங்களில் ஒலித்து, வானத்திலிருந்தும் எதிரொலித்ததால் கூடியிருந்த நூற்று கணக்கான பஸ்ரா வாசிகள் திகைத்து நின்றார்கள். வாளுடன் நிற்பவர் பாலகர் அஃகுமத் கபீரா, அல்லது முப்பாட்டனார் முகம்மத் பாக்கரா அல்லது மாவீரர் ஷஹீதுல் அஃலம் ஹுஸைன்(ரலி)அவர்களேதானா? என்று திகைத்தனர்.

நாட்டின் பல்வேறு பல்வேறு பகுதிகளிலிருந்தும் ‘பிளேக்’ நோயின் தீவிரம் குறைந்து விட்டதாக செய்திகள் வந்து கொண்டிருந்தன!.

ஒரு வார காலத்துக்குப் பின் ஒரு அதிகாலை...

மாளிகையின் பரந்த வாசலில் ...தாய் மாமனாரான அஷ்ஷெய்கு மன்சூர் ரிஃபாயி அவர்கள் தன் பால மருமகன் அஃகுமத் கபீர் அவர்களை மடிமீது வைத்துக் கொண்டு அல்அமான் யா அஹ்மத் கபீர்! அல்மதத் யா சுல்தான் ஸையிது அஹ்மத் கபீர்” என்று பவ்யமாக கொஞ்சி கொண்டிருப்பதை வீடு தேடி வந்த சீடர்கள் பதின்மர் பார்த்து விட்டு புன்னகை பூத்தார்கள்.

அப்போது தான் மன்சூர் ரிஃபாயி தன் பால மருமகரின் தலை முடியை ஆதரவாக நீவியபடி
இருந்த போது, சிரசை சுற்றி உள்ள ஒரு அடையாளத்தைப் பார்த்தார்கள். முடி சரியாக முளைக்காத புறந்தலையின் அந்த பிறைவட்டப் பகுதி...

இது தலைப்பாகை சுற்ற அழுந்திய தழும்பு போலல்லவா காணப்படுகிறது... அப்போது அஃகுமத் கபீரின் தாய்மாமனாரின் நினைவில் போர் களத்துக்கு செல்லும் முன் ஹலரத் ஹுஸைனார், தன் மைந்தர் முகம்மத் பாக்கரின் சிரசில் கட்டிய பசுமைத் தலைப்பாகை நினைவுக்கு வருகிறது....,

அஷ்ஷெய்கு மன்சூர் அதிர்ந்து போனார்கள். தன் மடியில் அமர்ந்திருப்பது அஃகுமத் கபீரா, முகம்மத் பாக்கரா அல்லது முப்பாட்டனார் ஹுஸைன் (ரலி) அவர்களே!.



இவனே அவனா என்றறிய
இகமெங்கும் நான் பயணித்தேன்!
தவமே உனக்கு பதில் கூறும்
தனித்து பசித்து விழித்திரு நீ!
மகனே என்றார் ஒரு ஞானி
மறந்தேன் என்னை கண்மூடி!
அவனே இருவிழி இருளுக்குள்
அழகிய நானாய் அவதரித்தான்!

## 8.பேரின்பப் பிறவிகள்

அந்த பரந்த வானம் ஒரு அதிசயம். இந்த திறந்த பூமி ஒரு அதிசயம்!.

அந்த வானத்தில் மிதக்கும் சூரியன், சந்திரன், ஜொலிக்கும் நட்சத்திரங்கள், அதன் மீது தவழ்ந்து வரும் வெளுத்த வெண் மேகங்கள், கருத்த மழை மேகங்கள்,நீலத்திரையில் வெடிக்கும் இடி முழக்கம், பளீரெனப் பாயும் மின்னல் கொடிகள் எல்லாமே அதிசயம்.

பூமியின் பரப்பில் விரிந்து கிடக்கும் சமவெளிகள், பாலைகள், சதுப்பு நிலங்கள், நெடிதோங்கி நீண்டு படுத்திருக்கும் மலைகள், குன்றுகள், மலைகளில் தோன்றி நிலப்பரப்பில் நீந்தி கடல்களில் சென்று கலக்கும் ஆறுகள், ஆறுகளில் வந்து கூடும் அருவிகள், பிரிந்து செல்லும் வாய்கால்கள் கால்வாய்கள் அனைத்தும் அதிசயம்.

நிலங்களிலும், நீர் நிலைகளிலும் வானப் பரப்பிலும் வாழும் உயிரினங்கள். காடுகளில் குடியிருக்கும் சிங்கம், புலி, கரடி, நரி, ஓநாய், யானை, காட்டெருமை, காண்டாமிருகம், கழுதைப் புலி, மான், மறைஆடு, முயல் இவைகளும் அதிசயங்களே.

வானில் பறக்கும் கழுகு, பருந்து, இராஜாளி, புறா, கிளி, வானம்பாடி, மீன் கொத்தி, நீர் பரப்புகளில் நீந்தி வாழும் சுறா, திமிங்கிலம் முதலான மீன்களின் வகைகள், இவையன்றி நிலப்பரப்பில் காற்றில் வாழும் ஈ, கொசு முதலான கண்ணுக்குத் தெரியாத ஓரங்க ஜீவிகள், நச்சுக் கிருமிகள் இவையும்,

வனங்களில் நின்றது நின்றபடி உயிர் வாழும் மரங்கள் தேவதாரு, தேக்கு, ஆலம், அத்தி, அரசு, புளியம், பனை, தென்னை, ஈச்சை, பேரீச்சை, காய்கறிகளை தரும் கொடிகள், வாச மலர்களை தரும் செடிகள், இந்த அதிசயங்களை தவிர,

மனிதனின் வீடுகளில் வீதிகளில் வாழும் ஒட்டகை, மாடு, ஆடு, குதிரை, நாய், பூனை, எலி, எறும்பு, கரையான் இந்த வகை வகையான அதிசயங்களிலெல்லாம் அதிசயம்தான் மனிதன்.

ஆம் மனிதனே பிரபஞ்சத்தின் மகா அதிசயம். அகிலத்தை ஆட்டிப் படைப்பவன் நானே என்று பெருமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் 'விதி'யின் கைகளில் சிக்கி தத்தளிக்கும் இந்த மனிதக் கைதி ஒரு முட்டாள்.

கோடானு கோடி மனிதர்களுக்கிடையிலே ஒவ்வொருவனுக்குள்ளும் 'தான் தானெ'ன்று வாழும் இவன் யார்? இந்த இவனை ஆராய்ந்து நொந்து போனவர்கள் எத்தனையோ மனிதர்கள், தன்னை விட்டுவிட்டு அதை கண்டு பிடித்துவிட்டேன் இதை கண்டு பிடித்துவிட்டேன் என்று கதையளந்து விட்டு காலை நீட்டி படுத்துவிட்டவர்கள் கோடானு கோடி மாந்தர்கள்.

இவர்களில் தலைவர்கள், குடிமக்கள், வீரர்கள், விஞ்ஞானிகள், ஞானிகள், மதபோதகர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள்! இவர்களில் கறுப்பர், சிவப்பர், மஞ்சள் நிறத்தவர், வெள்ளையர், இவற்றையெல்லாம் தாண்டிய அதிசயம் ஆண் மற்றும்பெண் இருபாலினம்.

இந்த அதிசய பிரபஞ்சத்தை, உலகத்தை இதன் காட்சியை, கதியை, விதியை இயற்கை என்றான் மனிதன். ஆற்றாமையால் இயலாமையால் தவிக்கும்போது தனக்கு மேலுள்ள வல்லமையை சக்தியை சில நேரங்களில் வணங்கிப் பணிந்தாலும், இந்த அகிலத்தின் இயக்கத்தை இயற்கை என்று தான் மனிதன் நினைக்கிறான்.

மனிதனின் மனதில் பழகிப் போன இயற்கையென்னும் வழக்கத்தை, திடீரென இறைவன் சில மனிதர்களை கொண்டு முறியடிக்கிறான். இறையருள் பொதிந்த இவர்களிலிருந்து புறப்படும் இந்த அதியற்புதங்களை இயற்கைக்கு மேலான காரணங்களை கண்டு சக மனிதர்கள் நடுங்குகிறார்கள், அந்த விசேஷ மனிதர்களின் முன் பணிந்து விழுந்து சரணடைகிறார்கள்.



அவர்கள் அசரீரிகளை கேட்கிறார்கள், அடுத்தவர்களின் மன ஓட்டத்தை அறிந்து கொள்கிறார்கள், முக்காலத்தையும் உற்று நோக்கி நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை, என்று நிகழ்வுகளை உணர்ந்து கொள்கிறார்கள், பிரார்த்தனை கொண்டு மனிதர்களின் வேதனைகளை விலக்குகிறார்கள். துயர துன்பங்களை கலைகிறார்கள், தேவைகளை நிறைவேற்றுகிறார்கள்.

அந்த அருள் நிறைந்த மனிதர்கள்தான், நாஸ்திகர்கள் நம்பினாலும், நம்பாத போதும் நபிமார்கள், ஒலிமார்கள், தீர்க்க தரிசிகள், மெய்ஞ்ஞானிகள், அவதார புருஷர்கள், முத்தர்கள், சித்தர்கள், ரிஷிகள், முனிவர்கள் என்ற உன்னதப் பெயரோடு புவிப்பரப்பில் அவதரிக்கிறார்கள்.

அகிலப் பிரபஞ்சத்தின் பின்னணியில் ஆண்டவனின் இருப்பை அவர்கள் மனிதர்களுக்கு உணர்த்துகிறார்கள்!. பண்டத்தை மொய்க்கும் ஈயைப் போல் பாரை மொய்த்துக் கிடக்கும் மனிதர்களுக்கு நற்போதம் புரிந்து இறைவழியில் நெறிப்படுத்துகிறார்கள்.

ஆம்! அந்த அருளொளி கொழிக்கும் தெய்வீக மாந்தர்களான பேரின்பப் பிறவிகளின் வரிசையில்தான் ஆரிஃபுகள் நாயகம் ஸுல்தானுல் ஆரிஃபீன் சுல்தான் சையிது அஃகுமத் கபீர் தோன்றி பன்னிரெண்டு வயது பாலகராக வளர்ந்து மார்க்க நெறி பயிற்றுவிக்கும் மதரஸாவில் பயின்று வந்தார்கள்.

இளம் பருவத்திலேயே அவர்களிலிருந்து புறப்பட்ட அற்புதங்களை கண்டு பதாயிகு நகர மக்கள் அதிசயித்தார்கள். அவர்கள் வீட்டு வாசலில் வந்து நிற்பவர்களின் நோய்கள் பறந்தன. நொண்டி முடவர்களுக்கு கால் நீள்வதும், குருடர்களுக்கு கண்பார்வை தெரிவதும், செவிடர்கள் கேட்க முடிவதும், ஊமைகள் பேச முடிவதும் அவ்வப்போது நிகழ்ந்தது.

அன்று முற்பகலில் தன் ஆசிரியர் ஷைகு அலீ என்பவரோடும், சக மாணவர்களோடும் ஒரு பெரியாரின் இல்லத்தில் நடைபெற்ற அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் பெருவிழாவில் கலந்து கொள்ள புறப்பட்டார்கள் ஏழு வயதிலேயே திருக்குர்ஆனின் ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு....... மனப்பாடம் செய்தார்கள்.

அரபி மொழியுடன் ஃபார்ஸியும், அது தவிர இரு மொழிகளிலும் ஸர்பு என்னும் எழுத்திலக்கணம் நகுவு என்னும் சொல்லிலக்கணம், அறுவு என்னும் செய்யுள் இலக்கணம், பதீகு அணியிலக்கணம், மஆனி உரைநடை இலக்கணம்,மன்திகு என்னும் தர்கம், லுகத்து என்னும் இலக்கிய விளக்கம் கணிதம் ஹிஸாபு ,திப்பு வைத்தியம், இவை தவிர பிக்ஹு சட்டங்கள் தஃப்ஸீர், மறை விளக்கம், அகாயிது கொள்கை, தஸவ்வுபு ஓர்மை ஞானமும் கற்று வந்தார்கள்.

நிகழ்வை ஒட்டி நடந்த பாடகனான பாணன் ஒருவனின் தாயிரா பறையோசையையும் அவன் எழுப்பிய இன்னிசைப் பாடலையும் செவி மடுத்தவர்களாக விருந்தோம்பும் வீட்டு க் கூடத்தின் நடுவே அமர்ந்திருந்தார்கள் பாலகர்.

ஸூஃபி மகான் ஒருவரின் ஃபார்ஸி கஸல் பாடல் ஒன்றை இசைத்துப் பாடி கொண்டிருந்தான் பாணன்.

*“அந்த ததுரியா ஹபீபி, மன்ஹபீபி அந்த ததுரீ*
*என்னுடைய காதலனே! என்னுடைய காதலன்*
*யாரென்று நீ அறிவாய் தானே!.*

*“கஅபாவுடைய திரைச்சீலையைப் பிடித்துக் கொண்டு,*
*ஒரு பெண் பாடிக் கொண்டிருந்தாள்.*

*வனுஹூலுல் ஜிஸ்மி வத்தம், உயபூஹானி பிரசிர்ரி*
*கத்கத் தம்துல் ஹூப்பு ஹத்தா லாக்கபிலக் கித்பானி ஸத்ரி*

*“என் மெலிந்த உடலும் என் கண்களின் கண்ணீரும்*
*என் இதய ரகசியத்தை வெளிப்படுத்தி விட்டது*

*“மறைப்பதைக் கொண்டு என் இதயம் உடைந்து*
*சிதறுமளவுக்கு என்னுடைய காதலை நான் எனக்குள் மறைத்தேன்”.*



இவ்வாறு அந்தப் பாணன் ஒரு பெண்ணின் காதலைப் பற்றி பாடி கொண்டிருக்கும் போது, அந்த சபையில் அமர்ந்திருந்த ஸூஃபிகளும் ஞானிகளும் ஷெய்குமார்களும் அந்த தெய்வீக காதலை பிரதிபலிக்கும் பாடலை கேட்டு போதையானார்கள்.

அவர்களில் சிலர் எழுந்து நடனமாடவும் செய்தார்கள். அந்நேரம் பாடிக் கொண்டிருந்த பாணன் திடுக்கிட்டு ‘ஐயோ இதென்ன மதுவை குடித்து தள்ளாடும் குடிகாரர்களைப் போலல்லவா தெரிகிறது. இவர்களா பெரிய மனிதர்கள்?’ ஒரு நிமிட நேரம் தனக்குள் அருசையானான்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த பாலகர் அஃகுமத் கபீர் பாய்ந்து சென்று அவனிடமிருந்து தாயிரா கொட்டை பறித்தார்கள். மரத்தூணில் அதை மோதி உடைத்தெறிந்துவிட்டு, வலது கையை வானில் உயர்த்தி காற்றில் அலைந்தார்கள். அடுத்த கணம் வானிலிருந்து ஒரு தாயிரா கொட்டு இறங்கி வந்து அவர்கள் கையில் அமர்ந்தது. கூடியிருந்தோரெல்லாம் பிரமித்து அமர்ந்தார்கள். பின்னர் தானே ஆவேசமாக பாடத் தொடங்கினார்கள்:-

*யாபத்தால் ஜாலத்தில் குலுபு பீமைதானில் அஸ்றாரு*
*ஃபஅறபதுக் கபிமஃரிபத்தில் அஸீஸில் ஜப்பாறு*
*வீணனே! மஹ்ரிபா அகமிய மென்னும்*
*மைதானில் அறியப்பட்டதை தவறாகக் கருதாதே*
*முஹிப்புல்லாஹி ஃபிரத்துன்யா அலீலு*
*தக்தாவ லசுக்முஹு பதவா ஹூதாஹக்*

பராபரனை நேசிப்பவன் இவ்வுலகில் நோய் வாய்ப்பட்டவன்தான்,

ஆனால் அவனுக்கு அந்த ஆவேச காதல் நோய்தான் மருந்து!

இவ்வாறு அவர்கள் ஆடிப் பாடிக்கொண்டு அந்த பாணனை நெருங்கி எச்சரித்தார்கள்:- இறை நேசர்களாகிய ஸூஃபிகளையும், ஷெய்கு மார்களையும், மஜ்தூபுகளையும், மெய்ஞ்ஞானிகளையும் குறை கூறி குற்றம் காணாதே. ஏனெனில் இறைவன்,

“எவனொருவன் என் ஒலியாகிய இறை நேசனுக்கு எதிராக புறப்படுகிறானோ அவனுக்கு எதிராக போர் தொடுக்க அல்லாஹ்வாகிய நான் என் வாளை உருவி விட்டேன்” என்று இறைவன் கூறுவதாக நபிகள் பெருமான்(ஸல்) கூறிய ஹதீஸ் குத்ஸீ ஒன்று உண்டு என்று அப்பாணனை எச்சரித்தார்கள்.

நடக்கின்ற நிகழ்ச்சிகளைக் கண்டு சபையினர் அச்சத்துடன் அமர்ந்திருந்தார்கள். பாலகர் அஃகுமத் கபீரோ அந்த பாணனிடம் தன் கையிலிருந்த தாயிரா கொட்டை கொடுத்து, “உன்னுடைய முஸீபத்தான தரித்திரம் பிடித்த தாயிரா இனி உனக்கு வேண்டாம் அதை உடைத்தெறிந்து விட்டேன். இந்த முபாரக்கான அதிர்ஷ்ட்டமுள்ள தாயிராவை வைத்துக்கொள். உஷார்!” என்று கூறி தன் இடத்தில் வந்து அமர்ந்தார்கள்.



குருவின் பாதம் தொழ அறியார்
கூறும் இகபர நலம் அறியார்
குருவே துருவ நட்சத்திரம்
குருவே கலங்கர விளக்காகும்
குருவை நபியாய் காண்பவனே
குற்றமில்லாத நல்லடியான்
குருவின் உருவில் கரைந்தவனே
ஹூவை அறியும் நெறிகாண்பான்!

## 9. கஃபாவின் காட்சி

மதரஸாவில் கல்வி கற்று தஹ்ஸில் என்பதாகப் பட்டமும் பெற்றுவிட்ட இளைஞர் அஃகுமத் கபீர் அவர்களுக்கு அப்போது பதினெட்டு வயது. அற்புதங்கள் தன்னிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும் ஹவாரிகுல் ஆதாத் -இயற்கைக்கு மாற்றமானவர் என்ற ஆடையை இறைவன் அவர் மீது போர்த்தியிருந்த போதும்....

அல்லாஹ்வாகியப் படைத்த நாயனை கண்குளிர காண வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்குள் அதிகரித்து வந்தது. எனவே ஷெய்கு அலாவுத்தீன் அலீயுல் வாஸ்தி காதிரி என்ற பெரியாரிடம் சென்று பணிந்து பைஅத் என்று ஞானதீட்சைப் பெற்றுக் கொண்டார்கள்.

தன்னை தேடி வந்திருக்கும் இளவல் அஃகுமத் கபீரைக் கண்டதும் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த அஷ்ஷெய்கு அலீ காதிரி அவர்கள், எழுந்து நின்று கொண்டு இளைஞரை வரவேற்றார்கள். அவரது விருப்பத்தை தெரிந்து கொண்டதும் புன்னகைத்தார்.

பிறகு, “நல்லது அஃகுமத் கபீரே! உமது நாட்டம் உயர்வானது, ஆயினும் பைஅத் ஞான தீட்சைக்கான சடங்குகளில் உம்மை நான் உட்கார வைக்க விரும்பவில்லை. இதோ என் முகத்தைப் பாரும்”! என்று இளைஞரின் முகத்தை உற்றுப் பார்த்தார்கள்.

ஷெய்கின் பார்வையை சற்று நேரம் பரக்க விழித்து பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் தலைகுனிந்து கணநேரம் நின்றது நின்றபடி கண்மூடி இருந்தார்கள். பின் ஷெய்கு அவர்களது பாதங்களை முத்தமிட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள்.

தன் இல்லத்தின் உள்ளேயே சில காலம் தரிப்பட்டிருந்தார்கள். வீட்டுக்கு வெளியில் வருவதையும், பொது இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும் பெரிதும் தவிர்த்து கொண்டார்கள்.

தனிமையை விரும்பி அதிகமதிகம் இல்லத்திலேயே தரிப்பட்டு விட்டுவிட்ட அந்த நாட்களில், இளைஞர் அஃகுமத் கபீரின் தாயாரும் தந்தையும் காலமாகி விட்டார்கள். பெற்றோரின் பிரிவு அவரை இறைவனின் தேட்டத்தில் அதிகமதிகம் உந்தித்தள்ளியது.

அல்ரிஃப்பாயா மாளிகையில் தாய் மாமனாகிய ஷெய்கு மன்சூர் ரிஃப்பாயா அவர்களின் பராமரிப்பில் தங்கிவிட்டார்கள். நிக்காஹ் திருமணம் புரிந்து கொள்ளும்படி தாய் மாமன் வலியுறுத்திய போதும் அவர்கள் அதை தவிர்த்தார்கள். துறவறத்தை விரும்பினார்கள்.

"இறைவன் கிழக்கிலும் மேற்கிலும் இருக்கிறான். நபியே! நீர் உமது முகத்தை எங்கு திருப்பினும், அங்கு இறைவன் அல்லாஹ்வுடைய முகம் (உஜூது உள்ளமை) இருக்கிறது.(திருக்குர்ஆன் 2:115)".

"நாம் மனிதருக்கு அவனுடைய பிரடி நரம்பைவிட சமீபத்தில் இருக்கிறோம்.

"நீங்கள் எங்கிருப்பினும் அல்லாஹ் உங்களோடிருக்கிறான்.(ஸூரா ஹதீத் : 4),

என்ற மறை வசனங்களை அவர்களின் மனம் உசாவிக் கொண்டிருந்தது."

மேலும் ஹதீஸ் குதுஸியிலே உள்ள இறைவனின் கூற்று :- "நான் மறைந்திருக்கும் அதீதப் புதையலாயிருந்தேன், மறைந்த என்னை அறியப்பட நாடியதால் சிருஷ்டிகளைப் படைத்தேன்."

இவை அவர்களை தன்னுள் ஆராய வைத்தது. அற்புதங்கள் தன்னிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலும், அவர்கள் தன்னுள் இருக்கும் தான் தன்மையை ஷெய்கின் உபதேசத்துக்கு இணங்க ஆராய்ந்து வந்தார்கள்.



ஷெய்கின் உபதேசத்தின் படி காபகவுசைன் என்ற இரு புருவ மத்தியின் உள்ளொளியை இருவிழி பார்வைகளை ஒன்று படுத்தி தரிசிக்கும் பயிற்சியில், ஒரு நாள் அவர்களின் அகப்பார்வையில் கஅபாவின் அருங்காட்சி பளிச்சென வெளியாகியது.

அல்லாஹ் தன்னை தன் இல்லம் நோக்கி அழைக்கிறான் என்றெண்ணிய இளைஞர் அஃகுமத் கபீர் இல்லத்திலிருந்து திடீரென்று புறப்பட்டு விட்டார்கள்.

வசந்த காலத்தின் அமோகமான நீர்ப்பெருக்கில் ஷத்தல் அரப் ஆற்றின் பயணகால்வாய்களில் படகுகள் விரைந்த வண்ணமிருந்தன. இல்லத்தின் தோட்டத்தில் காற்றிலாடிய நெடு மரங்கள், ஒற்றையடிப் பாதைகளில் அந்த இளைஞரை பல நாட்களுக்குப் பிறகு பார்க்க முடிந்ததால் பெருமூச்செறிந்தன.

படகிலேறி பயணித்து பஸ்ராவின் சோலைகளில் புகுந்து, நெடு வீதிகளில் நடந்து கொண்டிருந்த இளைஞரின் செவிகளில் எங்கிருந்தோ சிலர் பாடும் ஃபார்சி பாடல்கள் காதில் விழுந்தது.

*நாஜிரே குத்குதாஸ்தோ குத்மன்ஜூர்*
*குத்த மாஷா வகுத்த மாஷா கார்*
*ஆஷிகே குத் குதாஸ்தோ குத் மஃஷூக்*
*குத் தபீபே குதஸ்தோ குத்பீமார்*

*பார்க்கும் அந்தப் பராபரனே*
*பாரெங்கும் தன்னைப் பார்க்கின்றான்!*
*ஆர்ப்பரிக்கும் ஜகஜால*
*அற்புத வித்தைக் காரணனாய்*
*ஊர்க்குள் காதலன் காதலியாய்*
*உலவி நாடகம் போடுகிறான்!*
*யார்க்குள்ளும் அவன் இருக்கின்றான்*
*யாவும் அவனே அவனேயாம்!*

'இப்படி ஏகத்துவ தௌஹீது நிலையைப் பறை சாற்றும் இந்தப் பாடலை இப்போது யார் பாட வேண்டும்? ஏன் பாட வேண்டும்?' ஆண்டவனின் இல்லத்தை நோக்கி அடி எடுத்து வைத்துவிட்ட தன்னை உலக காட்சிகளை நோக்கி அழைக்க வேண்டும் என்று மனம் குழம்பி நடந்து கொண்டிருந்த அவர்களை முன்னோக்கி பாடிக்கொண்டே வந்தார்கள், யாகூப் மற்றும் அலீ என்ற அவர்களின் அடி நாள் தோழர்கள் இருவர்.

வந்தவர்கள் இருவருமே,“தோழரே! தாங்கள் வெகுதூரம் பயணப்பட்டிருப்பது போல தோன்றுகிறது. தாங்கள் அனுமதித்தால் நாங்களும் உடன் வருகிறோம். வழிப் பாதையில் உங்களுக்கு உதவியாயிருப்போம்” என்றார்கள்.

இளவல் அஹ்மத் கபீர் அவர்களோ! ‘நண்பர்களே என் கண்கள் கஃஅபாவைத் தேடுகிறது. என் பாதங்கள் திருமக்க நகரை நோக்கி பரபரப்போடு நகர்ந்து போய் கொண்டிருப்பதால், உங்களிடம் நின்று பேச எனக்கு நேரமில்லை”, என்றார்கள்.

நண்பர்கள் இருவருமே அவர்களை தனிமையில் அனுப்ப விரும்பாதவர்களாக “இல்லை எஜமானே! உங்களோடு நாங்களும் புறப்பட்டு வருகிறோம். மூவருமே கஅபாவை வலம் வந்து உம்ரா செய்வோம்” என்று பரபரத்தார்கள்.

தடுத்தும் விடாத தோழர்களையும் அழைத்துக் கொண்டு மேற்கு திசையில் ஹிஜாஸை நோக்கி, நெடுஞ்சாலையில் நடந்து பயணித்து சென்று கொண்டிருந்த இறை நேசச் செல்வர் அஃகுமத் கபீரின் கண் எதிரில் கஅபத்துல்லா ஆகிய இறையில்லம் பாலைவன மணற் பரப்பின் நடுவிலே பளிச்சென்று தோன்றி காட்சி அளித்தது.

அந்த அற்புதக் காட்சியைக் கண்டு இறைநேசர் அஃகுமத் கபீரை எதிர் நோக்கி ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் கஅபத்துல்லா, தொலை தூரத்தை கடந்து வந்து கண்முன் நிற்பதைக் கண்டு நண்பர்கள் இருவரும் பேராச்சரியத்தால் விதிர் விதிர்ந்து நின்றார்கள்.

ஆனால் அந்த இளம் இறை நேசச் செல்வர் அஃகுமத் கபீரோ அந்த காட்சியை வெறுத்ததால், இது உண்மையல்ல ஒரு சூக்கும தோற்றம். இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த இறைவன் என் முயற்சியை ஏன் முறியடிக்கிறான்...?

என்று அவர்கள் மனதில் ஆராய முற்பட்டார்கள்....

இந்த கஅபா என்னும் அல்லாஹ்வின் இல்லத்தை குறித்து அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்ன ஹதீஸ் மொழி அவர்களுக்கு நினைவில் வந்தது.

“விசுவாசமுள்ள இறையடியானின் இதயம் கஅபாவை விட ஏழு மடங்கு உன்னதமானது”.



அந்த ஹதீஸ் மொழி நினைவுக்கு வரவே, அவர்கள் நண்பர்கள் இருவரையும் விளித்து, “இந்த அருட்காட்சி நமக்கு போதும். வாருங்கள் நாம் இல்லம் நோக்கி திரும்புவோம்” என்று, வந்த வழியே திரும்ப முனைந்த போது, தோழர்கள் இருவரும் வேறு வழியின்றி அவர்களை தொடர்ந்தார்கள்.

கஅபா! அது ஒரு சதுரங்கமான கருங்கள் கட்டிடம். அதனுள் காணப்படுவதெல்லாம் காலி வெற்றிடம். அதன் அடிப்படையோ அறுகோண செவ்வகம். ஆம் இதுதான் அதன் ஆதி அமைப்பு அது ஆதி மனிதர் ஆதம் (அலை) அவர்களின் அடக்கவிடம் என்பது ஸூஃபிகளின் முடிவு.
ஆயினும், அதன் அறுகோண செவ்வக அடித்தளமோ மனித உயிரணுவின் அமைப்பை ஒத்திருப்பது தான் அதிசயம்.

மரணத்தருவாயில் மனித உயிர், உடலை விட்டு விலகியதும் மறையப் போவது ஒரு அருங்கோண உயிரணுக்கள்தான். அந்த உயிரின் அடையாளமோ கஅபாவின் சுவற்றில் பதியப்பட்டுள்ள ஹஜ்ருல் அஸ்வத் என்ற கருநீலக்கல் அது முதல் மனிதர் ஆதம் (அலை) வானிலிருந்து பூமிக்கு வந்து விழுந்தது, அதனை மனிதன் உற்று நோக்கினால் அவனது முகம் அதில் தெளிவாகத் தெரியும்.

கஅபா அது உலகில் உள்ள மற்ற ஆலயங்களையெல்லாம் விட்டு ஒட்டு மொத்தமாக வேறுபட்டது. “காயமே இது பொய்யடா காற்றடைத்தப் பையடா” என்பதைப் போல கஅபா ஒரு கூடு! காற்றடைத்த வெறுங்கூடு!, அதன் கீழ்த்தளமோ பளிங்கு வேயப்பட்ட பழமையான கருங்கள் பாரை.

பெருமானர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், “ஒரு கருங்கற் பாரையின் மேல் ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறான். அவன் சந்தோஷமாக இருக்கிறானா துக்கமாக இருக்கிறானா? என்று அந்த கருங்கல் அறிந்து கொள்கிறது.”

அண்ணலர் (ஸல்) அவர்களின் அந்த பொன்மொழியை உணர்ந்து பார்த்தால், ‘உணர்வு’ அதாவது மனித மனதில் அதிசயமாக தோன்றி அமர்ந்திருக்கும் அறிந்து உணர்ந்து கொள்ளும் பண்பு உயிர்களைத் தாண்டி பஞ்சபூதங்களிலும் குடி கொண்டிருக்கிறது. என்பதை புரிந்து கொள்ளலாம்.

பாரின் பரந்த வெளியை நிறைக்கும் இயற்கை காட்சியில் உயிர்உள்ளதென்னும் உயிரற்றதென்றும், அறிவியல் பிரிப்பதெல்லாம் அறிவின் பேதை நிலைதான், என்பதும் புலப்பட்டுவிடும்.

“உங்கள் அனைவரையும் (மனிதர்களை மட்டுமல்ல உயிரினங்கள், உயிரற்றது போல காணப்படும் பஞ்சபூதங்கள், ஏழு வானம், பூமி ஆகிய அனைத்தையும்) ஒரே ஆன்மாவைக் கொண்டு படைத்தோம்”. (திருக்குர்ஆன்) என்பதுதான் உண்மையாக இருக்க முடியும்.

இந்த உணர்வு, நினைவு, மறதிநிலை என்பது பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஆன்மாவாக குடி கொண்டிருக்கிறது. கல்லின் ஆன்மா வளர்ந்து புல்லாகிப் பூண்டாகி, செடி கொடி வனங்களாகி, பறக்கும் பறவைகளாகவும் மிதக்கும் மீன்களாகவும், நடக்கும் விலங்குகளாகவும் பரிணாமம் கொள்கிறது.

அந்த ஒற்றை அணுவின் ஆன்மா மனிதனாக மலரும்போது, தன்னை அறியும் தன்மை உண்டாகிறது. “மனிதனை புவியில் நம்முடைய கலிஃபா-பிரதிநிதியாக படைத்துள்ளோம்” (திருக்குர்ஆன்) என்ற உண்மை புலனாகிறது.

ஆனால் மனிதனின் ஆன்மா குழந்தையாகப் பிறந்து, வாலிபனாய் வளர்ந்து, முதியவனாய் மறைந்த போது மீண்டும் அணுவின் நிலையை அடைகிறது. அது அன்றே மீண்டும் உயிராய் மலரலாம், அல்லது ஆயிரம்ஆண்டுகள் கல்லாக மண்ணாக உறங்கி கிடக்கலாம் அல்லது மறதியில் மயங்கி கிடக்கலாம்.

சுல்தானுல் ஆரிஃபீன் அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகமவர்கள் பதாயிகு நகர் நோக்கி திரும்பி வந்தார்கள். அன்றிரவே ரிஃபாயா மாளிகையில் அவர்களின் உறக்கத்தில் எம்பெருமான் (ஸல் ) தோன்றினார்கள். ‘அஃகுமத் கபீரே நீர் ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து மண முடித்துக் கொள்ளும்” என்றார்கள்.

“நீர் அல்லாஹ்வை அறிந்திருக்கிறீர். அது உமக்குப் போதும்!, ஆனால் இந்த பிரபஞ்ச நாடகம் தொடர்வதற்காக நீர் மண முடித்துக் கொள்ளும்” என்று கூறிவிட்டு மறைந்தார்கள்.

கஅபாவை நோக்கிய தன் பயணப் பாதையில் குறுக்கிட்டு தன்னை தடுத்துவிட்ட இறைவனது செயலின் அர்த்தத்தை நோக்கத்தை இப்போது புரிந்து கொண்டார்கள்.



அவனே அவனது தூதரென
அவனியில் வந்து தோன்றினனால்
அவனே ஜோதி அவதாரம்
அவனே மானுட ரசசியமாம்
அவனே சொர்க்கம் நரகமென
அரிய வேதங்கள் கூறிடினும்
அவனைஅறிய முடியாமல்
அறிவுத் திரையால் மறைக்கின்றான்
*-ஸூஃபி மகான் அபு ஸையிது(ரலி)*

## *10. பரமனை நேசிக்கும் ஃபக்கீரின் பாதை*

அகன்று விரிந்த ரிஃபாயி மாளிகையின் உயர்ந்த வாசல் கதவுகள் திறந்து கிடந்தன. பஸ்ரா நகரில் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்த வண்ணமிருந்தனர். பரந்த மாளிகையின் முன் கட்டில் அமைந்த விசாலமான அறையொன்றில் மேசை ஒன்றின் மீது சிவப்பு பில்லூரிப் பட்டு ஜரிக்கப்பட்டிருந்தது.

அந்த மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த அற்புத நினைவுப் பொருட்களை வரிசையாக வந்து கொண்டிருந்த ஆண்களும், பெண்களும் ஆவலோடு பார்த்துக் கொண்டு அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் மீதும் அவர்களின் கிளையார் கோத்திரத்தார் மற்றும் கூட்டத்தார்கள் மீதும் ஸலவாத்தை மொழிந்து வாழ்த்தியவாறு இருந்தனர்.

ஆம்! அந்த மேசை மீது வைக்கப்பட்டிருந்தவை: அண்ணல் நபி (ஸல்) அணிந்திருந்த பச்சை தலைப்பாகை, தளர்ந்த மேல் அங்கி, கைத்தடி, வெள்ளை பளிங்கு கிண்ணத்தில் வைக்கப்பட்ட புனித தாடியின் முடி! அவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி) அவர்களின் இல்ல வாசலின் திரைச்சீலை. அத்துடன் நபி பெருமானின் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வீரவாள் ஆகியவையாம்.

அன்று மீலாதுப் பெருநாள் என்பதால், ரிஃபாயா இல்லத்தில் மக்களின் தரிசனத்துக்காக வைக்கப்படும் பெருமானார்(ஸல்) அவர்கள் உபயோகித்தப் பொருட்களை தரிசிக்க மக்கள் வந்த வண்ணமிருந்தனர். அந்த அறையின் அகன்ற சாளரங்களின் வழியே வசந்தம் புகுந்தது. அறையெங்கும் ஹினா அத்தரின் வாசம் நிறைந்திருந்தது.

திறந்த ஜன்னல்களின் வெளியில் வானம் தெளிவாய்த் தெரிந்தது, வெய்யில் பளிச்சென்று அடித்தது. காலை பனியினிடையே புகுந்த சூரியனின் ஒளி வெள்ளம் பச்சை சிகப்பு ஊதா வண்ணங்களில் பொடிப் பொடியாய் உதிர்ந்தப் பூக்களாய் வானில் தொங்கின.

ரம்மியமான அந்த சூழ்நிலையில் பஸ்ராவுக்கு அருகில் வாஸ்தி மாவட்டத்தின் ஹாஸன் நகர எல்லையில் அமைந்த அரண்மனை போன்ற ரிஃபாயா மாளிகை, அன்று கம்பீரமாக நிற்பதாகத் தோன்றியது. அதனுள் நடக்கும் சம்பவங்கள் அம்மாளிகையின் புகழை உயர்த்தியிருந்தது.

வானளாவிய அம்மாளிகையைச் சுற்றி வசந்த காலப் பறவைகள் பாடிப் பரவித் திரிந்தன. மாளிகையைச் சுற்றி அமைந்த வனத்தோப்பில் வானளந்த பேரீச்சை, பனை மரங்கள் ஆனந்தமாய் தலைவிரித்து ஆடின.

அண்ணலெம் பெருமானின் (ஸல்) நினைவுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்கு வெளியில், நீண்ட பொதுக் கூடத்தில் அமைந்த பிரசங்க மேடையில் அமர்ந்திருந்த ஸையிதினா அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகம், அழகிய முன் மாதிரியான அண்ணல் நபியின், வாழ்க்கையிலிருந்து படிப்பினைகளை மக்களுக்கு எடுத்து போதித்து கொண்டிருந்தார்கள்.

இருபத்தெட்டு வயது நிறைந்திருந்த நாயகத்தின் அருள் முகத்தை பார்த்தபடி, அவர்களின் இன்சுவை சொற்பொழிவை செவி மடுத்துக் கொண்டிருந்த நூற்றுக் கணக்கானவர்களிடையே, பொது மக்களுடன் ஷெய்குமார்களும் உலமாக்களும் உட்கார்ந்திருந்தனர். கூடத்தில் திரையிட்ட மறு பகுதியில் பெண்கள் ஏராளமாக குவிந்திருந்தனர்.



ஆரிஃபீன்களின் நாயகம் பேசினார்கள்:- “அல்லாஹ்வுடைய நல்லடியார்களே! அண்ணலெம் பெருமானார்(ஸல்) அவர்கள் குடும்பத்தினர் மீது நேசம் வைப்பதைக் கொண்டு உங்கள் இருதயங்களை வெளிச்சமாக்கி கொள்ளுங்கள். ஏனெனில் அந்த நபி (ஸல்) சந்ததியினரில் ஆண்களும் பெண்களும் ஆசீர்வதிக்கப்பட்ட நட்சத்திரங்கள் ஆவார்கள்.

“என்னுடைய இரத்த பந்துக்களான சந்ததிகளை நேசியுங்கள்!” என்று நபி அவர்களே உபதேசித்திருக்கிறார்கள். அல்லாஹ்வை நேசிப்போர் அவன் தூதரை நேசிப்பார்கள். அவன் தூதரை நேசிப்பவர்கள் அவர்களது குடும்பத்தவர்களான சந்ததிகளின் மீது அன்பு வைப்பார்கள்.

“என்னுடைய தோழர்கள் வானத்தின் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் யாரைப் பின் பற்றினாலும் நீங்கள் மீட்சிப் பெறுவீர்கள்!”, என்ற எம்பிரான்(ஸல்), தன் சகோதரரும் மருமகருமான அலீ(ரலி) அவர்களைக் குறித்து,

“நான் ஞானத்தின் பட்டினம், அலீ அதன் வாயில்!” என்றார்கள். மேலும் அலீயின் துணைவியார் அன்னை ஃபாத்திமா அவர்களின் மைந்தர்கள் இமாம் ஹஸன்(ரலி) இமாம் ஹுஸைன் (ரலி) ஆகிய இருவரையும் எனது வாரிசுகள் என்றார்கள்!. ஹஜ்ரத் அலீ அவர்களே மெய்ஞ்ஞானிகளின் தலைவராக விளங்குகிறார்கள்.

மெய்ஞ்ஞானம் மஃரிபா என்பதின் வழிப்பாதையான தரீக்கா, ஷரீஅத்தான சட்ட திட்டங்களுக்கு மாற்றமானது என்று கருதுவீர்களானால் அது தவறு, ஏனெனில் பெருமானார்(ஸல்) அவர்கள் “ஷரீஅத் எனது சொல், தரீக்கா என் நடைமுறை, ஹகீகத் எனது நிலை, மஃரிபா எனது ஞானம்!” என்று கூறியுள்ளார்கள்.

“நண்பர்களே! வயதில் மூத்த அறிஞர்களே! சுன்னத்தான வழியைப் பின்பற்றி நடக்கும்வரை அவன் நேர் வழியிலிருக்கிறான். அவர்களின் ஹதீஸ் மொழிகளை விட்டு விலகும் போது அவன் நேர் வழியிலிருந்து பிறழ்ந்து விடுகிறான்!”.

திடீரென சூரைக் காற்று அகன்ற ஜன்னல்களை பிளந்து கொண்டு அறையின் உள்ளே புகுந்து சுழற்றியது. வானில் மேகங்கள் சூழவே இருள் கவிழ்ந்தது. இளவர் பிரசங்க மேயையின் படிகளில் அமர்ந்தார்கள். சபையோர் கலையாமல் அவரவர் இடத்தை தக்க வைத்துக் கொண்டார்கள்.

சில நிமிடநேர கலவரத்துக்குப் பின் அங்கு அமைதி நிலவியது. கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து நின்றார். "அருளாளரே அஃகுமத் கபீரே நான் ஓர் கஸலைப் பாடாலாமா?" என்று அனுமதி கேட்டார். இறை நேச இளவல் சம்மதிக்கவே, அவர் தாயிராவை ஒலித்துக் கொண்டு பாடினார் :-

*வண்ணப் புறாவே என் எண்ணங்களை*
*வானத்துக்கு கொண்டு செல்வாயா*
*நான் உன்னைப் போலவே*
*கட்டுப் பாடில்லா பறவை ஆவேனா*
*வாழ்க்கையின் கை விலங்கு உடையுமா*
*சிறை கதவுகளை உடைத்து விட்டு என் ஆன்மா வெளியேறுமா?*
*நான் உன்னைப் போலவே*
*கணவாய்களை கடந்து பறப்பேனா*
*உனக்கு கிடைத்திருக்கும் அமைதியும்*
*சந்தோஷமும் எனக்கு கிடைக்குமா*
*உன்னைப் போல் நான் மேகங்களிடையே உலா வருவேனா*
*மலைகள், கடல்கள், பாலைவனங்கள்*
*இன்னும் சோலைகளின் மீது*
*பாடியபடியே பறப்பேனா?*
*நான் ஃபக்கீர்! ஃபக்கீர்களின் அரசே*
*தங்களது சபையில் பாட அனுமதித்ததற்காக நன்றி!*

அந்த விசித்திரமான மனிதர் சில மணித்துளிகளில் அந்த சபையிலிருந்து மறைந்து போனார். காற்றும் மழை தூரலும் நின்று வெளிச்சமும் வெப்பமும் மன்றத்தை ஊடுருவியதால் மன்றத்தில் கூடியிருந்தவர்கள் தெம்புடன் தங்கள் இருக்கைகளில் எழுந்தமர்ந்தார்கள்.

ஷெய்குமார்களில் ஒருவரெழுந்து நின்று பேசினார்:- "ஸுல்தானுல் ஆரிஃபீனே! தங்கள் அவையில் தோன்றிய அவர் யார்? அவர் எதற்காக இங்கு வந்து விட்டுப் போகிறார்?" என்று வினவினார்.



இறை நேச இளவல் அஃகுமத் கபீர் கூறிய பதில் அங்கு கூடியிருந்த அனைவரையும் ஆச்சரியத்திலே ஆழ்த்தியது. அவர்களில் கூறினார்கள்:- இளவல் அந்தப் பரமனின் பராபர ஏழைகளான ஃபக்கீர்களை குறித்து இறைவன் திருக்குர் ஆனில் பின் வருமாறு கூறியுள்ளாள்:-2:273

(விசுவாசிகளே! அத்தகைய தானம் சில) ஏழைகளுக்கே (உரித்தானது!) அவர்கள் அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்கென்றே தங்களை (முற்றிலும் அர்ப்பணஞ் செய்து) ஒதுக்கிக் கொண்டதால், (தங்கள் சொந்த வாழ்க்கைக்குத் தேடக்கூடப்)பூமியில் நடமாட சாத்தியப் படாதவர்களாக இருக்கின்றனர். (அன்றி, அவர்கள்) யாசிக்காததால்(அவர்களின் தரித்திர நிலையை) அறியாதோர், அவர்களைச் சீமான்களென எண்ணிக் கொள்கின்றனர். அவர்களுடைய (வறுமையின்) அடையாளங்(களாகிய ஆடை முதலானவை)களைக் கொண்டு, நீங்கள் அவர்களை அறிந்து கொள்ளலாம். அவர்கள் மனிதர்களிடத்தில் வருந்தியும் கேட்கமாட்டார்கள். (இத்தகைய ஏழைகளுக்கு) நீங்கள் நல்லதிலிருந்து எதைச் செலவு செய்த போதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறி(ந்து அதற்குரிய கூலியை உங்களுக்குத் தரு)வான்.

"வந்தவர் கிலிறு நபி அவர்களேதான், ஃபகீர், என்ற ஒரு வார்த்தையை நமக்கு உணர்த்துவதற்காக, இறைவன் மேல் கொண்ட நேசத்துக்காக, அவனை அடைய வேண்டும் என்ற காதலின் ஏக்கத்துக்காக,

"இந்த உலகின் நச்சரிப்புகள் என்ற சிறையிலிருந்து விடுதலையாகி மெய்ஞ்ஞான புறாவாக வானில் பறந்து இறைவனை அடைய வேண்டும் என்ற நோக்கமுடைய ஃபகீர்களின் வாழ்க்கை முறை இன்னதென்பதை போதிப்பதற்காக இறைவனின் உத்தரவு கொண்டு இங்கு வந்து விட்டுப் போகிறார்!."

திரைக்கு அப்பால் திரண்டிருந்த பெண்களின் கூட்டத்திலிருந்து ஒரு குரல் வந்தது. "ஃபக்கீர்கள் என்று தாங்கள் கூறும் இறை நேசப் பாதையில் பெண்களுக்கு இடம் உண்டா இல்லையா?."

சபையோர் அமைதி கொண்டிருக்க இளவல் பேசினார்கள்:- "ஃபக்கீர்கள் என்று பதத்துக்கு ஆண்பால் பெண்பால் என்ற பேதம் கிடையாது இல்லறம் துறவறம் என்ற நெறி முறையும் கிடையாது.

“கிடைத்ததை கொண்டு திருப்தியுடன் வாழ வேண்டும். எது கிடைக்காவிட்டாலும், எது கிடைத்தாலும் அது இறைவனைக் கொண்டு நடைபெறுகிறது என்பது மனதில் உறுதிப்பட வேண்டும்.

“இதுதான் ஃபக்கீரின் தன்மை. இதற்கான தரீக்காவை தொடங்கும் படி இறைவன் இன்று எனக்கு உத்தரவிடுகிறான்.” என்றார்கள் ஸுல்தானுல் ஆரிஃபீன்.

திரைக்கு அப்பாலிருந்து பேசியப் பெண் திரையை நீக்கி கொண்டு இளவலின் எதிரில் வந்தார்கள். “என்னை உங்களுடைய தரீக்காவில் இணைத்து கொள்ளுங்கள்.”

இப்போது இளவல் அஃகுமத் கபீர் மனதில் ஒரு திகைப்பு உண்டாகியது. அவர்கள் ஷைகு அலாவுத்தீன் அலீயுல் வாஸ்தி அவர்களிடத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பைஅத் செய்து கொண்டு ஞானப்பாதையில் புகுந்ததும் அப்பாதையில் இறை அற்புதங்களை அனுபவித்ததும் உண்மைதான்,

ஆனால் பெருமானார்(ஸல்) அவர்களிடமிருந்து சங்கிலித் தொடராக வரும் கிலாஃபத் என்னும் ஆன்மீகப் பிரதிநிதித்துவம் தனக்கு கிடையாதே. தான் எப்படி மற்றொருவருக்கு ஞானதீட்சை தந்து ஃபக்கீர்களின் வாழ்க்கை முறையை போதிக்க முடியும்?.

அவர்கள் கவலையோடு அமர்ந்திருந்த அடுத்த கணம், இளவலின் கண்ணுக்கு எதிரே பாட்டனார் ஹலரத் அலீ(ரலி) அவர்கள் சூக்கும காட்சி தந்தார்கள்.

“அஃகுமத் கபீரே! அன்பு பேரரே! உமது தாய் மாமனார் அஷ்ஷெய்கு மன்சூர் ரிஃபாயி இடமிருந்து கிலாஃபத்தை நீர் பெற்றுக் கொள்ளும்” என்று உத்தரவிட்டார்கள். பேரரை வாழ்த்திவிட்டு அலீ(ரலி) மறைந்தார்கள்.

அதிர்ச்சியுற்ற இளைஞர் அஃகுமத் கபீர் எதிரே கூட்டத்தோடு கூட்டமாய் ஓர் ஆசனத்தில் அமைதியாக அமர்ந்திருந்த மாமன் அஷ்ஷெய்கு மன்சூர்(ரலி) அவர்களை உருக்கமாகப் பார்த்தார்கள். மருமகர் கண்ட சூக்கும காட்சியைத் தானும் கண்டுவிட்ட, ஈராக்கின் பல திசைகளிலும் ஆயிரக் கணக்கான முரீது சீடர்களைப் பெற்றுள்ள ஸூஃபி மன்சூர் ரிஃபாயி மருமகருக்கு முன் வந்து நின்றார்கள்.



தன் பச்சை தலைப்பாகையைக் கழற்றி நீள வாட்டத்தில் இரண்டாகப் பிரித்து கிழித்து மருமகரின் சிரசில் சுற்றி, “இன்று உம்மை ரிஃபாயி தரீக்கத்தின் ஷெய்காக ஆக்கினேன்!. எம்பிரான் முகம்மத் (ஸல்) அவர்களிலிருந்து வரும் இந்த ஞான பாரம்பரியத்தில் உம்மை இணைத்து அவர்களின் ஆன்மீக கிலாஃபத்துக்குரிய அனைத்து உரிமைகளையும் உமக்கு வழங்கினேன்!” என்றார்கள்.

திரைக்கு அப்பாலிலிருந்து இறை நேசச் செல்வர் அஃமத் கபீரை, ஷெய்கு என்னும் ஞான குருவாக ஆக்க, பின்னாலிருந்து பண்ணிசைத்த சையிதா கதிஜா அடுத்த சில நாட்களில் ஷெய்கு மன்சூர் (ரலி) அவர்களால் ஸுல்தானுல் ஆரிஃபீனின் மனைவியாக்கப்பட்டார்.

படைத்தவன் எவனோ அவன் என்னை
மண்ணை பிசைந்தே படைத்துள்ளான்
கிடைத்த உருவம் இதனை நான்
கீலகமாக்கி ஒரு நாளில்
கொடுத்தவன் எவனோ அவனிடமே
கொண்டு சேர்ப்பேன் கபர் குழியில்
பிடித்த பிடிமண் தானா நான்
பிடித்த கையே என் கையா?
-ஸூஃபி மகான் இப்னுல் அரபி(ரலி)

## 11. ஞான தீட்சை

பொழுது நன்றாக விடிந்து விட்டது. புள்ளினங்கள் கூடுகளிலிருந்து புறப்பட்டு வெளியில் பறந்தன. கனிகளின் சுவையை மிஞ்சும் கானகப் பறவைகளின் காலை ஆராதனைப் பாடல்கள் வானத்தையும் பூமியையும் நிறைத்தன.

ஆனந்தம் அந்த கானக வனத்தில் குடி கொண்டிருந்தது. அது நீள வானத்தின் உச்சியிலும் கரைகளிலும், காற்றலைகளாகவும், அமைதியாகவும் அளவு கடந்து பிரவாகித்து ரிஃபாயா அரண்மனையைச் சுற்றியிருந்த வீடுகளிலெல்லாம் நிறைந்தது.

அன்று திருமணம் முடிந்து நாற்பதாம் நாள், மணமகன் அஃகுமத் கபீர், பஞ்சணையில் அமர்ந்திருந்தார்கள். கீழ் வீட்டிலிருந்து மேல் தளத்துக்கு வந்த மணப்பெண், ஈரக் கூந்தலுடனும், இதயத்தில் பூபாள ராகத்தோடும், கையிலே தேநீரை ஏந்தி சாந்தி அறைக்குள் நுழைந்தார்.

மணமகள் சையிதா கதிஜா கணவரின் அருகிலமர்ந்தார். பிறகு பேசத் தொடங்கினார்:- தேநீரை அவரிடம் தராமல் ஒரு கேள்வி கணையை அவர் மீது வீசினார்.

“ஆயிஷாவின் மைந்தரே, தங்களிடம் ஞான தீட்சையைத்தான் நான் கேட்டேன்.

“தாங்களோ தங்கள் பாசமாமனிடம் கூறி என்னை மணமுடித்துக் கொண்டீர்கள். நாற்பது நாட்கள் கடந்துவிட்டது.



“நானும் பார்க்கிறேன் தாங்கள் எனக்கு தீட்சைத் தருவதைப் பற்றி ஒரு வார்த்தைக் கூட பேசாமல் உங்கள் கவனத்தை எங்கோ வைத்திருக்கிறீர்கள், நேசரே இது நியாயமா?”

இளவல் அஃகுமத் கபீரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மனைவியின் கையிலிருந்த தேநீரை வாங்கி அருந்திவிட்டு சொன்னார்கள்:- “தீட்சை கொடுத்துவிட வேண்டுமென்றுதான் நானும் நாள் தோறும் முயற்சிக்கிறேன் கதிஜா உமது முகமலரைப் பார்த்ததும் என் எண்ணம் கலைந்துவிடுகிறதே!”

“ஹவாரிகுல் ஆதாத் என்ற அற்புதங்களின் ஆடையை என்மீது போர்த்திய ஆண்டவன், கதிஜா என்ற அற்புதத்தை காட்டி என்னை கவிழ்த்துவிட்டானே. இது நியாயமா? “அன்பரே நீர் என்னிடம் நியாயம் கேட்கிறீர், நான் அவனிடம நியாயம் கேட்கிறேன்”, இன்றிலிருந்து நான் கான்காவுக்குச் சென்று பாட போதனைகளைத் தொடங்கப் போகிறேன்!. என்னை வெளியில் அனுப்புங்கள் கதிஜா!.

“உங்கள் கால்களை நானா கட்டிப்போட்டேன்?”

“உங்கள் கண்கள்தான் என்னை கட்டிப் போட்டுள்ளன, இதில் என்ன சந்தேகம்?”

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து இருவரும் நகைத்துக் கொண்டார்கள்.

“போதும் நீங்கள் நாளைக்கு வேண்டுமானால் கான்காவுக்குப் போகலாம். இன்று எனக்கு போதனைகளை தொடங்குங்கள். ரிஃபாயா தரீக்கத்தின் ஷெய்காக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். எனக்கு இன்று தரீக்காவின் நோக்கத்தையும் செயல் முறையையும் போதியுங்கள். இரு கண்களையும் மூடி தியானம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களே! அதன் விளக்கம் என்ன கூறுங்கள்!.”

“நல்லடியார்கள் காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வாகியத் தங்கள் இறைவனை சிந்தித்து தியானிப்பார்கள். அவர்களின் கொள்விளை கொடுப்பினைகள் அவர்களின் கவனத்தை திருப்புவதில்லை.” என்று இறைவன் திருமறையில் கூறியுள்ளான்.

“கதிஜா உடலின் இயக்கத்தால் உயிரில் கலனம் ஏற்பட்டு உண்டாகும் இன்பம் இருக்கிறதே, அது சிற்றின்பம். லோகாயத சுகங்களைத் தாண்டி மனம் ஆன்மாவில் ஐக்கியப்பட்டு அமைதி கொள்வதின் விளைவு பேரானந்தம் அல்லது பேரின்பம்.

அற்ப ஜீவிகளான பறவைகளும், விலங்குகளும் சிற்றின்பத்தை அனுபவிக்கின்றன. ஆனால் மனிதன் அதனை ஒழுங்கு படுத்தி நிதானமாக அனுபவிக்கின்றன. ஆனால் விலங்குகளின் நிலையிலிருந்து வேறுபட்டு போகியான மனிதன், யோகியாகும் போது நான்

*யா அய்யத்துஹன் நஃப்சே முத்ம இன்னா*
*இலா ராளியத்துல் மர்ளியா*
*துர்ஜயி ஜன்னத்தி துர் ஜயிஃபி இபாத்*

என்று குர்ஆன் கூறுவது போல! சாந்தியடைந்த ஆன்மாவே அவன் உன்னில் பொருந்தியவனாகவும் நீ அவனில் பொருந்தியவனாகவும் சுவர்க்கத்தில் புகுந்து கொள் நல்லடியார்களுடன் கலந்துகொள் என்ற வசனம் கைகூடுகிறது.

இந்த மறை வசனத்தின் அந்தரங்கப் பொருள் நஃப்ஸ் என்னும் மனித மனமும் ஆன்மா என்ற ஆண்டவனும் ஒன்றோடொன்று பொருந்திக் கொள்ள அங்கு சுவர்க்கத்தின் பேரானந்த நிலை உண்டாகுமென்பதாகும்.

குடும்ப வாழ்விலும், பொது வாழ்விலும், தொழில் வியாபாரத்திலும், காதலிலும், பாசத்திலும் இடி விழுந்து நிலை குலைந்து நிற்கும் மனதுக்கு தியானமே மருந்து.

துன்பங்கள், தோல்விகள் அகற்றப்படவும், கவலைகள் கலையப்படவும் தியானமே துணையாகும்.

“ஷரீஅத்தின் சட்ட திட்டங்கள் கலிமா உறுதி மொழிதல், தொழுகை, நோன்பு, மார்க்கவரி, இறை இல்லப் பயணம் ஆகிய இவை மனிதனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இறையருளால் நன்மைகளை வாரித் தருகின்றன. மறுமையில் நரகத்திலிருந்து காப்பாற்றி, சுவர்க்கத்துக்கு மனிதனை இட்டுச் செல்கின்றன.

“தரீக்காவின் சட்டம் இறைநாம உச்சாடனம், இறை சிந்தனை, மௌன தியானம், இவற்றைக் கொண்டு மனிதன் தன்னை அறிந்து தன்னை படைத்த நாயனையே அடைந்துகொள்ள வழிவகுக்கும் பாதையாகும்!.”



இறை தியானத்தைப் பழகுபவர்களுக்கு காரண உடலுக்குண்டான அறியாமை விலகுகிறது, சூக்கும உடலுக்குண்டான மனநோய்கள் விலகுகிறது. கட உடலுக்குண்டான வாத பித்த சிலேத்தும் நோய்களிலிருந்து விடுதலை கிடைக்கிறது.

“மனிதனில் மிருகப் பண்புகள் ஒழிக்கப்பட்டு தெய்வீகப் பண்புகள் மேலெழுந்து, உடலைச்சுற்றி ஒளி உடல் ஒளிரத் தொடங்குகிறது.

“அல்லாஹ்வாகிய அவன் வானம் புவிகளின் ஜோதியாக இருக்கிறான், அவனது அந்த ஜோதி மாடத்தில் வைக்கப்பட்டுள்ள விளக்குக்கு ஒப்பாதையாகும், என்ற மறை வசனத்துக்கு ஏற்ப திக்ரு தியானம் செய்பவனின் இதயம் இறைவனின் ஜோதி ஏற்றப்படும் மாடமாகி விடுகிறது.

“எவர்கள் தங்கள் ஆன்மாவைப் பரிசுத்தப் படுத்தி ஒளிமயமாக்கி கொண்டார்களோ அவர் ஜெயம் பெற்றார்கள் என்ற பட்டியலில் அந்த மனிதன் இணைந்து விடுகிறான். ஆண்டவனுடைய நட்பிற்குரியவர்கள் அச்சமும் துக்கமும் அற்றவர்கள் என்ற மறை வசனத்திற்கேற்ப சலனமற்ற பேரமைதியும் அதிலிருந்து விளையும் பேரின்ப பேரானந்தமும் அந்த நல்லடியார்களுக்கு வரப்பிரசாதமாக கிடைக்கிறது.”

ஸுல்தானுல் ஆரிஃபீனான கணவரின் கருத்துள்ள வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியத்துடன் அமர்ந்திருந்த மங்கையர் கதிஜா, “அப்படியானால் பைஅத் ஞானதீட்சை என்பதென்ன?” என்று வினவினார்கள். அன்பர் பதிலளித்தார்கள்.

“அது இந்த பேரின்ப பாதையின் கதவுகளை திறந்து வைப்பது, ஆன்ம ஆலயத்தில் ஜக ஜோதியாக அமர்ந்திருக்கும் அண்ணல் முகம்மத்(ஸல்) அவர்களில் ஆதி அந்த மற்ற பராபரனான அல்லாஹ்வை தரிசிக்கும் விவேக வித்தையை விளக்கி வைப்பது.”

இப்போது கதிஜாவின் முகத்தில் ஸுல்தானுல் ஆரிஃபீனின் காதலி கதிஜாவின் முகத்தில், ஆனந்தம் படர்ந்தது. “ஆஹா இந்த இஸ்லம் என்ற மார்க்கத்தில் இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா?” என்று வியப்புடன் கூறிவிட்டு, அன்பரே அஃகுமத் கபீரே எனக்கு பைஅத் “பைஅத் என்ற ஞான தீட்சை உடனே தர வேண்டும்!” என்று சம்மணமிட்டு கணவரின் முன் அமர்ந்தார்கள்.

அந்த இளவளான ஸூஃபி மகான் ஸுல்தானுல் ஆரிஃபீன் கலகலவென்று சிரித்துவிட்டு "இல்லை அன்பே! என்னால் உமக்கு தீட்சை தர முடியாது கணவன் மனைவிக்கு ஞான தீட்சை தர தரீக்காவில் இடமில்லை. குருவுக்கும் சிஷ்யைக்கம் இடையே சிற்றின்பம் குறுக்கிடக்கூடாது" என்றார்கள்.

என்ன செய்வது என்று அதிச்சியுடன் அமர்ந்த அன்பு மனைவிக்கு நேச கணவர் ஆறுதலோடு விளக்கம் தந்தார்கள்.

"அன்பே கதிஜா! தாங்கள் எனது மாமா அஷ்ஷெய்கு மன்சூர் (ரலி) அவர்களிடம் ஞான தீட்சை பெற்று கொள்ளுங்கள். நம் திருமண வாழ்க்கையின் நாற்பது நாட்கள் கடந்து போய் விட்டதால் இன்று மாலையே மாமா அவர்களிடம் பணிந்து கேட்டு தங்களுக்கு ஞான தீட்சை தரச் சொல்கிறேன்."



காதல் மரணத் தூதுஇறை
காதலே போதுமென்றிருந்தால்
காதலே உயிரின் காவலனாம்!
காதல் போதும் இவ்வுலகம்
தீது! மறுமை அதும் தீதாம்!
தெய்வமே உந்தன் திருவடியில்
காதல் கொண்டேன் ஏற்றுக்கொள்
கருணை காட்டு அடிமையிடம்!
-ஸூஃபி மகான் இப்னுல் அரபி(ரலி)

## 12.சொல்லும் செயலும்

மாளிகைக்கு வெகு சமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த கான்காவில் அற்புத சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்கள் ரிஃபாயி நாயகம். ஆர்வமுள்ள பொது மக்களோடு உலமாக்களும் ஷெய்குமார்களும் விரும்பி வந்து நாயகத்தின் சொற்பொழிவு மன்றத்தில் இடம் பிடித்தனர்.

பல திசைகளிலுமிருந்தும் முரீது என்னும் ஞானதீட்சை வேண்டியர்களாக மக்கள் வந்த வண்ணமிருந்தனர். உலகத்துக்கு பெருமானார்(ஸல்) அவர்கள் வாழ்க்கை நெறியை எடுத்து உபதேசிப்பதே தனது கடமையென நாயகம் அவர்கள் கருதினார்கள். படைத்த பராபரனின் தேட்டத்தை படைப்பிணங்களின் இதயத்தில் ஊன்றுவதை தனது வாழ்க்கை இலட்சியமாக எடுத்துக் கொண்டார்கள்.

கான்காவிலிருந்தபடி மாணவர்களுக்கு திங்கள் மற்றும் செவ்வாய் தவிர மற்ற வார நாட்களில், ஷரீஅத் சட்ட விளக்கம், அகீதா என்னும் கொள்கை விளக்கம் மற்றும் தஃப்ஸீர் என்னும் திருமறை விரிவுரை பாடங்களையும் நடத்தினார்கள்.

திங்கள், செவ்வாய் கிழமைகளில் நகர மக்களுக்கும்,நாடி வரும் அறிஞர்களுக்கும் பொதுவான மார்க்க உபந்நியாசம் ஆற்றினார்கள். எப்போதும் முகத்தில் புன் முறுவல் பூத்தவர்களாகவே காணப்பட்டார்கள்.

நாயகம் அவர்களது ஒவ்வொரு மூச்சும், சொல்லும், செயலும், பழக்க வழக்கமும் அல்லாஹ்வுக்காகவே என்று காணப்பட்டது. பொறுமை, சகிப்புத்தன்மை, நன் நோக்கு, நாகரீகம், அடுத்தவர் யாரையும் அவதூறு கூறாமை, தனக்கென்று உதவி கேளாமை, தன்னையும் தன் குடும்பத்தாரையும் வேறு யாரையும்விட உயர்வாக கருதாமை, இவை அவர்களுடைய நற்பண்புகளாய் அமைந்திருந்தன.

உலகை அள்ளி வாரி கட்டுவதை அவர்கள் வெறுத்தார்கள், உண்டி பெருக்குவதையும் உறக்கம் மிகைப்பதையும் கண்டித்தார்கள். இரவு நேர விழிப்பு தொழுகை, அதிக நாட்களில் நோன்பு மேற்கொள்ள உபதேசித்தார்கள், தாங்களே பெரியவர் என்று தர்க்கம் புரிவோரிடமிருந்து விலகி விடுங்கள், என்று மக்களுக்கு போதித்தார்கள்.

தன் இல்லத்துக்கு தேவையான எல்லா வேலைகளையும் செய்வார்கள். கடைகளிலிருந்து கடை சாமான்களை வாங்கி வருவார்கள், விரகு சுமந்து வருவார்கள். நோயாளிகளையும், அனாதைகளையும் தேடிச் சென்று பராமரிப்பார்கள். குருடர்களுக்கு உதவி செய்வார்கள். முதியவர்களை கண்ணியப் படுத்துவார்கள், தேவையுடையோரிடம் இரக்கம் காட்டுவார்கள்.

குஷ்ட ரோகிகளை நேரில் சென்று பார்த்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுவார்கள். படுத்த படுக்கையாய் கிடப்பவர்களின் ஆடைகளை திருத்தி, ஆகாரம் தந்து அவர்களோடு அமர்ந்து அளவளாவி மகிழ்விப்பார்கள்.

அனாதைகள் மீது அதிகமதிகம் கருணை காட்டுவார்கள், ஏழைகளுக்கு இரங்கி அவர்களுக்காக தாங்களே குரல் கொடுப்பார்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியை சந்தோஷத்தை தர முயற்சி மேற்கொள்வார்கள். ஏழையோடு ஏழையாக தங்களை இணைத்துக் கொள்வார்கள்.

இஸ்லாமிய மார்க்க சட்ட ஞானிகளை மதிப்பார்கள். அறிஞர்களே சமுதாயத்தின் தலைவர்களும் அதன் அடித்தளமும் ஆவார்கள் என்று புகழ்வார்கள்.

அவர்களிடம் சொத்து சுகம் இருந்த போதும், வீட்டில் எதையும் சேகரித்து வைக்க மாட்டார்கள். உடுத்துவதற்கு இரண்டு ஆடைகளும், மாற்றுடையாக இரண்டு உடைகளும் மட்டுமே அவர்களிடத்தில் இருந்தது.



ஆளுநர்கள் அரசு அதிகாரிகள் ஆகியோரை விட நாயகம் அவர்களிடம் அசையா, அசையும் சொத்துக்கள் அதிகமிருந்தாலும் அவற்றிலிருந்து வருமானம் அனைத்துமே அவர்களால் பராமரிக்கப்படும் ஏழை எளிய ஆதரவற்ற அனாதைகள் மற்றும் நோயாளிகளுக்காகவே செலவிடப்பட்டது.

ஆயிரக் கணக்கை தாண்டிய போதும் அனைவருக்கும் விருந்தோம்பல் செய்வது அவர்களுக்கு இயல்பாகவும், எளிதாகவும் இருந்து வந்தது.

சில நாட்களில் விருந்தினர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தை தாண்டிவிடும். ஹஜ்ரத் ஸையத் அஃகுமத் கபீரின் கான்காவிலுள்ள அடுப்பங்கரையில் அவர்கள் அனைவருக்கும் உணவளித்து பசியாற்றுவது வழக்கம் என்றும் அக்கால கட்டத்தின் குறிப்புகள் கூறுகின்றன.

அல்லாமா இபுனு ஜவ்ஸி அவர்களின் குமாரர் அல்லாமா ஸம்சுதீன் அப்துல் முஸஃபர் யூசுஃப் அவர்கள் கூற்றுப்படி ஒருமுறை ஷஅபான் பிறை 15ல் நாயகம் அவர்களின் சபைக்கு தான் சென்ற போது,

அங்கு ஒரு இலட்சத்துக்கும் மேலானவர்களாக அவர்களின் அற்புத சொற்பொழிவை கேட்கவும், பராஅத் இரவின் அனுஷ்டாங்களை புரிவதற்காகவும், மக்கள் கூடியிருந்தனர். எனினும் நாயகம் அவர்கள் அதைப்பற்றி எந்தப் பெருமையையும் காட்டி கொள்ளாமல் அடக்கத்தோடும் அமைதியோடும் காணப்பட்டார்கள் என்று கூறியுள்ளா.

ஸுல்தானுல் ஆரிஃபீன் அஃகுமத் கபீர் நாயகம் அவர்கள் வாழ்ந்த காலத்தில், குருடர்களுக்கு பார்வையும், வியாதியஸ்தருக்கு நிவாரணமும், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றலும் பெற்றிருந்த உன்னதமான நான்கு இறை நேசர்களில் ஒருவராக கருதப்பட்டார்கள்.

நாடெங்கும் நாயகம் அவர்களின் கலிஃபாக்களான பிரதிநிதிகளின் கான்கா எனும் தியான மண்டபங்கள் நகரங்களிலும் சிற்றூர்களிலும் நிருவப்பட்டு செயல்பட்டு வந்தது.

மார்க்கத்தை பின்பற்றி நடத்தாட்டி வருவோரில், அவர்கள் மகா மேதையாக கருதப்பட்டார்கள். மறைந்துள்ள யாவற்றையும், சூக்குமமான உலகையும் அதன் ஜீவராசிகளையும் அவர்கள் நேரடியாக காண்கிறார்கள், வசப்படுத்தி கட்டளையிடுகிறார்கள் என்று மக்கள் நம்பினார்கள்.

நாயகம் அவர்களின் சபைக்கு ஒருநாள் ஒரு மகத்து வந்து புகுந்தார். பசியோடிருக்கும் அவரை உபசரிக்க உணவும் பதார்த்தங்களும் அவர்முன் பரத்தி வைக்கப்பட்டன. அவரோ "நான் இப்படியெல்லாம் அள்ளி அடைப்பவனல்ல, ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டும், அந்தி சாய்ந்து முன்னிரவில் சிறிது" என்று உண்ண மறுத்துவிட்டார் அவர்.

தற்பெருமையுடன் அவர் நாயகம் அவர்களிடம் "தாங்கள் எப்படி?" என்று அவர்களின் உணவுப் பழக்கத்தை விசாரித்தபோது, நாயகமவர்கள் அமைதியாக "ஆறு மாதத்துக்கு ஒருமுறை உணவுண்பது என் வழக்கம்" என்றார்கள்.

அந்த வார்த்தைகளை கேட்டு அதிர்ச்சியடைந்த கர்வம் பிடித்த மகத்து தன் இருக்கையில் தலை தாழ்த்திக் கொண்டு உட்கார்ந்தார்.

கான்காவுக்கு அருகிலுள்ள தோட்டத்தில், கான்காவின் பணியாளர் ஒருவரை, நீண்ட நாள் நண்பர் ஒருவர் வந்து சந்தித்தார். வந்தவர் "நண்பரே பல காலமாக ரிஃபாயி நாயகம்அவர்களின் பணியிலிருந்து வருகிறீரே, உமக்கு ஏதாவது அவர்கள் தந்திருக்கிறார்களா?" என்று வினவினார்.

கான்காவின் பணியாளரோ, "எனக்கென்று உலக ஆசை எதுவுமில்லையே நான் அவர்களை கேட்க, அவர்கள் எனக்குத் தர!" என்று விடை பகர, வந்த நண்பர், "அப்படியானால் அன்பரே நம் இருவருக்கும் மறுமையில் நரகத்திலிருந்து விடுதலை வேண்டுமென்று இறைவனிடத்தில், நாயகம் அவர்களின் ஸுல்தானுல் ஆரிஃபீன் என்ற நற்பெயரை முன்வைத்து கேட்டால் இறைவன் தந்து விடுவானோ?" என்று வேடிக்கையாக கேட்டார்.



அடுத்த கணம் அங்கு ஒரு சுழற் காற்று வீசியது. காற்றில் பறந்து வந்த ஒரு ஓலை அவர்கள் முன் வந்து விழுந்தது. அவர்கள் அதை எடுத்து அதன் மீது எழுதப்பட்டிருந்ததைப் படித்த போது இருவரும் திகைத்தார்கள். அந்த ஓலையில் அவர்கள் இருவரின் பெயரும் எழுதப்பட்டிருந்தது. ஸுல்தானுல் ஆரிஃபீன் அவர்களின் முகத்துக்காக அவர்கள் இருவரும் நரகத்திலிருந்து விடுதலை செய்யப்படுவதாகவும், சொர்க்கத்தில் இருவருக்கும் இடம் போடப்பட்டிருப்பதாகவும் அதில் எழுதியிருந்தது.

*மண்ணில் என்னை புதைக்கின்றாய்*
*மறுபடி மறுபடி எழுப்புகிறாய்*
*விண்ணில் மண்ணில் கண்கட்டு*
*விளையாட்டில் எனை விரட்டுகிறாய்*
*எண்ணிலா காலம் இப்படித்தான்*
*இங்கும் அங்கும் அலைகின்றேன்*
*அந்நியனாகவே உணர்கின்றேன்*
*அரவணைத்திடுவாய் ஆண்டவனே!*
*-ஸூஃபி மகான் அபு ஸையிது(ரலி)*

## 13. அணிவகுத்த அற்புதங்கள்

கான்காவின் முற்றத்தில் ஏராளமான பொது மக்களும் மகான்களும் கூடியிருந்தனர். எத்தனை பேர் கூடியிருந்தாலும் கூட்டம் கான்காவைத் தாண்டி அதன் முற்பகுதியில் அமைந்திருந்த தோட்டத்துக்கு சென்றடைந்தாலும், சொற்பொழிவு படிக்கட்டில் அமர்ந்தும், நின்றும் பேசிய ரிஃபாயி நாயகத்தின் குரல் கூடியிருக்கும் ஆயிரம் பல்லாயிரக் கணக்கானோர் காதுகளில் சென்று விழும்.

அன்றைய தினம் வானம் வெளுத்துக் கிடந்தது. வசந்த காலத்தின் வருகையில் சுற்றுப்புறச் சூழல் ரம்மியமடைந்திருந்தது. கான்காவை சுற்றியமைந்த கொடி வீடுகள் படர்ந்த வாசமலர்கள் பூமியை இனிய மணத்தால் நிரப்பியிருந்தன.

கான்காவுக்கு வெளியே அமைந்த மன்றிலிருந்து திடீரென பரபப்பு எழுந்தது. வெளியிலிருந்தவர்கள் வானத்தை நோக்கி வெறித்துப் பார்க்கத் தொடங்கினர். மேகத்திலிருந்து குதிப்பது போல் ஒரு மகத்து தரை மீது வந்து விழுந்தார். அந்த அதிசய மனிதர், மக்கள் கை கொடுக்கும் முன் எழுந்து கொண்டனர்.

பின்னர் வேகமாக கான்காவில் புகுந்து பிரசங்க மேடையை சென்றடைந்தார். நாயகத்தின் முன்பு சென்று "அஸ்ஃகுமத் கபீரே! நான் பசித்தவனாக இருக்கிறேன். என் வயிற்றுக்கு சிறிது உணவு தருமாறு வேண்டுகிறேன்." என்றார். நாயகம் அவர்களோ "உமக்கு என்ன உணவு வேண்டும் என்று என்னிடத்தில் கூறும்?" என்று வினவினார்கள்.

கூட்டத்தினர் பார்த்துக் கொண்டிருக்க வந்த மனிதர் வானில் அப்போது பறந்து கொண்டிருந்த சில செங்கால் நாரைகளை சுட்டிக் காட்டி அவற்றில் ஒரு பறவையைப் பொரித்து, கோதுமை ரொட்டியோடு ஒரு குவளை குளிர்ந்த நீரும் வேண்டுமென்று கேட்டார்.

ஆண்டகை அவர்கள் கையை நீட்டினார்கள். அடுத்த சில கணத்தில் ஒரு மரவையில் பொரித்த பறவை இறைச்சியும், கோதுமை ரொட்டியும், குவளை குடிநீரும் வந்திறங்கியது. அதை அவர்கள் கையேந்தி அந்த மனிதர் முன் வைத்தார். அவர் உண்டு, நீரருந்தி அங்கிருந்து புறப்பட்டு வெளியில் போகுமளவும் கூடியிருந்தோர் அந்த விசித்திர நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் புறப்பட்டுச் சென்றதும், நாயகமவர்கள் வானத்திலிருந்து வந்திறங்கிய மரவையை தன் பிரம்பால் தட்டினார்கள். பொரித்தப் பறவையின் எஞ்சியிருந்த எலும்புகள் ஒன்றினைந்து, உயிர்ப்பறவை அனைவரின் கண்ணெதிரிலும் மேசையின் மீது அமர்ந்து பின் வான் நோக்கி பறந்தது.

"அவர்யார்? வந்து சென்றவர் யார்?" என்று மக்கள் வினவத் தொடங்கியபோது நாயகம் பதில் கூறினார்கள்,"அவர் இஸ்ராஃபீல். காற்றுக்கும் மழைக்குமான வானவர் தலைவர். பேய் காற்றும் பெருமழையும் புகுந்து நமது நகரத்தை பாழாக்கி உயிர்களை கொன்று குவித்துப் போட அவர்மீது ஒரு உத்தரவு இருந்தது.

"அவருக்கு நான் விடுத்த வேண்டுகோள் காரணமாக, மழை காற்றை விலக்கி விட்டு நம் கண்முன் தோன்றி நாம் அளித்த விருந்தை உண்டு விடைபெற்று சென்றுவிட்டார்!."

நாயகம் அவர்கள் அளித்த அந்த விளக்கத்தில் மக்கள் வியப்பின் எல்லைக்கு சென்றார்கள். "எல்லாம் வல்லவன் ஆண்டவன் அறிந்து அவனை அவனுடைய அடியார்கள் கூட்டத்தில் சென்றடைவதை வாழ்க்கை லட்சிய மாக்கி கொள்ளுங்கள்", என்று மக்களுக்குச் உபதேசம் புரிந்தார்கள் ரிஃபாயி நாயகம்!.

* * * * * *


www.netsufi.com

எண்ணிலடங்காத அற்புதங்கள் நாயகம் அவர்களுடைய சந்நிதானத்தில் நிகழ்ந்து கொண்டே இருந்தன. ஒருநாள் நண்பகலில் ஷத்தல் அரப் ஆற்றின் கரையில் நாயகம் தன் நண்பர்களோடும், மாணவர்களோடும் அமர்ந்திருந்தார்கள். நீண்ட நேர கலந்துரையாடல்களுக்குப் பிறகு மதிய உணவருந்துவதற்காக உட்கார்ந்தார்கள். அந்நேரம், ஹஜ்ரத் அஹ்மத் ஷத்னு என்ற தோழர் "தஜ்லாவின் மீன்கள் சுவையானவை", என்று கூறிவிட்டு ஆற்றின் நீரோட்டத்தைப் பார்த்தார்.

அவருடைய மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட ஆண்டகை அவர்கள் தம் கையை ஆற்றின் புறமாக நீட்டவே, பெரிய மீன்கள் கரை மீது வந்து விழுந்தன. சீடர்கள் சிலர் அவற்றை பொறுக்கியெடுத்து சுத்தம் செய்து பொரித்து அனைவருக்கும் பரிமாறினார்.

விருந்து முடிந்ததும் நாயகம் அவர்கள் மீன்களின் முட்களை வாரி குவிக்கச்செய்து, "அல்லாஹ்வின் உத்தரவு! ஆற்று மீன்களே உயிர்பெற்று எழுந்து, நீர் நிலைக்குள் பாய்ந்து சென்று விடுங்கள்" என்று உத்தரவிட்டார்கள். அடுத்த கணம் தரை மீது வந்து விழுந்த அத்தனை மீன்களும் உயிர் பெற்றெழுந்து ஆற்றுக்குள் பாய்ந்தன.

* * * * * * *

ஒருநாள் மாலை நேரம் அபுல் ஹஸன் அலீ என்ற நாயக்தின் மருமகர், கான்காவின் வெளிப்புற கதவோரம் அமர்ந்திருந்தார். உள்ளே நாயகம் அவர்கள் மட்டும் தனியே அமர்ந்திருக்க, இருவர் சம்பாஷிக்கும் பேச்சு குரல் கேட்டு, கான்காவின் உள்ளே எட்டிப் பார்த்தார்.

யாரோ ஒரு புதிய மனிதர் நாயகத்துடன் பேசிக் கொண்டிருந்தார். பிறகு அவர் புறப்பட்டு சன்னல் வழியாகப் பறந்து வெளியேறினார். அபுல்ஹஸன் அலீ எட்டிப் பார்த்து ஆச்சரியத்தோடு விசாரிக்கவே, ரிஃபாயி நாயகம் விளக்கம் தந்தார்கள்.



"இவர் தற்காலம் உயிர் வாழும் இறை நேசர்களில் ஒருவர். அட்லாண்டிக் சமுத்திரத்தை (பஹ்ர மூஹீத்) பரிபாலிக்கும் பொறுப்பில் இறைவனால் அமர்த்தப்பட்டிருக்கும் நால்வரில் ஒருவர் இவர். அண்மையில் பெய்த பேய் மழையால் இவர் தங்கியுள்ள தீவில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இவர் தன் மனதில் இந்த பேய்மழை வேறு எங்காவது பெய்து பயன் தரலாமே என்று நினைத்தார்.

"அடுத்த கணம் இவருடைய பதவி பிடுங்கப்பட்டு விட்டது. தனது தவறுக்கு வருந்தி மன்னிப்பு கேட்பதற்காக வந்து விட்டு செல்கிறார்." என்று நாயகம் விளக்கம் அளித்தார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள் "அல்லாஹ்வுடைய சந்நிதானத்தை நெருங்கும் எந்த ஒரு மகத்துவுக்கும் இறை அச்சதம் அதிகரிக்க வேண்டும். அவனுடைய நாட்டத்தில் குறுக்கிடும் யாரையும் அவன் சகித்து கொள்ள மாட்டான்" என்று விளக்கம் தந்தார்கள். "அதுவும் அவன் நெருக்கத்தை அடைந்திருக்கும் நல்லடியார்களுக்கு தண்டனை உண்டாகி விடும்" என்றார்கள்.

* * * * * * *

ஷேக் இமாம் அபு அப்துல்லா என்ற பெரியார் ஒருமுறை உம்மு உபைதாவிலுள்ள கான்காவில் வந்து தங்கினார்.மறுநாள் உபந்நியாச நிகழ்வில் கலந்துகொண்ட அவர், சொற்பொழிவு ஆற்றி கொண்டிருந்த ரிஃபாயி நாயகம் அவர்களிடம், "எஜமானே, முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி நாயகம் அவர்களின் பெருமைகளைப் பற்றி சற்றே எடுத்து கூறுங்கள்" என்றார்.

ஆனால், அந்த கூட்டத்தில் அமர்ந்திருந்த தோழர்களில் ஒருவர் எழுந்து அபு அப்துல்லாவை கண்டித்தார், இது அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகத்தின் மன்றம் இங்கு மற்றவர்களைப் பற்றி பேசுவதற்கு இடமில்லை என்று கடுகடுத்தார்.

ரிஃபாயி நாயகம் அவர்கள் கடும் கோபமடைந்தார்கள். சபையில் எழுந்து குறுக்கிட்டுப் பேசியவரைப் பார்த்து முறைத்தார்கள். அடுத்த கணம் அந்த மனிதன் அடித்து சாய்ந்து மரணித்து கீழே விழுந்தான்.

நாயகம் அவர்கள் அடுத்து ஹஜ்ரத் முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) அவர்களின் பெருமைகளைப் பற்றி கூறினார்கள். “ஹஜ்ரத் முகியித்தீன் ஆண்டகை அவர்களுக்கு வலப்புறம் ஷரீஅத் என்ற கடலும், இடப்புறம் ஹக்கீகத் என்ற கடலும் புறண்டோடுகின்றன.

“அவர்களுடைய வல்லமையைப் பற்றி பேச இந்த கூட்டத்தில் எவருக்கு சக்தி உள்ளது? அவர்கள் அடைந்துள்ள சத்தியத்தின் உச்சநிலையை வேறு யார்தான் அடைய முடியும்? அல்லாஹ்வின் நேசர்களில் அவர்களுக்கு நிகர் அவர்களேதான்!.”

ரிஃபாயி நாயகம் அவர்கள், ஹஜரத் முகயித்தீன் ஆண்டகை அவர்களைக் குறித்துப் பேசிய இந்த வார்த்தைகளை மறுப்பதற்கு பூமியில் எவரும் எக்காலத்திலும் தோன்ற முடியாது.

அன்று இரவில் வெகுநேரம் கான்காவிலேயே தனிமையில் அமர்ந்திருந்த ரிஃபாயி நாயகம் பின்னிரவில் மாளிகையிலிருந்த தம் இல்லத்தினரிடம் சென்றார்கள். மனைவி சையிதா கதிஜாவையும், ஃபாத்திமா, ஜைனபு ஆகிய இரு மருமகளாரையும் அணைத்து மகிழ்ந்து, அவ்வாண்டு ஹஜ் செய்யப் பயணிக்க விரும்புதாக கூறி விடை பெற்றார்கள்.

புனித ஹஜ்ஜின் கடைமைகளை நிறைவேற்றிவிட்டு அண்ணலெம் பெருமானார்(ஸல்) அவர்களின் ஜியாரத் தரிசனத்துக்கு சென்றபோது நடந்த அற்புதம், அவர்கள் வாழ்க்கையில் நடந்த அற்புதங்களுக்கெல்லாம் மேலான அற்புதமாக அமைந்தது.

பெருமானார்(ஸல்) அவர்களின் சந்நிதானத்தில் மரியாதையுடன் கை கட்டி நின்று கொண்டு அவர்கள் நாவு பின் வரும் கவிதையை இசைத்தது:-

*“நான் தூரத்தே இருந்த போதெல்லாம்*
*தங்கள் சமாதியை முத்தமிடுவதற்காக*
*என் ஆன்மாவை அனுப்பிவந்தேன்!“”*
*ஆன்மாவை உடலில் ஏந்திய படி*
*இப்போது உங்கள் சமூகம் வந்திருக்கிறேன்!*
*என் உயிரினும் மேலானவர்களே*
*தங்கள் கரங்களையாவது என்*
*கண்முன் காட்டுங்கள்*
*நான் முத்தமிட்டு என் இதய தாகத்தை*
*ஆற்றிக் கொள்வேன்!” என்றார்கள்.!**



அடுத்த கணமே எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மஜாரிலிருந்து வலது கரம் வெளியில் வந்தது. ஹாஜிகள் கூட்டம் கூட்டமாக அக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க, எஜமான் ரிஃபாயி நாயகம் எம்பெருமானின்(ஸல்) வலது கரத்தை முத்தமிட்டு கண் குளிர்ந்தார்கள். அடுத்த மணித்துளிகளின் அப்புனித கரம் சமாதிக்குள் மறைந்தது.

* ஃபீ ஹாலத்தில் புவுதி ரூஹி குந்து உர்ஸிலுஹா துகப்பிலுல் கம்ர மின்னீ வஹிய நாயிபதி

பஹாதிஹி ஹாலத்துல் அஷ்பாஹிகத் ஹலரத் பம்துத் யமீனக கைதுஹ்லா பிஹா ஷபதி.

உடலில் உணர்ச்சி உள்ளவரை
உல்லாசத்தில் மன ஓட்டம்
விடலைப் பருவ விளையாட்டில்
விருப்பம் முதிய வயதினிலும்
கடலில் கரைந்த புளி போல
கால கடலில் கரைவேனால்
அடுத்து என்ன செய்வேனோ
அறிந்தவர் உலகில் உள்ளாரோ?
-ஸூஃபி மகான் இப்னுல் அரபி (ரலி)

## 14. கானகத்தில் ஆற்றிய கடுந்தவம்

'பசித்திரு தனித்திரு விழித்திரு!' என்பதுதான் மாபெரும் ஞானிகளின் தவ வேள்வியின் விளக்கம். உலகம் தோன்றிய காலத்திலிருந்து படைத்த இறைவனை நாடித்தேடும் ஞானிகளெனும் மேலான மக்கள், எல்லா நாடுகளிலும் அனைத்து மதத்திலும், இனத்திலும் மொழியிலும் பிறக்கிறார்கள்.

உலகம் கண்ட மாபெரும் ஞான மகான்களின் வரிசையில் தோன்றிய எஜமான் ரிஃபாயி நாயகம் நாற்பத்தி இரண்டாம் வயதில் கானகம் சென்று தவ வேள்வி மேற்கொள்ள முடிவெடுத்தார்கள்.

கானகம் நோக்கி புறப்படும் முன், கான்காவின் பொறுப்பை தனது மருமகன் இபுறாகிம் அக்ரபு என்பவரிடம் ஒப்படைத்தார்கள். தன்னால் நிறுவப்பட்டுள்ள ரிஃபாயி அஹ்மதியா தரீக்காவின் முதல் கலீஃபாவாக அவரை நியமித்தார்கள்.

அவர்களுடைய நோக்கம் பாக்தாத்தில் வாழும் மகான் ஸையிதினா முஹயித்தீன் அப்துல் காதிர் ஜீலானி நாயகம் நடந்து அலைந்த ஈராக்கின் கிர்க் காடுகளில் அலைந்து திரிய வேண்டும், அவர்கள் எலும்பும் தோலுமாக ஊணுறக்கம் தவிர்த்து உட்கார்ந்து தவம் புரிந்த கிஸ்ரா பழங்கோட்டையில் சென்று அமர வேண்டுமென்றும் விரும்பினார்கள்.

புறப்படும் முன் கான்காவில் கூடியிருந்த சீடர்களிடையே உபதேசித்த விசயங்கள் உன்னதமானவை:-



முஸாஹதா என்பதின் பொருள், அழியும் உலகில் அழியாத மெய்ப்பொருளை தரிசிப்பதாகும். ஆண்டவனின் திரு நாமங்களிலும் தியானத்திலும் வீரத்துடன் நிலைப்பது முஜாஹதா என்றார்கள்.

தன்னிலும் தன்னைச் சுற்றிலும் நிகழும் சம்பவங்கள் அனைத்தும் அல்லாஹ்வாகியப் பரம்பொருளைக் கொண்டு நிகழ்கிறது, அனைத்தையும் அவன் பார்த்து கொண்டிருக்கிறான் என்ற உறுதியுடன் அவன் பார்வையில் நமது பார்வையை இணைப்பது முராகபா என்றார்கள்.

புலன்களின் இச்சைகளை அடக்கி, பிரபஞ்சத்தின் நாடகத்தை திரஸ்கரித்து இறைவனை நோக்கி முகம் திரும்பி கொள்வதுதான் முஹாஸரா என்பதாகும்.

தோற்றப்படும் காட்சிகளெல்லாம் பொய், உள்ளிடை வெளிப்படையான அனைத்திலும் ஆண்டவனாகிய அல்லாஹ்வை தரிசிப்பது தான் முஷாஹதா, காண்பவனுக்கும் காட்சிக்கும் இடையே திரைகள் நீங்கி ஏகத் தெரிசனைப் பெறுவது முகாஷபா. பட்டப் பகலில் கண்ணெதிரே மலைக்குன்றை காண்பது போல படைத்த நாயனை கண்குளிர தரிசிப்பது முஆயினா என்றார்கள்.

பஸ்ராவைச் சுற்றியுள்ள கானகப் பகுதிகளிலும், கிஸ்ராவிலும், கிர்க் வனத்திலும் பன்னிரெண்டு ஆண்டுகள் தவம் புரிந்ததாக வரலாறு கூறுகிறது. ஆனால், ஆண்டுக்கு ஒருமுறை யேனும் தன் இல்லத்துக்கு திரும்பி வருவது அவர்களுக்கு சௌகரியமாக இருந்தது. அமைதி நிறைந்த அந்த நாட்களின் முடிவில் கிஸ்ரா கோட்டையில் அவர்கள் அமர்ந்திருந்தபோது,

பாக்தாதிலிருந்து கம்பீரமான முழக்கத்தை கேட்டார்கள், பாபுல் அஸஜில் பெருங் கூட்டமாக கூடியிருந்த மக்களிடையே முஹ்யித்தீன் அப்துல் காதில் ஜீலானி ஆண்டகை அவர்கள் முழங்கினார்கள்.

“இறை நேசர்கள் ஒவ்வொருவரின் தோள்களின் மீதும் என்னுடைய பாதங்கள் பதியப்படும்”. கௌதுகள் நாயகத்தின் குரல் கேட்ட ரிஃபாயி நாயகம் “எஜமானே தங்களுடைய புனிதப் பாதங்கள் இந்த சின்ன அஃகுமதின் தோள்களின் மீதும் உண்டாகட்டும்” என்று கூச்சலிட்டார்கள்.

கௌதுனா அவர்களின் சூக்கும தோற்றம் விரைந்து வந்த, ரிஃப்பாயி நாயகம் அவர்களின் தோளில் பாதம் பதிந்தது,ரிஃப்பாயி நாயகம் பணிந்து கண்ணீருகுத்த நிலையில் வானத்திலிருந்து அசரீரி ஒலித்தது.

“அஃகுமத் கபீரே உமது தவத்தை ஒப்புக் கொண்டோம், உமக்கு ‘ஸுல்தானுல் ஆரிஃபீன்’ என்ற நற்பெயரை நமது சமூகத்திலிருந்து இன்று சூடினோம்.”

எஜமான் ரிஃப்பாயி நாயகம் கானகம் நீங்கி பஸ்ராவை நோக்கிப் பயணப்பட்டார்கள். பயணப்பாதைகளில் பல்வேறு ஜீவராசிகள் தன்னை ‘ஸுல்தானுல் ஆரிஃபீன்’ என்று பெயர் கூறி அழைப்பதையும், இசைப்பதையும் கவனித்தார்கள்.

---

அரஃபாத்தில் ரிஃப்பாயி நாயகம் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்த ஒரு நற்பொழுதில் இறைவன் ரிஃப்பாயி நாயகத்தை யா ஸுல்தானுல் ஆரிஃபீன் என்று அழைத்ததாகவும், உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோழர்களுடன் அங்கு தோன்றி அவர்களை ஆசிர்வதித்ததாகவும்சில நூல்களில் கூறப்பட்டுள்ளது.

---

## ஃபாஸ் அன் ஃபாஸ்
## திக்ரே கபி தியான மூச்சுப் பயிற்சி

“யா முகியித்தீன்” என்று 111 தடவை சொல்லி “ஹிஸ்” என்று உச்சரித்து இரு கண்களையும் பொத்திக் கொண்டு திக்ரு தியான பயிற்சியை தொடங்க வேண்டும்.

‘லாயிலாஹா இல்லல்லாஹ்’ என்று இருப்பில் இருந்த படி 300 தரம் திக்ரு செய்ய வேண்டும். அந்த நேரத்தில் ஆலமாகிய அகிலங்கள் அனைத்தையும் அதிலுள்ள படைப்பினங்கள் அனைத்தையும் அழித்து ஒன்று படுத்தி அல்லாஹ்வில் ஏகத்துவப்(தௌஹீத்)படுத்த வேண்டும்.

பின்பு, தன்னிலிருந்து ‘அல்லாஹ்’ என்று மூச்சு புறப்பட்டு வந்தால் தன்னிலுள்ள தசை, எலும்பு, நரம்பு,தோல் அனைத்தும் அல்லாஹுவில் அழித்து, ‘முஹம்மத்’ என்பதாக அதில் நாட்டம் வைத்து இரண்டையும் ஒன்றாக்கி, சாதகன் தன்னுடைய மூச்சிலும்



பேச்சிலும் செயல்பாடுகளிலும் தரிப்பாடாயிருப்பதைக் கொண்டு, அவனிலிருந்து மலக்கூத்துடைய அதாவது ஆன்மாக்களுடைய உலகம் வெளிப்படும்.

‘காலல்லாஹு தஅலா ஃபத்குருனி அத்குருகும் வத்குரு ஃனி வலா தக்ஃபுரூன வதுகுருல்லாஹ கதீரன் லாஅல்லக்கும் துஃப்லிஹூன்’.

‘வகாலல்லாஹு தஅலா லிஅஹ்தில்லாஹி லிநூரி மன்யஸாவு’

### ஃபாஸ் அன் ஃபாஸ் பூரஹ ரேஸஹ கும்பஹ மூச்சுப் பயிற்சி.

இந்த மூச்சுப்பயிற்சியில் ஃபனா என்னும் நாஸ்தியும், பகா என்னும் நிலை நிறுத்தலும் உண்டு. அதாவது ‘லாயிலாஹ’ என்று புறப்படுகிற மூச்சை வெளிப்படுத்தி ‘இல்லல்லாஹ்’ என்று இருதயத்தின் உள்ளே புகுத்தி திக்ரு செய்ய வேண்டும்.

இதன் பிறகு ‘அல்லாஹ் அல்லாஹ்’ என்று போகிற மூச்சிலும் உள்வாங்கும் மூச்சிலும்,வைத்து பயிற்சி செய்து வரவேண்டும். இந்த பயிற்சி கை வந்த பின் உள் மூச்சிலும் வெளி மூச்சிலும் ஹூ என்கின்ற திக்ரை இணைத்து பயிற்சி செய்து வரவேண்டும். இதன் பிறகு வஹுதத் என்கின்ற ஒருமையில் கத்ரத் என்கின்ற பன்மையை சுஹுது சிந்தனை செய்து வர வேண்டும்.

‘அல்லாஹூ அல்லாஹூ’ என்பது போகிற வருகிற மூச்சில் பிரபஞ்ச பன்மையை சிந்தித்து வருவதாகும். ‘ஹூ அல்லாஹ் ஹூ அல்லாஹ்’ என்று போகிற வருகிற மூச்சில் உச்சரித்து வருவது. அல்லாஹுத்தஅலா ஏக உள்ளமையானவனாக இருந்து, பற்பல பொருள்களிலும் வெளியாகியிருக்கின்றான் என்று அறிந்து, உணர்ந்து, தரிசித்து வர வேண்டும்.

இவ்வாறு அறிந்து உணர்ந்து திக்ரு தியானம் செய்யாவிட்டால் கல்பு ஹுஹூரு என்னும் இதயக்குளுமை உண்டாவது இல்லை. நூர் என்னும் ஜோதியும் ஹக் என்னும் மெய்ப்பொருளும் வாசில் ஆக வாய்ப்பில்லை.

எனவே, வகுதத் கதுரத் என்கின்ற, ஏக உள்ளமை படைப்பின் பண்மையில் வெளிப்படுதல் என்கின்ற, மெய்யை உணர்ந்து அறிந்து திக்ரு தியானம் செய்வது அனைவரின் மீதும் கடமையாகும்.

* * * * * * *

ஷரீஅத்தின் நான்கு பீர் எனும் குருமார்கள்

1. பீர் குத்புல் அஃலம்
2. பீர் ஷாஹ்மதார் பதீவுத்தீன்
3. பீர் சுஹரவர்தி சஹாபுத்தீன்
4. பீர் காதிர் முகியித்தீன்

தரீக்கத்தின் நான்கு பீர் என்னும் குருமார்கள்

1. பீர் அப்துல் கரீம்
2. பீர் அப்துல் ரஹீம்
3. பீர் அப்துல் ரஷீத்
4. பீர் அப்துல் ஜலீல்

ஹக்கீக்கத்தின் நான்கு பீர் என்னும் குருமார்கள்

1. பீர் அபுபக்கர் சித்தீக்
2. பீர் உமர் இப்னுல் கத்தாப்
3. பீர் உதுமான் இப்னு அஃப்பான்
4. பீர் அலீ இப்னுல் அபீதாலிப்

மஹ்ரிபாவின் நான்கு பீர் என்னும் குருமார்கள்

1. பீர் ஜிப்ரீல் (அலை)
2. பீர் மீக்காயில் (அலை)
3. பீர் இஸ்ராஃபில் (அலை)
4. பீர் இஜ்ராயில் (அலை)

திக்ரின் வகை

1. ஷரிஅத் ஜிக்ரு ஜல்லி - இமாம் ஹஸைன் (ரலி)
2. தரீக்கத் ஜிக்ரே கல்பி - இமாம் ஹுஸைன் (ரலி)
3. ஹகீகத் ஜிக்ரே ரூஹி - இமாம் ஹஸன் பஸரி (ரலி)
4. மஹரிபத் ஜிக்ரே சிர்ரி - இமாம் உவைசுல்கர்னி (ரலி)



ஷரீஅத் :- முஸ்லிம்
தரீகத் :- மூமீன்
ஹகீகத் :- ஒலியுல்லா
மஹ்ரிபத் :- நபி

நாஸூத்துடைய திக்ரு- லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்.
மலக்கூத்துடைய திக்ரு- லாயிலாஹ இல்லல்லாஹ்
ஜபரூத்துடைய திக்ரு- அல்லாஹ் அல்லாஹ்
லாகூத்துடைய திக்ரு- ஹூஹூ

ஷரீஅத்துடைய வேதம்- இன்ஜில், நபி ஈசா (அலை)
தரீக்கத்துடைய வேதம்-தவ்ராத், நபி மூஸா (அலை)
ஹகீகத்துடைய வேதம்- ஜபூர், நபி தாவூத் (அலை)
மஹ்ரிபத்துடைய வேதம்- குர்ஆன் நபி முஹம்மத் (ஸல்)

ஷரீஅத்துடைய கலீமா- 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'.
தரீக்கத்துடைய கலீமா- 'லாயிலாஹ இல்லல்லாஹ் லாமஅபூத இல்லல்லாஹ் லா மத்லூப இல்லல்லாஹ் லா மக்ஷூத இல்லல்லாஹ் லா மவ்ஜூத இல்லல்லாஹ்'.
ஹகீகத்துடைய கலீமா - 'லாயிலாஹ இல்லல்லாஹ் ஹூ ஹூ'.
மஹ்ரிபத்துடைய கலீமா - 'லாயிலாஹ இல்லல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ், அல்லாஹ் ஹக் ஹக் ஷமீவுன் பஷீருன் அலீமுன்'.

லாயிலாஹ் என்கின்ற திக்ரை எத்தனை விடுத்தம் ஓதினாலும் அத்தனையும் துன்யாவினுடைய பரக்கத்தை அதாவது உலகத்துடைய வாழ்வை கொடுக்கும். ஹயாத் என்கிற ஆயுளை நீடித்து வைக்கும், சொர்க்க லோகத்தின் அளவில் மனிதர்களை ஏற்றி வைக்கும், அல்லாஹ்வுடைய தீதார் என்கின்ற தரிசனத்தை காட்டும்.

அல்லாஹ் என்கின்ற திக்ரு, கல்பாகிய இதயத்தை தரிப்பாடாக்கி வைக்கும். ஹூ என்கிற திக்ரு, சிர்ரு என்னும் தெய்வ இரகசியத்தை தரிப்பாடாக்கி வைக்கும்.

கலிமாவின் ஷரத்துகள்:-

"லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹி"

1. இதனை நாவினாலேயே உச்சரித்து மனதினால் நினைப்பது,

2. நாவினால் உச்சரிப்பது போல இதயமென்னும் கல்பால் உச்சரிப்பது,

3. அகக்கண் கொண்டு அல்லாஹ் என்னும் எழுத்துக்களை பிரித்து அறிகிறது,

4. தன்னுடைய கல்பாகிய இருதயத்தை தானே உற்று நோக்குவது.

5.கலிமாவைக் கொண்டு மூச்சையும், பார்வையையும், நினைவையும் ஒருமிப்பது.

**கல்பின் ஷரத்துகள்**

1. நெஞ்சு - நெஞ்சு என்பது இஸ்லாம் என்னும் நூராகிய ஒளி உதயமாகும் இடம். இங்கு ஒளி உதயமாகாவிட்டால் குபிர் நாஸ்திக இருள் விளையும் தளமாக ஆகிவிடும்.

2. ஃபுவாத் - இருதயம். விசுவாசம் என்னும் ஈமானின் ஒளி உதயமாகும் தளமாகும். இந்த ஒளி உதயமாகாவிட்டால் இங்கு முனாஃபிக் எனும் நயவஞ்சகம் உண்டாகிவிடும்.

3. கல்பு என்னும் இருதயம் முசாஹதா என்னும் காட்சி உதயமாகுமிடம்.

4. கல்பு என்னும் இருதயத்தில் உள்ள வைரமணி. இங்கு அல்லாஹ் ஹாளிர் ஆகிறான்.

5. கல்பின் வைரமணி என்ற இடம் அல்லாஹ்வுடைய தாத் என்கிற பரம்பொருளின் அறிவும், தோற்றமும் உண்டாகும் இடம்.

6. கல்பின் வைரமணி மறைந்து அங்கு தாத்து நிலை பெறுகிறது.

7. கல்பின் கண் இருதயத்தின் வைர கல் போன்ற இப்பகுதியில் இரகசியம் வெளிப்படுகிறது.

மஹ்ரிபாவின் மேற்கண்ட கல்பின் ஷரத்துகளை அறிந்து உடலின் ஏழு உறுப்புகளை கொண்டு அல்லாஹ்வுக்கு சுஜூத் செய்து தலை வணங்க வேண்டுமென்று ஏவப்பட்டுள்ளது.



சரீரத்தில் உள்ள மூன்று ராஜாக்களையும் மூன்று மந்திரிகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

1 வது ராஜா ஈமான் - இதன் மந்திரி ரூஹு,
2 வது ராஜா கல்பு - இதன் மந்திரி நாக்கு,
3 வது ராஜா சரீரம் - இதற்கு மந்திரி சைத்தான்,

மனிதனின் சரீரத்தில் ஐந்து இமாம்கள் உண்டு,
1 வது இமாம் நப்சு
2 வது இமாம் தில்லு
3 வது இமாம் ரூஹு
4 வது இமாம் நூரு
5 வது இமாம் இஷ்க்

மனித சரீரத்தில் ஐந்து வகையான பிரிவுகள் உண்டு,
1 வது மண்ணை சேர்ந்தது தசை, நரம்பு, எலும்பு, தோல், முடி
2 வது தண்ணீரை சேர்ந்தது மூளை, மணி, சிறுநீர், உமிழ்நீர், வியர்வை
3 வது நெருப்பை சேர்ந்தது பசி, தாகம், சோம்பல், நித்திரை, சுகம்
4 வது காற்றை சேர்ந்தது நடை, மறதி, கொட்டாவி, பெருமூச்சு, சிறுமூச்சு
5 வது ஆகாசத்தை சேர்ந்தது சுஹபத் பணிவு, அச்சம், தயவு, பகில் நெஞ்சழுத்தம், சிர்ரு இரகசியம்.

இனி சிர்ரென்னும் இரகசியத்தை அறிய வேண்டுமானால் காமிலான ஷெய்குமார்களாகிய குருமார்கள் பின் சென்று, அவர்கள் பாதம் பணிந்து கரம் தொட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

மன் அரஃப நப்சஹு ஃபகத் அரப ரப்பஹு,
தன்னை அறிந்தவன் தன் நாயனை அறிந்தான்

திக்ரே ஜல்லி லக்லஃபத்
திக்ரே கல்பி வஸ்வஸா
திக்ரே ரூஹி முஷாஹதா
திக்ரே சிர்ரி முவாயனா

ஷரியத்து வாஜிபுல் உஜூத்
தரீகத்து மும்கினுல் உஜூத்
ஹகீகத்து முன்தனிஉல் உஜூத்
மஹ்ரிபத்து ஆரிஃபுல் உஜூத்

வாஜிபுல் உஜூத் ஏழு ஹுருஃப் எழுத்து கியாஃப் லாம் மீம் நூன் வாவ் ஹே யே
முன்கினுல் உஜூத் ஏழு ஹுருஃப் எழுத்து ஃபே காஃப் துவே லுவே அயின் கயின் ளாத்
முன்தனிஉல் உஜூத் ஏழு ஹுருஃப் எழுத்து அலீஃப் பே தே ஸே ஜீன் ஹே ஹ்ஹே
ஆரிஃபுல் உஜூத் ஏழு ஹுருஃப் எழுத்து தால் ஜால் ஜே ஸீன் ஷீன் சாத்.

இனி எந்த ஹாலிலும் நேரத்திலும் அல்லாஹ்வின் அளவிலே முன்னோக்கி இருப்பது. நாட்டத்தில் தரிப்பாடாக ஹக்குத் தஅலாவை வைத்து அந்த நாட்டத்துடனே இப்படி எக்கீன் நிர்ணயம் கொள்ள வேண்டும் :-

நாயனாகிய என் ஆண்டவனே ஆலமாகிய என்னுடைய உலகிலும் உஜூதாகிய என் உள்ளமையிலும் நீயே! என்னுடைய நித்தியமும் சத்தியமும் நீயே, என்னுடைய நிதால் என்னும் சூக்குமமும் நீயே, என்னுடைய ஜிஸ்மு என்னும் உடலிலும் நீயே, என்னுடைய பகா என்னும் நிரந்தரத்திலும் ஃபனா என்னும் நாஸ்தியிலும் நீயே!

என்னுடைய ஹயாத் என்னும் ஆயுளிலும் என்னடைய மௌத் என்னும் மரணித்திலும் நீயே, என்னுடைய கபுர் என்னும் சமாதியிலும், ஹஸர் என்னும் அந்தியிலும் நீயே, என்னுடைய உசும்புதலிலும் எனது ஒடுங்குதலிலும் நீயே, என்னுடைய மீஜான் என்னும் தராசிலும், சிராத் என்னும் பாலத்திலும் நீயே, சொர்க்கத்திலும் நரகத்திலும் நீயே, அஃப்வாலிலும் அக்வாலிலும் அஹ்வாலிலும் நீயேயன்றி வேறில்லை.

வஜிஹத்து வஜிஹிய லில்லதி ஃபதரஸ்ஸமாவாதி வல்அர்ள ஹனீஃபன் முஸ்லிமன் வமா அனா மினல் முஸ்ரிகீன்,



மூன்றாவது முராகபா செய்வது எவ்வாறெனில், முந்தின ஆயத்தில் வந்த இஸ்மில் அவ்வல் பாத்தின் ஆதி அந்தம் என்ற இரண்டு இஸ்மும் ஹக்குடைய பங்காக்கி கொள்ளவும். மற்ற இஸ்மு ஆகிறு, லாகிறு, அந்தரங்கம், வெளிரங்கம் இரண்டு இஸ்மும் ஹல்க்கு படை கோலத்தின் பங்காக்கி கொள்ள வேண்டும்.

அந்த ஹல்க்கு உடைய பங்கில் உனக்கும் ஒரு பங்கு உண்டு, அந்த பங்கு அனாநிய்யத் என்று சொல்லப்படும். அனநிய்யத்தை நஃபி இல்லாமை செய்து அல்லாஹு தஅலாவை இஸ்பாத் உண்டாகச் செய். லாம் அலீஃப், அலீஃப் லாம் அலீஃப், ஹே அலீஃப் அலீஃப், லாம் அலீஃப் ஹே, *2 5*, லாம் அலீஃப் *1 1 5 6* ரம்ஜு, மன்கூசு, மவ்லூசு உடைய மானா அர்த்தத்தை எல்லா ஹாளிலும் நிலையிலும் உன்னுடைய கல்பு இதயத்தின் முன்னாலே முராகபா தரிசனம் செய், அது தான் கலிமாவுடைய தீர்மானமான உள்ளர்த்தம்.

“லாயிலாஹ இல்லல்லாஹ்” ‘லா’ தொப்புள், ‘இலாஹ்’ மண்ணீரல், ‘இல்லா’ இருதயம், ‘அல்லாஹ்’ நெஞ்சு, ‘ஹூ’ மூளை, இப்படி மூச்சுடன் சேர்த்து மூச்சை நிறுத்தி கண்ணை இருதயத்தின் நடுவில் உள்கண் கொண்டு பார்த்து அந்த எழுத்துக்களை அந்தந்த தளத்தில் இணைத்துக் கொண்டு, மூச்சை பிடித்து பிடித்து ‘ஹூ’ என்று விடவும், கலிமாவை எந்த நேரமும் ஓதி வரவும். ஃபஜ்ருக்கும் மஹரிபுக்கும் தொழுகைக்குப் பின் தவறாது ஓதவும்.

www.netsufi.com

பகலின் நினைவு எண்ணங்கள்
இரவின் நினைவு கனவுகளாம்
அகத்தில் உலவும் சிந்தனைகள்
அதுவே வாழ்வின் அடிப்படையாம்!
இகத்தில் உனது எண்ணங்கள்
இறைவன் இருக்கைப் புறப்பாடாம்
சுகத்தில் துன்ப சோகத்தில்
தோன்றுவதும் அவன் தூண்டுதலாம்!
-ஸூஃபி மகான் அபு ஸையிது(ரலி)

## 15. சிவப்பு பிறைக் கொடி

அது ஒரு அற்புதமான நாள், இளம் வெய்யிலும், பனிக்குளிரும் உண்டாக்கும் கதகதப்பில் எழில் நிறைந்த அந்த வனப் பிரதேசம், பறவைகளின் பாடல்களால் நிறைந்திருந்தது.

ரிஃபாயி நாயகம் அவர்களின் பெயரும் புகழும் ஈராக்கின் எல்லைகளைத் தாண்டி அரேபியப் பாலை நிலத்திலும், ஈரான், ஸிரியா, பலஸ்தீன், துருக்கி நாடுகளுக்கும் பரவிச் சென்றது. அவர்களின் கலிஃபாக்கள் பல பகுதிகளில் கான்காக்களை நிருவி திக்ரு மஜ்லீஸ்களையும் தியான மன்றங்களையும் நடத்தி வந்தார்கள்.

ஹிஜ்ரி 563ல் பாக்தாத் மாநகரில் பச்சை கொடி ஏற்றி ஆன்மீக ஆட்சி புரிந்து கொண்டிருந்த கௌதுல் அஃளம் சையிதினா ஷைகு முஹ்யித்தீன் ஜீலானி(ரலி) நாயகம் காலமாகிவிட்டார்கள் என்ற செய்தி கேட்டு பஸ்ரா வாசிகள் மனவேதனை அடைந்தார்கள்.

ரிஃபாயி நாயகத்துக்கு அப்போது 52 வயது. இல்ஹாம் என்னும் உள்ளொளி கொண்டு ஒலிகள் கோமானுடைய மறைவை தெரிந்து கொண்டிருந்தாலும், ஒருவார காலத்தில் அந்த துக்கச்செய்தி பஸ்ராவை வந்தடையும் வரை ரிஃபாயி நாயகம் அமைதி காத்தார்கள்.

பிறகு நாற்பதாம் நாளில் கௌதுனா அவர்களின் பேரில் குர்ஆன் ஓதி ஹத்தம் செய்து அவர்களின் மஃபிரத்துக்காக (மறுமைக்காக) துஆ செய்து, நூற்றுக் கணக்கான ஆலிம் உலமா ஷெய்குமார்களுக்கும், சீடர்களுக்கும் விருந்து உபசாரம் செய்தார்கள்.



அவ்விருந்தின் போது ஷைகு ஷிகாபுத்தீன் சுஹரவர்தி, ஷைகு இபுறாஹீமுல் வாஸ்தி, ஷைகு உதுமானுல் ஹாரூனில் ஹபஷி, ஷைகு அபு மத்யனுல் மஹ்ரமி, ஷைகு அபுல் ஃபத்ஹிபுனு கனாயமும், ஷைகு றபீவுத்தீன் கர்மான், ஷைகு அலீயுபுனு உதுமான், ஷைகு அபுபக்கருல் ஹமதனி.

இவர்களைத் தவிர் நாயகம் அவர்களின் மூத்த மைந்தர் சையிது முஹம்மது மற்றும் சையிது அலீ, ஹாஜிரஜபு, ரூமுடைய அமீர் சுல்தான் முஹம்மது, ஷாமுடைய அமீர் ஷைகு இஸ்மாயில், ஷைகுல் ஆஷிக் அப்துல் ரஹீம், கத்தீபுத்தீன் ஈராக்குடைய அமீர் ஷைகு ஹாரூன், ஷைகு இபுறாஹிமுல் அக்றபு ஆகியோரும் ஆஜராகியிருந்தார்கள்.

கௌதுனா முஹயித்தீன் ஆண்டகை அவர்கள், காலமாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பு தங்களது ரிஃபத்தில் சொற்பொழிவின் போது, ஸையிதினா அஃகுமது கபீர் நாயகம் அவர்களைப் பற்றி குறிப்பிட்டதாகவும்,

“அவர் ஸுல்தானுல் ஆரிஃபீன் அல்லாஹ்விடம் மிகக் கீர்த்திப் பெற்றவர். அல்லாஹ்வின் மீது ஆணை அவனது சந்நிதானத்தில் அவர் மிக உயர்ந்தவர்.

“எனக்குப் பின்னர், எனது ஆன்மீக ஆட்சி பீடத்தில் அமரக்கூடியவர், கௌதுல் அஃளம் குத்புஸ்ஸமான் என்ற என் பட்டங்களை சுமக்கப் போகிறவரும் அவரே!,”

என்று, வெளிப்படையாக கூறினார்கள், என்ற செய்தி ஷெய்கு மார்களின் வட்டாரத்தில் பிபலமாக பேசப்பட்டு வந்தது. எனவே அன்றைய தினத்தில் ரிஃபாயி நாயகத்தின் கான்காவில் கூடிய கூட்டத்தில் இந்தப் பேச்சு கவனத்துக்கு வந்தது.

அபு கைருல் ஜன்னானி என்னும் பெரியார் ஷைகு அபுபக்கருல் ஹமதானி அவர்களைப் பார்த்து “சையிதினா அஃகுமதுல் கபீரு அவர்களுடைய தன்மையும், நிலைமையும், பதவியும் எவ்வகைப்பட்டது” என்று வினவினார்.

அதற்கு ஷைகு அவர்கள் சிறிது நேரம் அமைதி காத்து, பின்னர் “அவர் அல்லாஹ்வுடைய சிர்ரென்னும் சிர்ரானவர் (பரமனின் இரகசியத்திலும் இரகசியமானவர்). நபிமார்களிடையே முஹம்மத் (ஸல்) அவர்களுடைய சிறப்பு தனித்தன்மையானது என்பது போல, அவுலியாக்களிடையே அஃகுமத் கபீரின் சிறப்பு தனித்தன்மையானது என்றார்.

அருகிலிருந்த ஷெய்கு ஷிகாபுத்தீன் சுஹ்ரவர்தி அவர்களோ, "அவர் அல்லாஹ்வுடைய இரகசியப் பொருளாயிருக்கிறார், மஹ்பூபியத்து மஹ்சூக்கிய்யத்து என்ற தெய்வீக காதலர், தெய்வீக காதலி என்ற இஷ்கே இலஹி பண்புகளில் அவருக்கு முன்னும் பின்னும் யாரும் பிறந்ததும் இல்லை, பிறக்கப் போவதுமில்லை", என்றார்கள்.

ஸுல்தானுல் ஆரிஃபீன் சையிதினா அஃகுமதுல் கபீர் ரிஃபாயி நாயகம் அவர்கள் மிம்பர் என்கின்ற பிரசங்கள படிக்கட்டில் அமர்ந்தவாறு சையிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் மஃபிரத்துக்காக நீண்ட துஆ ஓதினார்கள்.

பிறகு மேயையில் எழுந்து நின்று முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் சிறப்புகளை எடுத்துப் பேசினார்கள்:-

"உலகின் நாலாத் திசைகளிலும், மலைச் சிகரங்கள் தோறும் அவர்களுடைய பசுங்கொடி பறந்து கொண்டிருக்கிறது. புவியில் நிரந்தரமாக சூரியன் அஸ்தமித்து விட்டாலும் அவர்களின் மெய்ஞ்ஞான சூரியன் மறையாது" என்று சப்தமாக மொழிந்தார்கள்.

அதன் பிறகு அவர்கள் ஃபார்ஸி மொழியில் சில பனுவல்களைப் பொழிந்தார்கள்:-

ஸுல்தானுல் ஆரிஃபீனாகிய, என்னைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள்,

*நான் அலை மோதுகின்ற கடலுக்கு ஒப்பானவன்!*
*நான் ஒளி வீசுகின்ற சூரியனுக்கு நிகரானவன்!*
*கடந்த காலத்தில் வாழ்ந்து மறைந்த இறைநேசர்கள்*
*இனி வருங்காலத்தில் திகழப் போகிற இறைநேசர்கள்*
*என்முன்சிற்றாறுகளும்நட்சத்திரங்களும் ஆவார்கள்*
*நீர் வற்றிய சிற்றாறுகள் அலைகடலை எதிர் பார்ப்பதைப் போல*
*நட்சத்திரங்கள் ஒளியை சூரியனிடமிருந்து பெருவதைப் போல*
*முக்காலத்திலும் இறைநேசர்கள்*
*என்னை எதிர் பார்த்தவர்களாய் இருப்பார்கள்!*
*வல்ல நாயன் அல்லாஹ்வால் ஏவப்பட்டு நான் சொல்கிறேன்!*
*ஒவ்வொரு ஒலியும் ஒரு நபியின் இதயத்தில் இடம் பெற்றிருப்பார்கள்*
*நான் என் பாட்டனார் முஹம்மத்(ஸல்) அவர்களின் இதயத்தில் இடம் பெற்றிருக்கிறேன்!*
*அல்லாஹ் என்னை நோக்கி யாஸுல்தானுல் ஆரிஃபீன்,*
*யா கௌதுல் அஃகுலம், யா ஸுல்தான் அஃகுமத் கபீர்!,*
*என்ற பெயர் கொண்டு என்னை அழைத்தான்!*
*புகழனைத்தும் அல்லாஹ்வுக்குரியது*
*ஸலாமும் ஸலவாத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும்*
*அவர்களின் தோழமார் கிளையார் கோத்திரத்தார் கூட்டத்தார் மீதும் உண்டாவதாக!*

என்றார்கள். எஜமான் ரிஃபாயி நாயகம் பாடிய அர்த்தமுள்ள பனுவலை கேட்டு கூட்டத்திலே கூடியிருந்தவர்கள் மெய் சிலிர்த்தார்கள்.

ரிஃபாயி நாயகம் அவர்கள் அன்று தமது அஃகுமதியா மற்றும் ரிஃபாயியா தரிக்காவின் கொடியாக பிறையும் ஐந்து முனை நட்சத்திரமும் கொண்ட அல்லாஹ்வுடைய ஜலாலியத் என்ற ஆவேசத்தின் வண்ணமான செஞ்சிவப்பு வண்ண கொடியை கான்காவின் வாசலில் கொடிமரத்தில் ஏற்றினார்கள்,

அவர்ளின் உத்தரவின் பேரில், சீடர் பலர் கையில் தாயிரா தஃப் ஏந்தி நின்று,

அல்லாஹும்ம தக்கன் தக்கா வஸஃபன் ஸஃபா
அல்மதத் யா ஷெய்கு முஹ்யித்தீன்
அல்மதத் யா ஸுல்தானுல் ஆரிஃபீன் ஸுல்தான்
செய்யிது அஃகுமத் கபீர் அல்மதத் யா ஷெய்க்!

என்று முழங்கி ஆவேச திக்ரோசையை எழுப்பி அல்லாஹ்வுடைய கலிமாவையும் திருநாமங்களையும் உச்சரித்து தாயிராவையும் முழங்கி ஸூஃபித்துவ நடனமாடி முடிவாக அவர்கள் பாடிய ஃபார்ஸி பனுவல் :-

*ஸாஹிபே ஸுல்தானே ஆலம் செய்யது அஃகுமத் கபீர்!*
*சாஹிபே ஜமானே ஆலம் கௌதுல் அஃலம் தஸ்தகீர்.*

சாஹிபே சுல்தானே ஆலம் செய்யிதே அஃகுமத் கபீர்
சாஹிபே ஜமானே ஆலம் கௌதுல் அஃலம் தஸ்தகீர்
தர்ஜஹான் உம்முல் உபைதா தஹ்த ரோஷன் தஸ்தகீர்
சர்வரே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்
ஷாஜகான் காமில் முகம்மில் ஷாஹின் ஷாஹ்தும் தஸ்தகீர்
சாஹிபே சுல்தானுல் ஆலம் செய்யிதே அஃகுமத் கபீர்
காஜியே ஹூகும் ஷரஃ கன்ஜூல் ஹகாயிக் தஸ்தகீர்
ஹஜ்ரதே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்
ஆலிமுல் உலமாஹே ஷம்சுல் ஆரிஃபீன்தும் தஸ்தகீர்
ஆபிதே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்
பார் வபஹர் ஆஸ்மான் ஸப் மஷ்ஹூர் நாம்தும் தஸ்தகீர்
சூஃபியே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்
வாலியே முல்கே விலாயத் வாலிஹே யா தஸ்தகீர்
வாரிதே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்
ஆஷிகே மஃஷூக் கௌதுல் அஃலம் ஹேதும் தஸ்தகீர்
தபஜ்ஹே சுல்தானுல் ஆரிஃப் செய்யிதே அஃகுமத் கபீர்

என்ற பாடலை கேட்டு ஷத்தல் அரபு கிளையாறு சலசலத்தது. பறவைகளும், விலங்குகளும் கூட மெய் சிலிர்த்து நடனமாடின. வானுயர்ந்த பேரீச்சை, பனை, தேவதாரு மரங்களும் கிளைகளையும் இலைகளையும் அசைத்து ஆரவாரம் செய்தன.

கூடியிருந்த விருந்தினர்கள் கலைந்து செல்லும் முன், கூட்டத்தை நோக்கி ஜடா முடியும், தாடியுமாக ஒரு மனிதன் “யாராவது என்னை இரட்சிப்பீர்களா? பாவியான என்னை நரகத்திலிருந்து காத்திடுவீர்களா?” என்று கதறிக் கொண்டு வந்தான்.

ஷெய்குமார்களில் பலர் அவன் முகத்தைப் பார்த்தனர், ‘இவன் மன்னிக்கப்பட முடியாத மகாபாவி’ என்று அவன் நெற்றியில் புறக் கண்களுக்கு தெரியாத எழுத்துக்கள் பளிச்சிட்டன. ஒவ்வொருவரும் அவனை புறக்கணிக்க முனைந்தனர். அவன் விடாப்பிடியாக கதறிக்கொண்டே நாயகம் அவர்களை அணுகினான்.

*                    *                    *                    *



## கிருபை செய்வீர்கள் ஆரிஃபே!

*ஞாலத்துதித்த அகிலத்தின் அரசரே*
*சையிதே அஃமத் கபீர்*
*காலத்தின் அதிபரே ஆலத்தின் தலைவரே*
*கௌதுல் அஃலம் தஸ்தகீர்!*
*கோலத்தில் மதியாக உம்முல் உபைதாவில்*
*குடிகொண்ட பேரின்பமே*
*சீலத்தில் பாரோங்கும் சம்பூர்ண ஞானத்தின்*
*சிகரமே சிருங்காரமே!*
*தூலத்தின் நீதியே சூக்குமப் பொக்கிஷ*
*சுகமே சுகானந்தமே*
*ஆலிமுல் உலமா ஞானிகள் நாயகம்*
*ஆபிது சுல்தானுல் ஆரிஃபே!*
*மூலத்தில் ஓங்கார முஹ்யித்தீன் கௌதுனா*
*முழங்கும் விலாயத்தின் வாரிசே*
*நீலத்திரைக் கடல் நிலம் தரை வானம்*
*நிறைந்த நின் நாமம் கதியே!*
*ஜால ஜெகஜ்ஜால தெய்வீக கூத்தின்*
*சங்கீத சபைக் கரசரே!*
*கீலகம் இல்லாமல் அடிமைகள் கதிபெற*
*கிருபை செய்வீர்களே!.*

*-ஃபார்ஸி கஸீதாவின் தழுவல் தமிழாக்கம்*

ரிஃபாயி நாயகம் அவர்கள் அவனை முறைத்துப் பார்த்தார்கள், அவர்கள் ஒரு ஒளிப் புறப்பட்டது, அம்மனிதன் மயங்கி விழுந்தான். சில மணித்துளிகளில் விழித்தெழுந்த அவர்கள் பாதங்களில் வந்து விழுந்தான். நாயகம் அவர்களுக்கும் அவனுக்கும் ஞானதீட்சை அளித்தார்கள்.

கூடியிருந்த மக்கள் அதிசயித்தனர். ஷெய்குமார்களும் அவன் இப்போது பார்க்கும் போது இவன் மன்னிக்கப்பட்டவன் என்று ஒளி எழுத்துக்கள் ஓடுவது கண்டு திகைப்புற்றனர். நாயகமே எங்களை இரட்சியுங்கள்.

*உன்னை பிரிந்து நான் வாழேன்*
*ஒருகணம் அமைதி நான் காணேன்*
*என்னை உனக்கு அடிமையென*
*ஏற்று கொண்டதை நான் மறவேன்*
*முன்னும் பின்னும் எனக்குள்ளும்*
*முழுகிய காதல் தேவதையே*
*தன்னை அறியா பேதையெனை*
*தாயாய் வந்து காப்பாற்று*
*-ஸூஃபி மகான் இப்னுல் அரபி(ரலி)*

## 16. மறைந்தெழுந்த மாலை கதிரவன்

*பேரின்ப பெருமானே!*
*நான் எனக்காகவும் உனக்காகவும்*
*உன்னை காதலிக்கிறேன்!*
*எனது சுயநல காதலில்*
*ஒவ்வொருப் பொழுதிலும்*
*ஒவ்வொரு சிந்தனையிலும்*
*உன்னை காதலிக்கிறேன்!*
*என் பேராசைப் பார்வைக்கு*
*நீ உன் முகத்திரையை விலக்கி*
*ஒரு முறைஉன் முகத்தை நீ காட்டும்போது*
*நொடிப் பொழுதான உன் தரிசனம்!*
*அன்பானவனே புகழ்! அது எனக்குரியதல்ல!*
*புகழ்! அது உனக்குரியது!*

பராபரனாகிய அல்லாஹ்வின் மீது கொண்ட ஆவேச காதலில் பஸ்ராவின் மெய்ஞ்ஞானப் பேரரசி ராபியா பஸரி நூறாண்டுகளுக்கு முன் பாடியப் பாடலை, கான்காவின் பெண்கள் பகுதியிலிருந்து பாடிய இசையரசியின் இன் குரல், அங்கு கூடியிருந்த அனைவரின் உள்ளத்திலும் பெருமூச்சு எழச்செய்தது.

எஜான் ரிஃபாயி நாயகம் வயதால் தளர்ந்து காணப்பட்டாலும், அந்த மஜ்லீஸில் கம்பீரமாக அமர்ந்திருந்தார்கள். ஒருவார காலமாக கான்காவில் நடைபெற்று வரும் இசை விழாவுக்கு இன்று கடைசிநாள். எனவே பொதுமக்கள் பெரும் கூட்டமாய் கூடி இருந்தனர்.

தமது அந்திமக் காலத்தில் நாயகம் அவர்கள் இசையை அதிகமதிகம் விரும்பினார்கள். அன்று மாலை நேரத்தில் பகல் முழுதும் நடந்த நிகழ்ந்த நிகழ்வுகளின் முடிவில் நாயகம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த ராபியாவின் பாடலை பாடக் கேட்டு தன் வசமிழந்தார்கள்.

மாலை நேர குளிர் படர்ந்து வந்தது. வெண்பனி அடர்ந்த கானகத்தினூடே வீசி கொண்டிருந்த அந்திக் கதிரவனின் ஒளி அதோ மேல்வான முகட்டில் சரிந்து கவிழ்ந்தது, அடுத்த கணம் சிவப்பு வண்ண மேகங்கள் வானக் கரையில் உலவத் தொடங்கின.

மாலை தொழுகையின் வக்த் நேரம் தப்பிப் போனதை உணர்ந்த சீடர்கள், நாயகம் அவர்களை கைகளில் தொட்டு எழுப்பினார்கள். பதறி எழுந்து விஷயமறிந்த எஜமான் ரிஃபாயி நாயகம் வானக்கரையில் உலவும் வண்ண மேகங்களை உறுத்துப் பார்த்தார்கள்.

யாரும் எதிர்பாராத அதிசயமாக மறைந்த கதிரவன் மேலெழுந்து தொடுகரையில் பிரகாசித்தான். அண்ட கோளங்களையும் ஆட்டிப் படைக்கும் ஆரிஃபு நாயகத்தின் ஆற்றலைப் பார்த்து மக்கள் பரபரப்படைந்தனர்.

மக்ஃரிபு வந்து தொழுகையை இமாமாக நின்று சில மணித்துளிகளில் முடித்துக் கொண்டு மீண்டும் இசை சபையில் வந்தமர்ந்தார்கள். ரிஃபாயி நாயகம் அந்தப் பெண்ணை மீண்டும் பாடச் சொல்லுங்கள் என்று உத்தரவிட்டார்கள். இசையரசியின் குரல் மீண்டும் ஒலித்தது :-

*அந்தப் பேரின்ப காதலன்!*
*அவன் அவனுக்கென்று சில*
*நேசர்களைத் தேர்ந்தெடுக்கிறான்*
*அவனை நேசிக்க அவர்கள் உத்வேகம்*
*ஊட்டப் படுகிறார்கள்*
*யுகம் தோறும் அவன்தன்*
*காதலர்களை வல்லமையெனும் போர்வையைப்*
*போர்த்தி புதுப்பிக்கிறான்*

இசை மழை பொழிந்த குர்தி இனத்தைச் சேர்ந்த அடிமைப்பெண் இப்போது நாயகம் அவர்களின் எதிரிலே,

அழைத்து வந்து நிறுத்தப்பட்டாள்.

எஜமான் ரிஃபாயி நாயகம், அவள் முகத்தை நோக்கினார்கள். தன் பார்வையால் அவளது பார்வையைத் தொட்டு ஊடுருவிப் பார்த்தார்கள்.

இப்போது அப்பெண் தன் இருதயத்தில் ஜம்ஜம் தண்ணீர் பொங்கி வழிவதை காண்கிறாள். இருதயத்தில் தோன்றிய இன்ப குளுமை சிறிது நேரத்தில் உடலெங்கும் பரவக் கண்டாள் தடாலென நாயகத்தின் காலடியில் விழுந்தாள்.

குருவின் பேரானந்த நிலையில் அவரை குறை கூற அவசியமில்லை என்பதால் இறைவனை குருவின் தோற்றத்தில் அப்பெண் பார்க்கிறாள். அவள் உடல் முழுதும் ஆன்மாவிலும் அவரே நிறைந்திருக்கிறார்.

அவளது சிரசைத் தொட்டு ஆரிஃப்பு நாயகம் ஆசீர்வதித்ததும் அவள் எழுந்து நின்றாள். தன்னில் பொங்கி வழியும் பேரின்பத்தை கட்டுப் படுத்திக் கொண்டு நின்றிருந்த அப்பெண்ணிடம் நாயகம் பேசினார்கள்,

“இன்று முதல் உன்னுடைய பெயர் உம்முல் கராமத். உலகத் தேவைகளுக்காக என்னை தேடி வருபவர்களின் விருப்பத்தை நீ நிறைவேற்றி வை. ஷத்தல் அரபு ஆற்றின் அக்கரையில் நகரப் பகுதியில் உனக்காக ஒரு மாளிகை ஏற்பாடு செய்யப்படும் நீ அங்கேயே தங்கி கொள்ளலாம்,” என்றார்கள்.

பின்னர் கூட்டத்தினரிடம் கூறினார்கள் :- “பல காலமாக நான் ஒன்றை சொல்லி வருகிறேன். உலக காரியங்களைத் தேடுபவர்கள், என் பெயரைச் சொல்லி இறைவனிடம் பிரார்த்தனையை புரிந்து கொள்ளுங்கள், நிச்சயமாக உங்கள் தேவைகளை இறைவன் நிறை வேற்றுவான் என்று நான் கூறி வருகிறேன்,

“ஆனால் நான் கூறுவதை யாரும் செவி மடுப்பதாக இல்லை. திரும்பத் திரும்ப என்னிடமே வந்து கோரிக்கை வைக்கிறார்கள். என்னுடைய அனுஷ்டாங்களில் சிரமம் ஏற்படுகிறது. எனவே இந்த ஏற்பாடு இந்த பெண்ணிடமிருந்து கராமத் இறை அற்புதங்கள் வெளிப்படும் மக்களின் உலகத் தேவைகள் நிறைவேறும்” என்றார்கள்.



அந்தப் பெண் மீண்டும் எஜமான் ரிஃபாயி நாயகத்தின் பாதங்களை தொழுது எழுந்தாள், பிறகு பேசினாள் :

“எஜமானே, என்னுள் ஐதுபு பேரின்ப நிலை ஏற்படுகிறது, நான் என்னை சமாளித்துக் கொண்டுதான் சந்நிதானத்தில் நின்று கொண்டிருக்கிறேன். இப்பொழுது எனக்குள் இல்ஹாம் உள்ளுதிப்பாக உற்பவிக்கும் வார்த்தைகளில் அற்புதம் விளைக்கும் தங்கள் திருநாமங்களை இசை மழையாய் பொழியும்படி இறைவன் என்னை ஏவுகிறான்,” என்றாள்.

எஜமான் ரிஃபாயி நாயகம் இசைவு தந்ததும் அவள் மீண்டும் இசை மழை பொழிந்தாள் கூடியிருந்தோரின் இதயங்களெல்லாம் நனைந்தன.

*“யா தாஜுல் வாஸிலீன் சுல்தான் சையிது அஃகுமத் கபீர்*
*யா நூர அலமதி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா குத்புல் ஆலமீன் சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா நூர ரஹ்மதி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா நூர முஹப்பதி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா சுல்தானத் தாலிபீன் சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா நூர ஜமாலி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா ஷைக அஹ்லிஸ் ஸமாவாத்தி வல் அர்ளீ சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா கன்ஜ மஃரிஃபதி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா வலத ஃபாத்திமத்தி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா கபித ரசூலி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா ஃபகீரி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா ஹபீபி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா சுல்தான் முஹ்யித்தீன் சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா மஃஷூகி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா சிர்ர அஸ்ராரி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா நூர கிப்ரியாயி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா குத்ரதி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா ரூஹி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா மாலிகல் முத்தகீன் சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா ஷைகல் மலக்கி வல்ஜின்னி வல் இன்சி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*

*யா கௌதத் தகலைன் சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா மஹபூபி சுல்தான் சையிது அஃகுமது கபீர்*
*யா மக்ஷுூகி சுல்தான் சையிது அஃகுமது கபீர்''*

எஜமானின் அருட்திரு நாமங்களை இசையாய் ஒலித்த இசையரசி, அவர்கள் ஒரு பார்வையால் இறை நேசச் செல்வியாக உயர்ந்துவிட்ட உம்முல் கராமத், தொடர்ந்து பேசினார்கள்.

''என்னிலிருந்து வெளிப்படும் முதல் கராமத் அற்புதம் இதுதான். இறைவன் உலகுக்கு உணர்த்தும்படி என்னை ஏவுகிறான். ''இந்த இருபத்து நான்கு திருநாமங்களையும் ஓதி உதவி கேட்போரின் தேவைகளை சத்தியமாக அவன் நிறைவேற்றித் தருவான்.''

இவ்வாறு சப்தமாக உச்சரித்து விட்டு உம்முல் கராமத் தள்ளாடியபடி நடந்து செய்று திரைக்கு அப்பாலிருந்த பெண்கள் பகுதியில் புகுந்துதளர்வாகப் படுத்து கொண்டார்கள். நிகழ்வின் கடுமை ஆயாசமடைந்த நாயகம் அவர்களும் ஓய்வறைக்குள் சென்று சாய்மானையில் சாய்ந்து கொண்டார்கள்.

அங்கு கூடியிருந்த பெருங்கூட்டத்தின் மூளையில் சலசலப்பு எழுந்தது. தொன்னூறு வயது முதியவரான ஷெய்கு ஜாஹிது அகமது என்ற பெரியார் எழுந்து நின்றார். ''அன்பர்களே அஃகுமது கபீரின் நேசர்களே! அவர்தன் தாயாரின் வயிற்றிலிருக்கும் காலத்திலேயே அவரை பற்றியும், அவரது அற்புத நாமங்களைப் பற்றியும் இறைவன் ஒரு ரூயா துரிய காட்சியில் எனக்கு முன்னறிவிப்பு செய்திருக்கிறான்.

சபையில் அனைவருடைய கவனமும் அப்பெரியாரின் மீது திரும்பியது. அவருக்கு அருகில் அமர்ந்திருந்த ஈசா இபுனு இபுறாஹிம் என்ற இளைஞர் ஷெய்கு ஜாஹிது அகுமதின் கரங்களை முத்தமிட்டு விட்டு, ''எஜமானின் திருநாமங்களை ஓதி இறைவனிடம் உதவி கேட்கும் முறையை சற்று விளக்கமாக கூறுங்கள்'' என்று வினயமாக வேண்டினார்.

**ஷெய்கு ஜாஹிது அஹ்மதின் விளக்கம் உலக மாந்தர்களுக்கு யுக முடிவு காலம் வரை கிடைத்திருக்க கூடிய ஒரு வரப்பிரசாதம்,** மாமூலிகை,எந்த ஒரு ஆணோ, பெண்ணோ, அவர்களில் எவருடைய மார்க்க (தீன்) காரியம், அல்லது துனியா(உலகின்)வின் காரியம் தடைப்பட்டுக் கொண்டே



இருந்தால் அவர் அங்கசுத்தி(உளூ)செய்து கொண்டு, இரண்டு ரகஅத் நஃபிள் தொழுகைக்கான தக்பீர் கட்டிக்கொள்ள வேண்டும். முதல் ரகஅத்தில் ஃபாத்திஹா சூராவுக்குப் பின் 'இன்னா அன்ஜல்னா' பன்னிரண்டு தரம் ஓத வேண்டும். அடுத்த ரகஅத்தில் ஃபாத்திஹா சூராவுக்குப் பிறகு 'குல்ஹுவல்லாஹு' சூராவை மூன்று தரம் ஓத வேண்டும்.

தொழுது முடித்த பிறகு, மூன்று தரம் ஸலவாத் ஓதிவிட்டு, ''இந்தத் தொழுகையின் நன்மையை ஸுல்தானுல் ஆரிஃபீன் அஃகுமது கபீர் நாயகத்தின் ஆத்மாவுக்கு ஹதியா செய்கிறேன்.'' எனச் சொல்ல வேண்டும்.

அதன் பிறகு எழுந்து பதாயிகு நகரத்தின் திசையை நோக்கி நிற்க வேண்டும். சற்றுத் தள்ளித் தம் எதிரே ஆரிஃப்பு நாயகம்அமைதியாய் வீற்றிருப்பதாக மனத்தால் உருவகப்படுத்த வேண்டும். அப்புறம், ''அஸ்ஸலாமு அலைக்கும் யா ஸுல்தானுல் ஆரிஃபீன் சுல்தான் சையிது அஃகுமத் கபீர் ஹுஸைனிர் ரிஃபாயி'' என மொழிந்து முதல் அடி எடுத்து வைக்க வேண்டும்.

இவ்விதம் மூன்று அடிகள் முன்னோக்கிச் சென்று, மிகுந்த பய பக்தியுடன் ஆண்டவர்களை மனக் கண்ணால் பார்த்து மற்றோர் அடி முன்னோக்கி எடுத்து வைக்க வேண்டும். ''நாயகமே'' என இறைஞ்சும் குரலில் விளித்துத் தன் நாட்டங்களை முறையிட வேண்டும்.

அதன் பின் அவர்களது இருபத்து நான்கு சிறப்புத் திருநாமங்களையும் ஓதிக் கண்ணீர்க் குரலில் தன் நாட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமாய் இறைஞ்ச வேண்டும். கடைசியாக இறைவனை முன்னோக்கி, ''யாஇலாஹி, இக்ளி ஹாஜத்தி பிஹுர் மத்தி மாஷுகி கல்லதீ ஷர்ஃபதஹு ஃபீதஷ்ரிபிஃஅர்ப அதவ இஷ்ரீன கிதாபன் மின் ஹளரதிக!.''

(இறைவா, உன் மஉஷுக்கு அவர்களின் இருபத்து நான்கு காரணத் திருநாமங்களின் பொருட்டு என் விருப்பங்களை நிறைவேற்றித் தருவாயாக).

என்று ஓத வேண்டும். அதன் பின் ஆரிஃபு நாயகத்திற்கு மீண்டும் ஸலாம் சொல்லிவிட்டுத் தன் காரியம் நிறைவேறி விட்டதென்று நம்பிக்கையுடன் திரும்ப வேண்டும். ஈசாவே, இது ஒரு மாமூலிகை. எந்த நோயையும் தீர்க்க வல்ல சஞ்சீவி. எந்த தேவையையும் நிறைவேற்றி தரும் மகா மந்திரம், எந்த இருளையும் பீறிப் பிளக்கக் கூடிய நண்பகல் சூரியன்.''

விழியால் காதல் கொடி விதையை
மனதில் ஊன்றி விடுகின்றாய்
ஒழியா காதல் வேதனையால்
உருகி அலைய வைக்கின்றாய்
பொழியா வான முகிலைப் போல்
பொய்யானதா உன் காதல் சொல்?
அழியா காதல் பேரின்ப
அன்பனே வா ஆண்டவனே!
-ஸூஃபி மகான் அபு ஸையிது(ரலி)

## 17. ஏந்தலர் ரிஃபாயி நாயகத்தின் கலிஃபா ஏர்வாடி ஸையிது இபுறாஹிம் சஹீது ஒலியுல்லா

மிஸ்ரில் (கெய்ரோவில்) அமைந்த அய்யூபி அரசாங்கத்தின் சுல்தான் ஸலாஹுத்தீன் தம் நெடும்படையுடன் பைத்துல் முகத்தஸை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார். ஸுல்தான் நூருத்தீன் மகமூத் ஜங்கியின் மறைவிற்குப் பிறகு எகிப்து, சிரியா, ஏமன், ஹறமைன் முதலிய பிரதேசங்களில் ஸலாஹுத்தீன் தனது ஆட்சியை நிறுவியிருந்தார்.

ஆனால் புனித பைத்துல் முகத்தஸ் என்ற பலஸ்தீன தலைநகரமான ஜெருசலம், கிறிஸ்துவ மன்னர்களின் கையிலேயே இருந்து வந்தது. அங்கு நபி இபுறாஹிம் (அலை) முதலிய நபிமார்களின் தரிசன ஜியாரத்துக்கு முஸ்லிம்கள் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டிருந்தார்கள். தான் கண்ட கனவின் அடிப்படையில் பஸ்ராவில் ஆன்மீக கொடி கட்டிப் பறக்கும் மகான் ஸுல்தானுல் ஆரிஃபீன் அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகம் அவர்களை நேரில் கண்டு ஆசி பெற வேண்டுமென்று அவருக்கு தோன்றியது.

பாக்தாதில் அப்பாஸிகளின் கலிஃபாவாக அபுல் அப்பாஸ் அஹ்மத் நாஸிருத்தீனில்லாஹ் பின் முஸ்தஸி அமர்ந்திருந்தார். கவ்னியாவில் ரூம் பிரதேசத்தில் சல்ஜூகிகள் ஆண்டு வந்தார்கள். ஜபல் முதலிய பிரதேசங்களில் இரண்டமாம் தக்ரல் உடைய ஆதிக்கம் நிலவியது. காரிஜ்ம் பிரதேசத்தில் ஸுல்தான் தகஷ்பின் அர்ஸலான் ஆட்சி செய்தார்.



ஆப்கானிஸ்தானில் கௌரிகளும் இந்துஸ்தானில் அடிமை அரசர்களும் ஆட்சி புரிந்தனர்.

இந்நிலையில் காஹிராவிலிருந்து 120 படைத் தளபதிகளுடன் புறப்பட்ட ஸுல்தான் ஸலாஹுதீன் நைல் நதியையும், ஜோர்தானையும் கடந்து, அரேபிய பாலை நிலத்தையும், குர்திஸ்தானையும் தாண்டி கர்பலாவில் புகுந்து ஜியாரத் செய்தவராக நஜஃப் வழியாக பஸ்ராவை வந்தடைந்தார்.

ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியின் பெயரும் புகழும் இஸ்லாமிய பிரதேசமெங்கும் பரவியிருந்ததால் அவரும் அவருடைய படையும் தளபதிகளும் பஸ்ரா நோக்கி செல்வதையும் அதன் நோக்கத்தையும் அறிந்த ரூம் பிரதேசத்தின் அமீரான சுல்தான் முகம்மது ஹாஜி ரஜபு என்பாரும் ஷாம் என்கிற சிரியாவின் ஆட்சியாளரும் தத்தமது படைகளுடன் மிஸ்ரின் சுல்தானோடு இணைந்து கொண்டார்கள்.

பொதுவாகவே மெசபடோமியா என்றும் கூறப்படும் பிரதேசம் நபிமார்கள் பலர் வாழ்ந்த இடமென்று கருதப்படுவதால், அங்கு ஸூஃபி ஞானிகளின் நடமாட்டம், கலாச்சாரம் உச்சமடைந்திருந்தது. ஸூஃபி ஞானிகளின் துறுவற நெறிகள் ஆன்மீகத் தேட்டத்தை பாலை வனப் பள்ளத்தாக்கை கடப்பதோடு ஒப்பிடுகின்றன.

மோகம், காதல், அறிவு, பற்றின்மை, ஒற்றுமை, வியப்பு, பரம்பொருளில் நாஸ்தி அல்லது ஃபனாஃபில்லாஹ் என்ற நிலையடைதல் என்று மஹ்ரிபா மெய்ஞ்ஞானியின் பாதையை ஈராக்கின் இலக்கியங்கள் வர்ணித்துப் பேசுகின்றன. பெண், பொன் மற்றும் மண்ணின் மாயக்கவர்ச்சியை விட்டு மனிதன் விலக வேண்டுமென்று ஸூஃபி ஞான நூல்கள் வர்ணனை செய்கின்றன.

பஸ்ராவை நோக்கிப் பயணப்பட்டு வந்த படை வீரர்களின் பயணம் கிட்டத்தட்ட ஸூஃபி ஞானிகளின் மெய் நோக்கப் பயணம் போல் அமைந்திருந்தது. அந்த பெரும் படைக்கு தலைவராக ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி முன் சென்று கொண்டிருந்தார். பஸ்ரா நகருக்கு அருகில் உம்முல் உபைதாவில் கானக காட்டின் நடுவே அமைந்த கான்காவில் மிஸ்ர் மற்றும் ரூம்ஷாம் அமீர்களுக்கும் அவர்களின் படைவீரர்களுக்கும் பெரும் வரவேற்பு காத்திருந்தது.

கான்காவின் வாசலில் எஜமான் ரிஃபாயி நாயகமும் அவர்களின் தோழர்களும் கலிஃபாக்களும் சீடர்களும் நின்று நெடும்பயணம் மேற்கொண்டு வந்த வீரப் பயணிகளை வரவேற்றார்கள்.

சிலநாள் ஓய்வுக்குப் பிறகு நடந்த கூட்டத்தில் நாயகம் அவர்கள பேசினார்கள் :- “அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டப்பட்ட ஷஹீதுகளை நீங்கள் மரணித்தவர்களாக கருதாதீர்கள் என்றும், மேலும் அவர்களை ஒரு நிலையிலிருந்து மறுநிலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அல்லாஹ்விடமிருந்து உணவும் குடிப்பும் பெறுகிறார்கள் என்றும அருள்மறை குர்ஆன் கூறுகிறது.

“நபி இபுறாஹிம் (அலை) அவர்களுக்கு முந்தியும் பிந்தியுமான பல நபிமார்களின் அடக்கத்தலமான பைத்துல் முகத்தஸை கிறிஸ்துவர்களிடமிருந்து மீட்க வேண்டுமென்ற உங்கள் முயற்சிக்கு அல்லாஹ் உறுதுணையாக இருப்பான்” என்றார்கள்.

இதனை அடுத்து படைவீரர்களுடன் பொதுமக்களும் கூடியிருந்த கூட்டத்தில், ரிஃபாயி ஃபக்கீர்கள் வாள், குரூஸ் முதலிய அபாயமான வெட்டுக் கருவிகளை வைத்துக்கொண்டு, தஃப் முழக்கத்துக்கிடையே ஜிக்ர் விளையாட்டு நடத்தினர். அச்சமின்றி தன்னுடலை தானே குத்தியும் கிழித்தும் பின்னர் அடையாளம் தெரியாமல் இரத்தக் காயங்கள் ஆறிப்போவதையும், விருந்தினராக வந்த மன்னர்களும் படைத்தலைவர்களும் அதிசயமாகப் பார்த்தனர்.

பிறகு படைத்தளபதிகள் நூற்றி இருபது பேர் கான்காவின் வாசலில் நிறுத்தி ஒவ்வொருவருடைய முகத்தையும் பார்த்து கொண்டே அந்த வரிசையைத்தாண்டி, நாயகம் அவர்கள் கான்காவுக்குள் திரும்பும் முன் அந்த நூற்றி இருபது படைத்தளபதிகளும் இறை நேசச் செல்வர்களாக உயர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்களின் இதயங்களிலே ‘இஷ்கே இலாஹி ’ என்ற இறை காதல் பொங்கி கொந்தளித்தது.

பின்னர் அமீர்கள் மூவரையும் சில முக்கிய தளபதிகளையும் கான்காவின் உள்ளறைக்குள் அழைத்துச் சென்று, ஒவ்வொருவராக திரைக்குள் அழைத்துப் பாருங்கள் உங்களைப் படைத்த இறைவனை என்று உத்தரவிட்டார்கள். மேலான அர்ஷில் அமர்ந்திருக்கும் படைத்த நாயனைப் பார்த்துவிட்ட அமீர்கள், இதயம் பட படக்க நாயகத்தின் பாதத்தில் விழுந்து அவர்கள் கலிஃபாக்களாக பரிணமித்தார்கள்.

எஜமான் ரிஃபாயி நாயகம் அவர்கள் கையில் கொடுத்த வீர வாளையும் ஐந்து முனை நட்சத்திரம் பொறித்த செஞ்சிவப்பு நிற பிறைக் கொடியையும் ஏந்தியபடி, அடுத்த சில மாதங்களில் பைத்துல் முகத்தஸ் நகரில் புகுந்த ஸலாஹுத்தீனின் இஸ்லாமியப் படையினரின் ஆவேசத்தை கண்டு எதிரிகள் விரைந்து பின்வாங்கி ஓடினார்கள்.

கடந்த 88 ஆண்டுகாலம் கிறிஸ்துவர்களின் பிடியிலிருந்து பைத்துல் முகத்தஸ் அன்று இஸ்லாமிய படை வீரர்களின் பாதம் பட்டு மகிழ்வடைந்தது. புராதனப் பள்ளியில் புகுந்த படைவீரர்கள், நபிமார்களின் மஜாரைக் கண்டு ஜியாரத் செய்தவர்களாக தொழுகை கூடத்தில்ஏக நாயன் அல்லாஹ்வைத் தொழுதார்கள்.

இமாமாக நின்று தொழுகை நடத்திய மிஸ்ரின் அரசர் ஸலாஹுத்தீன் அய்யூபி அல்லாஹ்வுக்கு நன்றி கூறியதோடு, தனக்கும் தனது நேசர்களான அமீர்களுக்கும்,படைத் தளபதிகளுக்கும் ஞானதீட்சை வழங்கி நெறிப்படுத்தி இம்மையையும் மறுமையையும் செம்மையாக்கி வைத்த குருமகான் ஸுல்தானுல் ஆரிஃபீன் அஃகுமது கபீர் நாயகத்தின் நீண்ட ஆயுளுக்கும் இகபர நன்மைகளுக்கும் நல்வாழ்வுக்கும் பிரார்த்தனை புரிந்து மன்றாடினர்.

இந்த நிகழ்வு கி.பி. 1187ம் ஆண்டு எஜமான் ரிஃபாயி நாயகத்தின் 70ம் வயதில் நடைபெற்றது

* * *

*குறிப்பு :- ஸுல்தான் ஸலாஹுத்தீனின் தலைமையிலான பஸ்ராவை நோக்கிப் பயணத்திலும், பைத்துல் முகத்தஸ் படையெடுப்பிலும் ஏர்வாடியில் சிறந்திலங்கும் சுல்தான் ஸையிது இபுறாஹிம் பாதுஷா ஷஹீது ஒலியுல்லாஹ் அவர்கள் கலந்து கொண்டார்கள். படைத்தளபதி என்ற முறையில் ஸுல்தானுல் ஆரிஃபீன் அவர்களிடமிருந்து ரிஃபாயி தரீக்கத்தின் கிலாஃபத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.*


www.netsufi.com

கடைநாள் வரையென் மெய்ஞ்ஞான
கதிரவன் விண்ணில் இலங்கிடுமே
எடுவான் தொடுத்து படுவான் வரை
எங்கிருந்து அடியான் அழைத்தாலும்
தடையில்லாமல் உதவி செய்யும்
தகைமை எனக்கு உண்டாமே
முடிவான மஃகுஷர் மைதானில்
முடுகி என் முரீதை காத்திடுவேன்
*-ஹலரத் முஹ்யித்தீன் ஆண்டகை*

## *18.இறை இருக்கை (அருஷின்) அருங்காட்சி*

*"மனிதனுடைய நண்பனும் எதிரியும் அவனது மர்பின் இரு பக்க எலும்புகளுக்கிடையே இருக்கிறான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*"மனிதனின் உடலில் ஒரு தசை துண்டம் இருக்கிறது. அது நேர்மையாக இருந்தால் உடல் முழுதும் நேர்மையாக இருக்கிறது. அது கோணலாகிவிட்டால் உடல் முழுதும் கோணலாகி விடுகிறது"* என்றும் அவர்களே கூறியுள்ளார்கள்.

*"மனிதன் உடலில் ஒரு தசைக் கட்டி உள்ளது, அதில் மனம் உள்ளது, அந்த மனதில் ஆன்மா உள்ளது, அந்த ஆன்மாவில் எனது ஒளி இருக்கிறது. நூர் என்னும் அந்த ஒளியில் எனது சிர் என்னும் இரகசியம் இருக்கிறது. இந்த சிர்ரென்னும் இரகசியத்தில் நான் (இறைவன்) இருக்கிறேன்."*

இந்த ஹதீஸ் குத்ஸீயின் அடிப்படையில் தன் மனத்தை வென்றவனுக்கு மனமே சிறந்த நண்பன் அவ்வாறு வெல்லாதவனுக்கோ மனமே கொடிய எதிரி என்று மெய்ஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

நாம் அல்லது நான் என்பது நமது உடல் மனம் ஆன்மா என்பதின் ஒட்டு மொத்தமான குறிச் சொல்லாகும். ஆனால் நான் 'இந்த தேகம்' என்று நினைக்கும் வரை நாம் என்பது உடலாகிய தேகத்தை குறிக்கிறது.



இந்த உடலை அடிப்படையாக வைத்து மனம், பாசப் பின்னல்களை உண்டாக்குகிறது. இந்த உடலைத் தந்த தாய் தந்தை, உடன் பிறந்த சகோதர சகோதரிகள் குழந்தைகள் என்று உறவால் தோன்றும் பாசம், நெடுமரத்தைப் போன்று வேரும் விழுதுகளும் கிளைகளும் இலைகளுமாகப் படர்கிறது.

ஆனால் எவர் தன் மனத்தை வென்று, உடலை நேசிப்பதை வென்று, ஆன்மாவை நேசிக்க அடியெடுத்து வைக்கிறார்களோ அவர்கள் கண்கள் திறக்கிறது. தான் யார் தன்னைப் படைத்தவன் யார், அவனுக்கும் நமக்கும் இடையிலுள்ள உறவு என்ன என்று அவர்கள் ஆராய்ந்தறிகிறார்கள்.

இதன் காரணமாக, உலகின் இன்ப துன்பங்கள் துக்க சந்தோஷங்களிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். இந்த நிலையை முக்தி நிலை, விலாயத், மோட்சம், மீட்சி என்றெல்லாம் சொல்கிறார்கள். இந்த நிலையை அடைவதற்காக மதங்கள் வணக்க வழிபாடுகளை, தியான தவநெறி முறைகளைப் போதிக்கின்றன.

நமது மனதுக்கு ஜட உலகின் பால், அதன் உறவுகளின்பால் இருக்கும் பிடிப்பை தளரச் செய்வதற்கு இறை நாம தியானமே அரிச்சுவடியாக அமைகிறது. சையிதினா அஃகுமது கபீர் ஆரிஃபு நாயகம் அவர்களிடம் யார் முரீதென்னும் ஞானதீட்சை கேட்டு வந்தாலும்,

நாயகம் அவர்கள் வந்தவரை உட்கார வைத்து, அருள்மறை வழங்கும் அல்லாஹ்வின் திருநாமங்களை ஒவ்வொன்றாக உச்சரிப்பார்கள். எந்த திருநாமத்தை கேட்கும் போது முரீது கிளர்ச்சியடைகிறானோ, அந்த நாமத்தை அவனுக்கு போதித்து திக்ரு தியானம் செய்து வர பணிப்பார்கள்.

பயிற்சிகளினால் மனத்தை அடக்குவதில் வெற்றி கண்டவன் உயரிய சாந்தி நிலையை அடைகிறான். அதன் காரணமாக அவனுக்கு பரமாத்வாகிய அல்லாஹ்வுடன் நேரடித் தொடர்பு ஏற்படுகிறது. அவனுக்கு இன்ப துன்பம், கோடை குளிர், இகழ்ச்சி புகழ்ச்சி எல்லாமே சமநிலை அடைந்துவிடும்.

மனம் சாந்தியில் ஆழும் போதுதான் அதில் நிறைந்துள்ள ஆன்மா, பரமான்மாவின் பதத்தை அடைய முடிகிறது. அந்த ஆன்மா ஆதி அந்தம் அற்ற நிலையை அடைகிறது. பிரபஞ்சம்

முழுவதிலும் நிறைகிறது, இதுவே முக்திநிலை எனப்படுகிறது.

விலாயத் என்ற முக்தி நிலை அடைந்த ஆன்மாக்களில், ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மாவுக்குரியவர்கள், இம்மையிலேயே மறுமையை தரிசிக்கிறார்கள்.

இறைவனால் தன் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆன்மாவுக்குரியவர்களான ஆரிஃப்பு நாயகம், வயோதிக நிலையில் தம் இல்லத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள், மங்கை நல்லார் சையிதா கதிஜாவுக்குப் பின்னர், ராபிதா என்ற பெண்ணையும் நஃபிஸா என்ற பெண்ணையும் மணமுடித்திருந்தார்கள்.

ஆரிஃப்பு நாயகம் அவர்களுக்கு ஸையிது முகம்மது, சாலிஹ், அப்பாஸ் என்ற மூன்று ஆண் குழந்தைகளும், பல பெண் குழந்தைகளும் பிறந்ததாக கூறப்படுகிறது. தன்னுடைய ஒரே தங்கையான ஸித்துந் நஸப் என்ற பெண்மணியின் மைந்தர் ஷைகு அலீ இபுனு உதுமான் என்பவரையே ரிஃபாயா தரீக்காவில் தனது கலீஃபாவாக நியமித்தார்கள்.

"நம்முடைய தரீக்கா மூன்று முக்கிய விஷயங்களை அடிப்படையாக கொண்டது. அவை 'யாசிக்காமல் இருப்பது, நாளைக்கென்று சேமித்து வைக்காமலிருப்பது, கேட்பவரை விரட்டாமலிருப்பது," என்று கூறியுள்ளார்கள்.

"என் தோழர்கள் அனைவரும் பட்டினி, உடைப் பஞ்சம், வறுமை, பணிவு, ஏழ்மை ஆகியவற்றை தமது பண்புகளாக்கிக் கொண்டு, அவர்கள் திருப்தி அடைவது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றும் கூறியுள்ளனர்.

உம்மு அபீதாவிலிருந்து புறப்பட்ட ரிஃபாயா தரீக்கா பஸ்ராவில் தழைத்தோங்கியது. விரைவில் பாக்தாத் திமிஷ்க் (டமாஸ்கஸ்) இஸ்தம்பூல் (துருக்கி) மிஸ்ர்(எகிப்து) ஆகிய பகுதிகளுக்கும் பரவியது. சிரியாவில் ஹரீரிய்யா, சா அதிய்யா, ஸையாதிய்யா என்ற கிளைகள் தோன்றின.

எகிப்து நாட்டில் பாஜிய்யா, மாலிக்கிய்யா, ஹபீபிய்யா என்ற கிளைகள் தோன்றின. இந்தியாவிலும், இந்தோனேஷியாவிலும், இலங்கையிலும் நாயகம் அவர்கள் நிறுவிய ரிஃபாயா அஹ்மதியா மற்றும் ஹைதரூஸியா பெருமளவில் பரவியுள்ளது.



அன்று வெள்ளிக்கிழமை, பின்னிரவில் தஹஜ்ஜத் தொழுகைக்காக ஒலுச்செய்து கொண்டு தொழுகைப் பாயில் அமர்ந்த போது நாயகத்தின் இரு கண்களும் அரிதுயிலில் மூடுகின்றன. நினைவும் கனவுமல்லாத, இடைப்பட்ட நிழல் பூமியில் ஸுல்தானுல் ஆரிஃபீன் நின்றிருந்தார்கள்.

இல்லத்தின் வாசலில் நின்ற வானவர் ஸம்ஸாயீல்(அலை), "வாருங்கள், அர்ஷின் வாசலுக்கு அல்லாஹ் உங்களை அழைக்கிறான்" என்றார்கள். அவரது ஒளிச்சிறகில் அமர்ந்து விண் பயணம் புறப்படுகிறார்கள்.

இலட்சக் கணக்கான வானவர் படை தொடர்கிறது. முதல் வானத்தில் ஆதி தந்தை ஆதம் (அலை) அவர்களை சந்தித்துப் பணிகிறார்கள். அவர்களின் திருக்கரங்களால் கிலாஃபத்தின் தலைப்பாகை சூடப்படுகிறார்கள், அங்கே ஷெய்குல் ஆரிஃப் அபுல் வபா (ரலி) அஷ்ஷெய்கு அபுன்னஜீபு(ரலி) ஆகியோர் காட்சி தருகிறார்கள்.

இரண்டாவது வானத்தில் நபி யஹ்யா(அலை), நபி ஈஸா (அலை) ஆகியோரிடம் கிர்கா பெறுகிறார்கள், அங்கு ஷெய்கு அலீ இபுனு காரியல் வாஸ்தி(ரலி) காட்சித் தருகிறார்கள், மூன்றாவது நபி யூசுபு(அலை) காட்சி தருகிறார்கள் அவர்களிடம் கிர்காவை பெறுகிறார்கள். ஷெய்குமார்கள் தூஸூல் கபீர்(ரலி), அலீயுல் ஆரிஃபு(ரலி), அபுஹப்சு உமர் சுஹரவர்தி(ரலி) ஆகியோரின் தரிசனம் பெறுகிறார்கள்.

நான்காவது வானத்தில் நபி இத்ரீஸ் (அலை) அவர்களிடம் கிலாஃபத் போர்வை பெற்றுக் கொண்டு தலை நிமிர்ந்தபோது தந்தையர் சையிது அபுல் ஹஸன் அலீயைக் கண்டு கண் குளிர்கிறார்கள், திரும்பியவுடன் திகைத்தார்கள். கண் எதிரில் கௌதுல் அஃளம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) அவர்களும், சையிதினா உவைசுல் கர்னீ(ரலி), ஷெய்கு மன்சூர் ரிஃபாயி (ரலி) அவர்களும் நின்று ஆசி வழங்கினார்கள்.

ஐந்தாவது வானத்தில் நபி ஹாரூன் (அலை) மற்றும் ஷைகு ஜுனைதுல் பகுதாதி (ரலி), அபுயஜீது புஸ்தாமி (ரலி), ஸிர்ரிய்யு ஸிக்தியு (ரலி), மஅரூஃபுல் கர்ஹி (ரலி),ஹபீபுல் அஜமீ(ரலி) ஆகியோரிடம் ஆசி பெறுகிறார்கள்.

ஆறாவது வானத்தின் தளத்தில் நபி மூஸா(அலை) அவர்களின் கிர்காவைப் பணிந்து ஏற்றுக் கொண்டு, இமாம் ஹுஸைன் (ரலி), இமாம் முஹம்மது பாக்கர்(ரலி), இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி), இபுராஹிம் மூர்தளா(ரலி), மூஸா தானி (ரலி) ஆகியோரிடம் ஆசி பெறுகிறார்கள்.

அதன் பின் வானவர் ஸம்ஸாயீலின் இறகில் அமர்ந்து, பறந்து சுவர்க்கத்தைப் பார்த்து மகிழ்ந்து நரகவாதிகளுக்காக விடுதலை வேண்டி துஆ செய்து, லோகங்களைக் கடந்து ஏழாவது வானத்தில் புகுந்து இகபர இரட்சகர் எம்பிரான் முகம்மது நபி (ஸல்) அவர்களின் சந்நிதானத்தில் நுழைகிறார்கள். அண்ணலும் அவர்களின் சஹாபாக்களும் அமர்ந்திருந்ததைக் கண்டு சரணாகதி என்று அடி பணிகிறார்கள்.

அண்ணல் (ஸல்) அவர்கள் கரத்திலிருந்து கிலாஃபாத்தை கிர்காவைப் பெற்றுக் கொண்டு அவர்களின் பாதம் பணிந்து பக்தி பரவசக் கண்ணீர் சொரிந்து, அங்கு நடந்த தொழுகையில் கலந்து கொண்டு அண்ணலரின் துஆவுடன்,

அருசின் எல்லைக்குள் தனியே நுழைகிறார்கள். இதயத்தில் இறை காதலின் ஆவேசம் பொங்க, அருசின் அந்தப்புரத்தில் எல்லாம் வல்ல நாயனை காண்கிறார்கள்.

ஆணாகவும் பெண்ணாகவும் மாறி மாறி நர்த்தனமிடும், இவன் தானா அந்த இறைவன்! ஜகஜ்ஜிவ்வியமாக ஒளிரும் அவன் முகக்காட்சியை அவர் பார்க்கும்போது அது தன் முகமாக இருக்க கண்டு பேராச்சரியத்தில் மூழ்கும் முன்,

நடனமாடிக் கொண்டே வந்த அவனாகிய அவள் தன்னை நெருங்கி வந்து தழுவவும் தான் அவன் அவளாகி மூழ்கி பேரானந்த பெருவெள்ளத்தில் மெல்ல மெல்ல மூழ்குவதையும், அந்த அருஷின் தரை, சுற்றுச் சுவர்கள், மேல்தளம் எங்கும், “அஃகுமது கபீரே, மனிதர்களிடத்தில் எனக்கு தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் இருப்பது போல் உம்மை புகழ்ந்து நான் தொண்ணூற்றொன்பது நாமங்களைத் துதிக்கிறேன் என்று குரல் கேட்கிறது,
இனிய சங்கீதமாய் யா அஃகுமது யா முத்தகீ.....

“அஃகுமது கபீரே, மனிதர்களிடத்தில் எனக்குத் தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் வழங்கப் பெறுகின்றன. இப்போது உமக்கு நான் தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் சூட்டுகிறேன். அவற்றை ஏற்றுக் கொள்ளும், அஹ்மது, முத்தகீ, ஹுஸைனி, ரிஃபாயி,....



ஹாதீ, மஹ்தீ, ஷரீஃப், சையிது, ரஹ்மத், முஹிப்பு, மஹ்பூபு, ஸாதிகு, முஸத்திக்கு, ஆஷிகு, மஃஷுக்கு, ஸைஃபுல்லா, தையிபு, தாஹிர், மிஃப்தாஹுல்லா, கரீம், ஸகீ, ஸிர்ருல்லா, ஜமீல், ஷஃபீஉ, ரூஹுல்லா, மக்பூர், மஸ்ரூர்,

கன்ஜுல்லா, ஸஃபீஉ, ரஃபீஉ, ஆலிம், ஆரிஃபு, தகீ, நகீ, பஹ்ருல்லா,ஷாஹிது, மஷ்ஹூது, பானி, பாகீ, முஷ்தாக்குல்லா, முபஷ்ஷிரு, வாஸிலு, காமில், ஹாமிலு,

வஸீலத்துல்லா, மூமின், ஸாலிகு, குத்புல் ஆலம், வலீ, முகர்ரபு, கௌதுல் அஃலம், ஸுல்தானுல் ஆரிஃபீன், ஸாஹிபுல் ஆலம், தாஜுல் அவ்லியா, ஹுஜ்ஜதுல்லா, முதவக்கில்,

பஷீர், ஸிராதுல்லா, முனீர், ரவூஃப், ரஹீம், அப்துல்லா, உபைதுல்லா, நூருல்லா, ஹிஜாபுல்லா, ஃபைலுல்லா, குத்ரதுல்லா, புர்ஹானுல்லா, முஸவி, ஃபாத்திமி, ஹாஷிமி, குரைஷி, கபித ரசூலுல்லா,

ஜமாலுல்லா, ஜலாலுல்லா, முகீமுஸ்ஸுன்னதீ, முதஹ்ஹிர், முஸ்லிஹ், முதபஸ்ஸிம், நிஃமதுல்லா, தாயி அல்லா, முன்திர், நதீர், முஷப்பஉ, ராஹிம், ஹலீம், முதவாலிஉ, ஸாபிர்,

ஃபகீர், ஷாகிர், கனீ, மஸ்தூரகு, கைருல் அவ்லியா, லஹுக்கு, மிஸ்பாஹு, திக்ருல்லா, ராகிபு பலகின், ஸாகிபுல் மிஃராஜ், த்ஃபீஉன்னபிய்யீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

இப்படி தொடர்ந்து பொழிந்த திருநாம இசை முடியும் போது, தன் இல்லத்தில் தொழுகைப்பாயில் கண் விழித்து படபடத்தார்கள்.

“யா ரப்பே ரஹ்மானே, எல்லா வல்லமையும் படைத்த, படைப்பும் படை கோலமும் தானாகிய யாதல் ஜலாலி வல் இக்ராமாகிய உன்னை தாழ்ந்து பணிந்து துதிக்கிறேன்” என்று சுஜூதில் விழுந்தார்கள்.

---

குறிப்பு- அல்லாஹ் தன் அடியானுக்கு தன் ஷெய்காகிய குருவின் கோலத்தில், அவனது அவன்தன் கோலத்தில் காட்சி தருவான். எனினும் எந்நிலையிலும் தனது சர்வ வல்லமையை யாதல் ஜலாலி வல் இக்ராம் என்ற பண்பை, விட்டுக் கொடுக்க மாட்டான்.
-ஹஜ்ரத் சையிதினா முஹம்மது உசேன் சாஹிபு நாகூரி.

அவனே அவனது தூதரென
அவனியில் வந்து தோன்றினனால்
அவனே ஜோதி அவதாரம்
அவனே அகிலம் அறிவீரோ
அவனே சொர்க்க நரகமென
அரிய மெய்ஞ்ஞானம் கூறிடினும்
அவனே எனக்கும் அவனுக்கும்
அறிவுத் திரையாய் நிற்கின்றான்
-ஸூஃபி மகான் அபு ஸையிது(ரலி)

## 19.உயிர்த்தெழுந்த பாலகன்

அதிகாலைப் பொழுது ஷத்தல் அரப் ஆற்றை பாய்மரப் படகில் கடந்து அக்கரையை வந்தடைந்தார்கள் ஆரிஃப்பு நாயகம். அங்கு புதிதாய் நிருவப்பட்டுள்ள பெண்ணரசி உம்முல் கராமத்தின் மாளிகையில் பெருமானார் (ஸல்) அவர்களின் அருள் அவதாரத் திருவிழா.

தோழர்களோடும் சீடர்களோடும் சோலை வழி நிழற்பாதையில் நடந்து வந்து கொண்டிருந்த தனது குருபிரான் ரிஃபாயி நாயகம் அவர்களை வரவேற்க, நூற்றுக் கணக்கான பெண்கள் புடை சூழ எதிர் வருகிறார்கள் உம்முல் கராமத். அவர்கள் பாடிவரும் பண்ணிசை புவியின் தரையையும் புல்லரிக்கச் செய்கிறது.

"நண்பனே, நாளும் பொழுதும் நான் மரணப் பாதையில் நழுவி மறைந்து கொண்டிருக்கிறேன். எனினும் என் இதய தோட்டத்தில் காதலின் வாசனை மறையவேயில்லை. என் ஆன்மாவின் வருத்தத்தை உன் காதல் கொண்டு நீ என்னை கண்டு கொள்ளவில்லை!.

உன்னை நோக்கி மட்டுமே என் இதயம் கதறுகிறது, உன்னை நோக்கி மட்டுமே என் ஆசைகள் புறண்டு விழுகின்றன. என் காதலின் ஏழ்மையின் காரணமாக உனது பொக்கிஷம் எட்டாத வெகு தூரத்திலிருக்கிறது!.

வேண்டுதலுடன் உன்னையே நான் நோக்கினேன் எனது இறுதி நித்திரை உன் மடி மீது சம்பவிக்கட்டும். உன்னை நோக்கியே என் ஆன்மாவின் அலறல் ஒலிக்கிறது. நீயே இதய ஆழத்தின் ஆழத்தில் குடி கொண்டிருக்கிறாய்.



என் காதல் நோய் எவ்வளவு கடுமையானதென்று வாழ்வின் நிச்சயமற்று நிலையில் நான் தள்ளாடிய போதும்,

என் மீது நீ சுமத்தியிருக்கும் வேதனை சுமையை மனிதர்களில் யாரிடமும் நான் முனுமுனுக்க மாட்டேன்.

என் மனதின் அலைபாய்தல் உனக்கு தெரிந்ததாக இருக்கட்டும்! அலை கடல் போலும் என் ஆசையின் ஆவேசம் அதை உறவினரோ நண்பர்களோ எவரும் அறிய வேண்டாம்!

என் உள்ளத்தில் எரியும் வேதனைத் தீ என் உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் தீய்க்கிறது! என் எல்லா வலிமையையும் நான் இழந்து விட்டேன் என் ஆன்மா வெளியேறிவிட்டது.

உன்னை அடையும் வழியை நீ காட்டமாட்டாயா? என் உடலும் ஓய்வு கொள்ள தவிக்கிறது. அலைந்து திரியும் இந்தப் பயணத்தில் மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்து உன்னோடு வந்துவிட உன் வாசலை தேடுகிறேன்.

உன் வார்த்தைகளை நம்பும் என் போன்றவர்களுக்கு உன் கலங்கரை விளக்கத்தை நீ காட்டமாட்டாயா? அந்த உன் மறுமையின் கரையும் தரையும் எங்கே இருக்கிறது? அதன் ஒரு சிறிது காட்சியை கண்டிராத எங்களுக்கு!

ஆண்டவனே பேரின்ப காதலனே உன் அன்பைத்தா! உன் அன்பைக் கொண்டுதான் இனி நான் வாழ முடியும், என் வாழ்க்கையின் கடுமைகளை நான் எதிர்கொள்ள உன்னிடமிருந்து வரும் அன்பையே நான் யாசிக்கிறேன்!.

அந்த உன்னதப் பாடலின் ஆழ்ந்த கருத்துக்களை உய்த்துணர்ந்து உள்ளத்தில் உருக்கத்தோடு வந்து கொண்டிருந்த நாயகம் அவர்களை கண்டதும், உம்முல் கராமத்தும் அவர்களின் உடன் வந்த நூற்றுக் கணக்கான பெண்களும் நாயகம் அவர்களின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

உம்முல் கராமத் மொழிந்தார்கள், "எஜமானே! இந்தப் பெண்கள் அனைவரும் இறைவனின் தேட்டத்தால் இதயம் உடைந்து கிடக்கும் எனது சிஷ்யைகள்! தாங்கள் இவர்கள் மீது இரக்கம் வைத்து இவர்களின் இதய தாபத்தை தீர்க்க வேண்டும்!" என்றார்கள்.

எஜமான் அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகம் அவர்கள், அப்பெண்கள் அனைவரையும் வரிசையாக நிற்கச் செய்து, ஒவ்வொருவராக தன்முன் வரச்செய்து முகத்திரையை நீக்கித் தன்னுடைய குளிர்ந்தப் பார்வையை பார்க்கச் செய்தார்கள்.

அடுத்த மணித்துளிகளில் அப்பெண்கள் ஒவ்வொருவரின் ஆன்மாவும் பேரின்ப வானத்தில் சிறகடித்து பறக்கத் தொடங்கிறது.

*அல்அமான் யா ரசூலுல்லாஹ்*
*அஃகதினி யா ரசூலுல்லாஹ்*
*அல்அமான் யா முஹ்யித்தீன்*
*அஃகதினி யா முஹ்யித்தீன்*
*அல்அமான் யா ஸுல்தானுல் ஆரிஃபீன்*
*அஃகதினி யா ஸுல்தானுல் ஆரிஃபீன்*
*அல்அமான் அஃதினி அல்மதத்*

என்ற கோஷம் அந்த பெண்களின் கூட்டத்திலிருந்து எழுந்து வான் வரையை முட்டியது.

* * * * *

முற்பகல் பொழுதில் உம்முல் கராமத்தின் மாளிகையில் நடைபெற்ற மவுலீது மஜ்லீசுக்குப் பின் விருந்தோம்பலின் முடிவில், குத்புல் ஆலம் கௌதுனா ஸுல்தானுல் ஆரிஃபீன் சொற்பொழிவாற்ற தொடங்கினார்கள் :- உலமாக்கள், ஷெய்குமார்கள், பொது மக்களில் ஆண்கள் பெண்கள், முதியோர், இளையோர், சிறுவர், சிறுமிகள் என்று ஆயிரக் கணக்கில் கூடியிருந்த கூட்டத்தினரிடையே நாயகம் பேச எழுந்ததும். உம்முல் கராமத்தின் சிஷ்யைகளில், மைமூனா என்ற பெண் எழுந்து நின்று :-

"எஜமானே! முஜாஹதா என்பதை விளக்க வேண்டும்!" என்றார்.

நாயகம் சுருக்கமாய் பதில் கூறினார்கள், "முஜாஹதா என்பது ஜிஹாத் புனிதப் போர் என்ற வார்த்தையின் மறைமுகமான அர்த்தமாகும். ஆன்மீக பேரின்பத்தை அடைந்து கொள்வதற்கான போராட்டம் என்பது இதன் பொருள்.

"நம்முடைய வழியில் அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடையப் பாதைகளில் அவர்களுக்கு நடந்தேற அவர்களுக்கு நாம் வழி காட்டுவோம்" என்ற இறை வசனம், அருள் குர்ஆனில் காணப்படுகிறது.



"அண்ணலெம் பெருமானார் அவர்கள் ஹதீஸ் மொழியின் படி (அல் ஜிஹாதல் அஸ்கர்) சிறு படைப்போர், நாஸ்திகர்களுடனான போர்க்களத்தில் நடத்தும் ஆயுதப் போரை விட (அல்ஜிஹாதல் அக்பர்) பெரும் படைப் போர் பெரியது வலியது, அது தெய்வீகப் பாதையில் ஆன்மீக முன்னேற்றத்துக்காக (நஃப்ஸ்) மன இச்சைகளுடைன் நடத்தும் போர் ஆகும், இதுதான் முஜாஹிதா என்னும் சத் முயற்சி."

அவர்கள் பேசி முடிந்ததும் ஒரு ஷெய்கு எழுந்து நின்றார். அவருடைய வினா ஷெய்குமார்களின் இதயத்தில் நிற்கும் ஒரு கேள்விதான். "கல்வத் வ உஸ்லா(தனிமையில் கல்வத் தவத்தில் இருத்தல்) உலகினரை விட்டு வெளியேறுதலும் தனிமைப்பட்டு தனித்திருத்தலும் பற்றி விளக்கம் தாருங்கள்" என்றார்.

நாயகம் நவின்றார்கள் "அல்லாஹ்வின் பாதையில் அடியெடுத்து வைக்கும் புதிய மகத்து, தன்னுடைய மனிதர்களை விட்டு தனித்திருக்க வேண்டும், தன் தீய செயல்களிலிருந்து முடிவாக முற்றாக விலகி கொள்ள வேண்டும்!."

தக்வா (இறையச்சம்) என்பதென்ன? என்ற மற்றொருவரின் கேள்விக்கு, ஆண்டவனுடைய தண்டனைகளிலிருந்து தப்பிக்க தீர்மானமாக முடிவெடுப்பது தக்வா என்று பதில் தந்தார்கள்.

வரா (விட்டொழிதல்) என்பது, அவசியமில்லாத சகிக்க முடியாத செயல்களை விட்டொழிதல் என்றும், ஜுஹ்த் (துறவு) அனுமதிக்கப்பட்ட சுகங்களையும் விட்டு விலகுவது என்றும் பதில் தந்தார்கள்.

மீண்டும் உம்முல்கராமத்தின் சிஷ்யை பல்கீஸ் என்ற பெண் எழுந்து பேசினார்.

"எஜமானே! சம்த் (மௌனம்) என்பது எதை குறிக்கும்? அவர்கள் பதில் கூறினார்கள் :- அண்ணல் நபிகளின் (ஸல்) ஹதீஸ் ஒன்று பின்வருமாறு கூறுகிறது. "எவர் அல்லாஹ்வாகிய இறைவனையும் இறுதி நாளையும் உண்மை கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் நல்லதை மட்டுமே பேசட்டும் அல்லது வாய்மூடி மௌனமாயிருக்கட்டும்! மௌனத்தின் பொருள் இதுதான்!" என்றார்கள்!

“ஆனால், வாய் மூடுவதென்பது நாவை அசையாமல் தடுப்பது என்பதோடல்லாமல், நடப்பவைகளில் அமைதி கொண்டு, இறை பொறுத்தம் பெற, மனதை சமாதானத்திலே நிலைக்கச் செய்வதாகும்!” என்று விளக்கினார்கள்.

கௌஃப் என்பது அச்சம் ஒருவனின் தவறான நடத்தை எதிர் காலத்தில் விரும்பத்தகாத விவகாரங்களை உண்டாக்கும் என்பதால் இறையச்சம் தேவை என்று கூறினார்கள்.

கஷ்ஃபு என்பதை விளக்குங்கள் என்றார் ஒரு சீடர்.

“கஷ்ஃப் என்பது மகத்தின் மெய்ஞ்ஞானி சக்தி. அகக்கண் திறந்து ஜோதிச்சுடர்கள் பல சித்தியாவது அது கொண்டுதான். கண்ணாடியில் பார்ப்பவனின் முகம் தெரிவதுபோல சாதகனின் இதய பரிசுத்தத்திற்கு ஏற்ப இகபர மறைவான விஷயங்கள் அவனுக்கு ஒளி ஒலி காட்சிகளாக வெளிப்படும்” என்றார்கள்.

வஹ்தத்தின் தாத்பரியத்தை விளக்கிய நாயகம், மகத்து, இறைவனைத் தவிர வேறு யாரையும் அறியாமலும், அவனை இறைவனைத் தவிர வேறுயாரும் அறியாதிருப்பதுமான ஆன்மீக நிலையென்றார்கள்.

அல்லாஹ்வின் அருகிலாதல் பற்றிய கேள்விக்கு ஆண்டகை, அடியான் அல்லாஹ்வை நெருங்கி விடுவானாயின் அவனுடைய ஆத்ம சக்தி ஏழு வானங்கள் வரை ஊடுருவிச் செல்லும், அவனிலிருந்து அதிசயங்களும் அற்புதங்களும் புறப்படும் என்றார்கள்.

நல்லடியானுடைய பண்பு என்ன வென்று ஒரு தோழர் வினவினார். ஜனங்களுடைய குற்றங் குறைகளை நோட்டமிடாமல், ஒதுங்கியிருப்பது அல்லாஹ்வை நேசிக்கும் நல்லடியாரின் பண்பு என்றார்கள்.

இவ்வாறு எஜமான் ரிஃபாயி நாயகம் சபையில் கூடியிருப்போரின் சரமாரியான கேள்விகளுக்கு பதில் கூறி கொண்டிருந்த போது, அவர்களின் ஊழியர்களில் ஒருவரான இத்ரீஸ் கைகளில் பால் நிறைந்த குவளையை ஏந்தி வந்து அவர்கள் முன் வைத்தார்.

அதனை எடுத்து அருந்துவதற்காக இருக்கையில் அமர்ந்த நாயகம் இத்ரீஸின் வருத்தம் நிறைந்த முகத்தைப் பார்த்துவிட்டு, “இத்ரீஸ் என்ன நிகழ்ந்தது உமக்கு?” என்று வினவினார்கள். அவர் கூறியது அங்கு அதிர்ச்சி அலையைப் பரவச்செய்தது.



“நாயகமே! எனது இல்லத்துக்கு மலக்கல் மவுத்து வந்து விட்டுப்போனார்கள். என் ஒரே மைந்தன் அஃகுமது ஒரு மணி நேரத்துக்கு முன் காலமாகிவிட்டான். அதனால்தான் தங்களுக்கு தாக சாந்தி செய்விக்கப் பால் கொண்டு வருவது தாமதமாகி விட்டது” என்றார்.

சிறிது நேரம் மவுனமாகவும் வருத்தமாகவும் அமர்ந்திருந்த ரிஃபாயி நாயகம், தன் இடத்தில் எழுந்து நின்று வானத்தை கை நீட்டி சப்தமிட்டார்கள், “இஸ்ராயீலே! ஓ மலக்கல் மவுத்தே இது அக்கிரமம்!. எனக்கு தெரியாமல் என் அடியார்கள் யாருடைய உயிரும் பறிக்கப்படாது என்று, எனது மிஃராஜ் இரவின் போது வல்லநாயன் அல்லாஹ் எனக்கு வாக்களித்தது தெரியாதா?”

அடுத்த கணம் ஒரு முதியவர் தள்ளாடியபடி அங்கு வந்து நின்றார். நாயகம் அவர்களுடன் ஏதோ வினயமாக பேசிவிட்டு அங்கிருந்து வேளியேறு முன் பின்வறுமாறு அருகிலிருந்தோர் காதில் விழும்படி கூறினார்.

“அஃகுமது கபீரே! அல்லாஹ்வின் மஃசூக்கே! மிஃராஜ் இரவில் தங்களுக்கு தரப்பட்ட வாக்குறுதி மெய்தான் என்று இறைவன் உறுதி செய்கிறான். தாங்கள் விரும்பினால் அந்த சிறுவனின் உயிரை மீட்டு கொள்ளலாம்” என்று கூறிவிட்டு, வெளியேறினார்கள்.

நாயகம் அவர்கள் இத்ரீஸின் இல்லம் இருக்கும் திசை நோக்கி “அஃகுமதே! எழுந்து வா!” என்று சப்தமிட்டார்கள். ஒரு சில மணித்துளிகளில் அஃகுமத் என்ற இறந்த மைந்தன், இதரீஸின் செல்வன் சபையின் முன் வந்து உயிரோடு நின்றான்!.

உலகில் தாழ்ந்து தவிக்கின்றேன்
உத்தமியே உன் கையைக் கொடு
கலக மாந்தர்கள் கூட்டத்தில்
கைதியாக நான் இருக்கின்றேன்
நிலவு போலவே மறைவேத
நீல வானிலே நீந்துகிறாய்
குலவு பேரின்ப காதலியே
குவளயத்தில் எனை காப்பாற்று
-ஸூஃபி மகான் அபுஸையிது(ரலி)

## 20. கலிஃபாக்களும் சீடர்களும்.

பௌர்ணமி நிலவின் பால் ஒளியில் கஅபத்துல்லாவின் நீல திரைச் சீலை பளபளத்தது. பாலைவன காற்றில் திரைமீது படர்ந்த அலைகள் நீலத் திரைக் கடலின் மேற்பரப்பை நினைவூட்டியது.

பக்கா வென்னும் அந்தப் பள்ளத்தாக்கை சுற்றி அமைந்த உயர்ந்த குன்றுகளில் வானவர்கள் இறங்கி அமர்ந்தது போல் தோன்றியது. சையிதினா அஷ்ஷெய்கு அஃகுமது கபீர் ரிஃபாயி நாயகம் கஅபாவின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கையில், ரிஃபாயி ஃபக்கீர்மார்களுக்காக அவர்கள் தெரிந்து கொண்ட தஃப் தாயிரா கொட்டை ஏந்தியிருந்தார்கள், அவர்களோடு உடன் வந்திருந்த நூற்றுக் கணக்கான கலிஃபாக்களும் சீடர்களும் தஃப்புகளை கையில் ஏந்தியிருந்தார்கள்.

எழுபது வயதை தாண்டிவிட்ட எஜமான் அவர்கள், "நான் வாழ்நாளில் இறுதியாக ஒருமுறை ஹஜ்ஜு செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன், என்னோடு வர விரும்புவோர் வரலாம்" என்று பஸ்ராவிலிருந்து கூறிக்கொண்டு, புறப்பட்ட போது, பஸ்ரா, வாஸித்தி, உம்முல் உபைதா ஆகிய நகரங்களிலிருந்து எஜமானின் நேசர்கள் பலர் பயணத்துக்கு தயாராகிவிட்டார்கள்.

குதிரைகளிலும், கோவேறு கழுதைகளிலும், ஒட்டகை முதுகிலுமாக பயணித்து, நூற்றுக் கணக்கானோர் பின் தொடர நாயகமவர்கள் சில வாரங்களில் மக்கமா நகரை வந்தடைந்தார்கள்.



ரிஃபாயி நாயகத்தின் பிரதான கலிஃபாக்களில் சுல்தான் முஹம்மது, இஸ்மாயில், ஹாரூன் ரஷீது ஆகியோர் ரூம், திமிஷ்க், பாக்தாத் ஆகிய நகரங்களின் முன்னாள் அமீர்களாவார்கள். ரிஃபாயி தரீக்கா உலகெங்கும் பரவுவதற்கு இவர்கள் முக்கிய காரணமாய் இருந்திருக்கிறார்கள்.

மறுமை வாழ்வையே பிரதானமாகக் கொண்ட ஃபக்கீர்மார்கள் சிலர் இரந்து உண்ணுவோராய் வாழ்ந்தார்கள். அவர்களது நடைமுறை பழக்க வழக்கங்கள் மற்றவர்களினின்றும் மாறுபட்டிருந்தன, ஆரிஃபு நாயகத்திடம் ஈடுபாடு கொண்டிருந்த இவர்களிடம் அற்புத சக்திகள் வெளிப்படத் தொடங்கின.

"யா ஷெய்க்!" என்ற ஒரே ஒரு சப்தம் எழுப்பி, விஷப் பாம்பை கையில் பிடிப்பார்கள், எரியும் தீயில் இறங்கி நடப்பார்கள், கூரிய வாளாலும் குரூஸாலும் தலைநடுவில் குத்திக்கொள்வார்கள், அவர்களை பாம்பும் தீயும் கூர்வாளும் தீங்கு செய்யாது. வெட்டுக் காயமோ, தீக்காயமோபட்டால், "யா ஷெய்க்" என்று உச்சரித்து எச்சிலைத் தடவுவார்கள். காயமோ, உதிரக் கசிவோ, அடையாளம் தென்படாமல் மறைந்து விடும்.

சுன்னத்வல் ஜமாத்தை கண்ணியப்படுத்தி ஷாஃபி மதுஹபை பின்பற்றி வந்த ஆரிஃபு நாயகம், ரிஃபாயி அஹ்மதியா தரீக்காவை நிருவியபின் குர்ஆனையும், ஹதீஸையும் பின்பற்றி ஃபுகராக்களின் நடைமுறை வாழ்க்கையை உண்டாக்கினார்கள். ஷரீஅத்துடன் ஹக்கீகத்தை இணைத்து நடத்தும் பண்பாட்டை உண்டாக்கினார்கள்.

ஆனால், சுன்னத்வல் ஜமாத்தை மரியாதைக்குறைவாகப் பேசும் தவறான கொள்கை வாதிகளிலிருந்து ரிஃபாயி ஃபக்கீர்கள் வெகுதூரம் விலகியிருக்கிறார்கள். குர்ஆன் ஹதீஸ் இமாம்கள், இறைநேசச் செல்வர்கள், அனைவரையும் அன்றும் இன்றும் கண்ணியப்படுத்தி பாடிப் பரவி கொண்டாடி வருகிறார்கள்.

எஜமான் ரிஃபாயி நாயகத்திடம் நேரடியாக முரீது என்னும் ஞானதீட்சைப் பெற்றவர்களுக்கு எண்ணிக்கையே இல்லை, முரீதீன்களில் உலக வாழ்க்கையைத் துறந்து விட்டவர்களில் ஜாஹிதீன்கள் மட்டும் இருபதாயிரம் பேர் என்று சொல்லப்படுகிறது.

'நான் சந்தித்து உசாவிய ரிஃபாயி நாயகத்தின் சீடர்கள் ஒவ்வொருவரும் ஒரு இறை நேசச் செல்வராக காணப்பட்டார்' என்று சுலைமான் அன்சாரி என்ற பெரியார் கூறியுள்ளார். 'ஷாமிலிருந்து (சிரியா) ரூம் (துருக்கி) வரை ஆரிஃபு நாயகத்தின் முரீதுகளைக் கண்டேன்' என்று ஸூஃபி அத்தார் என்ற ஷெய்கு கூறினார்.

நூருத்தீன் ஜாமி (ரலி) என்ற இறை நேசரின் கூற்று ஆச்சரியமானது "இராஜாளிப் பறவையின் எல்லையில் மற்றப் பறவைகள் தாழ்ந்து பதுங்கிப் பறப்பது போல, ஷெய்கான அஃகுமது கபீர் (ரலி) வாழ்ந்த காலத்தில் செயலற்றவர்களாக காணப்பட்ட அவர்களின் கலிஃபாக்களும் முரீதுகளும், "நாயகம் அவர்களின் மறைவுக்குப் பின் அதி அற்புதங்களை நிகழ்த்தும், மகத்துகளாகவும், ஃபக்கீர்களாகவும் பரிணமித்து விட்டனர்" இவ்வாறு அப்பெரியார் கூறுகிறார்.

கஅபாவின் தலை வாசலில், நூற்றுக் கணக்கான தொண்டர்களுடன் நின்றிருந்த ரிஃபாயி நாயகம், தங்களின் தஃப் என்னும் கொட்டை விண்ணில் விட்டெறிந்து, "அல் அமான் அல்மதத் யா இலாஹி இல்லல்லாஹ்" என்று உரத்த குரலில் சப்தமிட்டார்கள், எஜமான் அவர்களும், அவர்களின் தோழர்களும் கஅபாவை இடம் சுற்றி தவாபு செய்து முடியும் வரை,

அந்த தஃப் விண்ணில் அவர்களுக்கு முன்பாக பறந்தபடி கஅபாவை சுற்றி சுற்றி ஓசை எழுப்பியது, அந்த ஓசையுடன் இறைவனின் நூரு திருநாமங்களும் அசரீரியாக ஒலித்துக் கொண்டே இருந்தன.

கஅபத்துல்லாவின் தலை வாசலுக்கு நாயகம் அவர்கள் வந்து நின்றபோது அவர்களின் தலைக்கு மேல் சுழன்ற தஃப் தொடர்ந்து ஒலித்தது.

இறைவன் ரிஃபாயி நாயகம் அவர்களை விளித்து மிஃகுராஜில் கூறிய நூறு திருநாமங்களும் அசரீரியாக தொடர்ந்து ஒலித்தது.

இந்த விசித்திரமான சம்பவம் மக்க நகரமெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.



காத்திருக்கின்றேன் உனக்காக
காதல் தெய்வமே கதவைத்திற
ஆத்திரக் காரன் நான் உன்னை
அறிந்தது மில்லை கண்டதில்லை
சூத்திரமாக ஒரு ஸூஃபி
சொன்ன சொல்லை நம்பி உனை
நேத்திரத்திலே நிறைந்துள்ளேன்
நேரில் வாராய் பேரின்பமே
*-ஸூஃபி மகான் இப்னுல் அரபி(ரலி)*

## *21. வருந்தும் உயிர்களை அறிந்த போதெல்லாம்*

விடிய விடிய மழை பொழிந்தது. வீசிய காற்றும் விடா மழையும் ஓய்ந்த பின்னும் குளிரும், இருளும் பூமியின் மீது கவிழ்ந்திருந்தது. பின்னிரவில் எழுந்து தஹஜ்ஜத் தொழுகையை முடித்து தியானத்தில் அமர்ந்தார்கள் ரிஃபாயி நாயகம்.

தியானத்தின் போதுதான் தாத் என்னும் பரம்பொருளின் தரிசனம் மனிதனுக்கு கிடைக்கிறது. இந்த தாத்தின் சிஃபாத்தென்னும் குணம் கொண்டுதான் உயிர் உடல் இயக்கங்கள் உண்டாகின்றன. நுக்தா என்னும் புருவ மத்தியில் தியானம் தரிப்படும் போது பரஞ்சோதி வெளிப்படுகிறது.

அல்லாஹு நூருல் ஸமாவாத்தி வல் அர்ளி... அல்லாஹ்வாகிய அவன் வானம் புவிகளின் ஜோதியாக இருக்கிறான். இந்த ஜோதியை மனிதனுக்கு காட்டித் தருபவர்தான் ஷெய்கு என்னும் நபி வழி குருபாரம்பரியத்தின் பிரதிநிதி,

கடமையை நிறைவேற்றி பல்லாயிரக் கணக்கான சீடர்களுக்கு தியானத்தின் தாத்பர்யத்தை உணர்த்திய, எழுபதாண்டை தாண்டிய வயோதிகராக, நாயகம் அவர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் தங்கள் சீடர்களிடம், "நீங்கள் எல்லாம் என் உயிரின் பிள்ளைகள் இம்மையிலும், மறுமையிலும் உங்களை காப்பாற்றுவது என் கடமை" என்பார்கள்.

ஏழை எளிய மனிதர்களின் மீது, ஆதரவற்ற அனாதைகளின் மீது, நொண்டி முடமான நோயாளிகளின் மீது அவர்கள் காட்டும் அன்பு அதீதமானது வாயில்லாப் பிராணிகள் மீது மட்டுமல்லாமல், ஈ, கொசு, பூச்சிகள், புழுக்கள் மீதும்

அவர்கள் காட்டும் இரக்கம் மற்றவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றும்.

தன் பசிக்கு தேவையான இரத்தத்தை அது குடித்துவிட்டுப் போகட்டும், என்று தன்னை கடிக்கும் மூட்டைப் பூச்சியையும், கொசுவையும் அதன் இஷ்டப் படி விட்டு விட்டு வேதனையை சகித்து கொண்டிருப்பார்கள்.

“பகைவர்களிடமோ, நண்பர்களிடமோ படைத்தவனின் சிருஷ்டிகளில் எதனிடமும் அழுக்காறு இல்லாதவனாக நீ ஆகும் போதுதான் இஃக்லாஸ் என்னும் சித்த சுத்தி உனக்கு சம்பூர்ணமாகும் என்று கூறுவார்கள்.

“அகத்தூய்மை உனக்கு உண்டாகிவிட்டால் காட்டில் வாழும் கொடிய விலங்கினங்களும், வான உச்சியில் பறக்கும் வலியப் பறவைகளும் கூட உன் வார்த்தைகளுக்கு கட்டுப்படும்” என்று நாயகம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

அன்று விடியா விடியலில் தஹஜ்ஜத்தும் தியானமும் முடித்துவிட்டு தொழுகைப் பாயிலிருந்து எழுந்த ரிஃபாயி நாயகம், பள்ளி வாசலுக்குச் சென்று ஃபஜ்ர் தொழுகையில் கலந்து கொள்ள ஆயத்தமானார்கள். தங்கள் ஆடைகளை ஒவ்வொன்றாக எடுத்தார்கள்.

ஆனால், அவர்களின் அகன்ற ஜுப்பாவின் தளர்வான கைப்பகுதிக்குள் புகுந்து ஒரு பூனைக்குட்டி தூங்கி கொண்டிருந்தது. கைக்கு எட்டிய இடத்தில் வேறு சட்டை இல்லாததால், பூனைக் குட்டியின் தூக்கத்தை களைக்க விரும்பாமல் சட்டையின் , பூனை உறங்கும் கைப்பகுதியை கத்தரித்து விட்டு சட்டையை அணிந்து கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

பொழுது விடிந்து வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்த போது பூனைக்குட்டி தூக்கம் கலைந்து அறையிலிருந்து வெளியேறி இருந்தது. கத்தரிக்கப்பட்ட கைப்பகுதியை சட்டையோடு இணைத்து தைத்துக் கொண்டார்கள்.

முதியவர்களை அன்புடன் பராமரிக்கும் படி வீட்டிலிருப்போருக்கு போதனை செய்வார்கள். “நரை முதிர்ந்த முதியவரை கண்ணியப் படுத்துபவருக்கு அவருடைய முதிய வயதில் ஆண்டவன் ஒரு உதவியாளரை அனுப்புவான்” என்ற ஹதீஸை சொல்லிக்காட்டுவார்கள்.



தொற்று நோயுற்று சாகக் கிடந்த நாயொன்றை ஊருக்கு வெளியே கூட்டிச் சென்று மூன்று நாட்கள் ஒரு குடிசையில் வைத்து அதற்கு மருந்து தந்து உணவளித்து, சுகப்படுத்தி, குளிப்பாட்டி ஊருக்குள் அழைத்து வந்த நாயகத்தைக் கண்டு உம்முல் உபைதா நகரம் வாயில் கை பொத்தி நின்று பார்த்தது, வெளியூர் சென்றுவிட்டு ஊர் திரும்பும் நாட்களில் ஊருக்கு வெளியே, காடுகளில் நுழைந்து விறகுகளை சேகரித்து எடுத்து வருவார்கள். தூக்கி சுமந்து கொண்டு வந்து ஆதரவற்ற விதவைகள், இயலாதவர்கள், ஏழைகளுக்கு கொடுத்து உதவுவார்கள்.

“மக்களில் ஏழைகளே மகிமையுடையவர்கள், ஏழ்மை நபிமார்களின் ஆடை, சான்றோர்களின் அணிகலன், பயபக்தி உடையவர்களிடம் மகுடம், மெய்ஞ்ஞானிகளின் வேட்டைப் பொருள், இறைநேசச் செல்வர்களுக்கு அவன் தரும் கண்ணியம்” என்று எஜமான் கூறியிருக்கிறார்கள்.

உடலாலும் அதன் அங்கங்களாலும் செய்யும் வணக்கங்களை விடவும், (நஃபில்) இஷ்டப்பூர்வமான வழிபாடுகளை விடவும், தருமம் செய்வது சிறந்தது சிரேஷ்டமானது, என்று கூறியுள்ளார்கள்.

ஒருமுறை அவர்களின் சீடர்களுக்குள் பகை மூண்டு, ஒரு குறிப்பிட்ட சீடரை வீடு புகுந்து அடிக்க பலர் ஒன்று கூடி திட்டமிடடனர். விஷயமறிந்து நாயகம் தாக்கப்பட இருந்த நபரை வெளியில் அனுப்பி அவரிடத்தில் தானே போர்த்திக் கொண்டு படுத்துவிட்டார்கள்.

வந்தவர்கள் போர்வையை நீக்காமல் அடித்துப் புரட்டிப் போட்டுவிட்டு பார்த்தபோது போர்வைக்குள் தங்கள் குருநாதர் புகுந்திருப்பது கண்டு விதிர் விதிர்த்து நின்றனர், அவர்களை நாயகம் மன்னித்தார்கள், அன்றே அந்த முரட்டு சீடர்கள் தங்கள் கெட்ட குணங்களை விட்டுவிட்டனர்.

நாயகத்தின் வீட்டுக்குள் ஒரு திருடன் நள்ளிரவில் புகுந்துவிட்டான். உறங்கி கொண்டிருந்த நாயகம் விழித்து அவனை பார்த்துவிட்டார்கள். நிலை குலைந்து நின்ற திருடன் என்ன ஆகுமோ என்று அஞ்சி நடு நடுங்கினான், நாயகமோ ரொட்டி மாவு மூட்டை ஒன்றை அன்பளிப்பாகத் தந்து அவனை அனுப்பி வைத்தார்கள்.

அவர்களின் காலத்தில் வாழ்ந்த மகான்கள் பலர் அவர்களைப் போற்றிய வார்த்தைகளோ இறையச்சத்தை உண்டாக்குபவை,

“சூரியன், நகரங்களின் மீதும், சிற்றூர்களின் மீதும் தனது இரணங்களை வீசுவது போல, ரிஃபாயி நாயகம் தேசமெங்கும் தனது மெய்ஞ்ஞானச் சுடரை வீசியிருக்கிறார்கள்'' என்று ஷைகு அஹ்மது ஃபாரூகி கூறியுள்ளார்கள்.

“தீன் (மார்க்கம்) துன்யா (உலகம்) இரண்டிலும் நற்பயன் தரும் பேரரசரைத்தான், ஆண்டியின் கோலத்தில் ரிஃபாயி நாயகம் அவர்களை நீங்கள் தரிசிக்கிறீர்கள், புரிந்து கொள்ளுங்கள்'' என்றார் ஷைகு இபுறாஹீமுல் காஸ்ரூனி.

அஷ்ஷைகு சிஹாபுத்தீன் சுஹ்ரவர்தி அவர்களின் சிறிய தந்தையரான ஷைகு முகம்மத் இபுனு பஸ்ரி அவர்களோ, “மற்ற மகான்களின் ஆத்ம ஞானப் படித்தரங்களை ஒருவாறு யூகிக்கலாம், ஆனால் அஃகுமத் கபீர் ரிஃபாயி நாயகத்தின் ஆன்மீக அந்தஸ்தை, தரஜாவை அறிய யாராலும் முடியவே முடியாது'' என்றார்கள்.

“ஒரு சிறிய அணுவுக்குள் அகிலாண்டம் அனைத்தையும் ஆண்டவன் புகுத்தி வைத்திருக்கிறானென்றால், யாராலும் மறுக்க முடியுமா? இந்த கவிதைக்கு இலக்கணமே ரிஃபாயி நாயகம் அவர்களுக்குள் பொதிந்திருக்கும் தெய்வீக ஆற்றலை நீங்கள் புரிந்து கொள்ள முடியாது'' என்றார்கள், முஹத்திஸ் ஷைகு அப்துஸ்ஸமீவு என்ற பெரியார்.



உன்னை நான் பார்க்காத போதும்
உன்னை வணங்குகின்றேன்
என்னை நீ பார்க்காத போதும்
என்னிலே உன்னை கண்டேனே
உன்னிலே இல்லாத தொன்றும்
உலகிலே உண்டாவ தில்லை
தன்னிலே தானான இறைவா
தயாளனே கண்பாரென் தலைவா
*-ஸூஃபி மகான் அபுஸையிது(ரலி)*

## 22.“அல்மதத் யாஷெய்க்!''
## ஜெயகோஷம் கேட்கட்டும்!
## ஜெயக் கொடி பறக்கட்டும்!

ஹிஜ்ரி 578ம் ஆண்டு ஜமாதுல் அவ்வல் மாதம், எஜமான் ரிஃபாயி நாயகம், ஒருமாத காலமும் வயிற்று வலியாலும், வயிற்றுப் போக்காலும் அவஸ்தைப் பட்டு வந்தார்கள்.

“லில்லாஹி ஜா அயது ஸிர்ரியா ரப்பி- அல்லாஹ் ஆகிய பராபரனின் மீது ஆணையாக அவனது அகமியம் பொருந்திய திருக்கரம் வெளிப்போந்தது'' என்ற சொற்றொடர் ஹிஜ்ரி 578க்கு அர்த்தமானது என்று நுஜூம் கணிதவியலார் கூறுகிறார்கள்.

*　*　*　*　*　*　*

ஜனனத்தை விட மரணம் மனிதனை ஆச்சர்யத்திலும் அச்சத்திலும் ஆழ்த்துகிறது. ஏனெனில் அது இன்னதென்பதில் அவனுக்கு முடிவான முடிவு கிடைப்பதே இல்லை. ஆனாலும் தனக்கு முடிவே இல்லை, மரணமே இல்லை என்பது போல மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

புலனுலகம், மற்றும் புலனைக் கடந்த உலகம் இவற்றிற்கு இடையே உள்ள மாயத்திரையை கிழித்து எட்டிப்பார்க்க பகுத்தறிவால் முடிவதில்லை. ஆனால் அவதார புருஷர்களும், மெய்ஞ்ஞானிகளும் இந்த திரையைக் கிழித்துக் கொண்டு புலனைக் கடந்த உலகத்தைப் பார்த்து அந்த உலகோடு பழகிப் போய் விடுகிறார்கள்.

இன்ஸான் காமில் என்ற சம்பூர்ண மனிதன் அல்லது ஆன்மீக வெற்றி பெற்றுவிட்ட மனிதனின் எல்லைகளை கவனித்து பார்க்கும் போது அவன் இறப்பும் பிறப்பும் அற்றவனாக காணப்படுகிறான். ஸூஃபி ஞானி ஒருவர் கூறுகிறார் :-

"மனிதா! நீ பிரபஞ்சத்தின் தலைப்பாகை! நீ பாதாள உலகத்தின் பாதரட்சை என்று உன்னைக் கருதிக் கொண்டிருப்பது உன் தவறு.

"விண்ணிலும் சரி மண்ணிலும் சரி, உன்னிலும் உயர்ந்த மகிமை எவ்வுயிருக்கும் எப்பொருளுக்கும் கிடையாது. ஜின்கள் எனும் மாயாவிகள், தேவர்கள், தேவதைகள் என்னும் வானவர்கள், மற்றும் படைக்கப்பட்டவை அனைத்தும் உன் அடிமைகளாயும், அவைகளுக்கு நீ வணக்கப் பொருளாயும் உள்ளதை நீ உணரமாட்டாயா?

மனிதா! அர்சு என்னும் ஆண்டவனின் ஆட்சி பீடம் குர்சு என்னும் அவனது எல்லைகளில்லாத சாம்ராஜ்யம், லவ்ஹு என்னும் விதிவசப் பட்டோலை, கலம் என்னும் விதிவரிகளை எழுதும் எழுதுகோல், சுழன்று வரும் சூரியன், சந்திரன், சுடர்விடும் நட்சத்திரங்கள், அகிலப் பிரபஞ்சம் முழுதும் உன் தோற்றமாகும்.

"எவர் தங்கள் ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்தி கொண்டார்களோ அவர்கள் ஜெயம் பெற்றார்கள்" என்ற அருள்மறை குர்ஆனின் வாக்கியத்தைப் போல நீ ஜெயம் பெற்றுக்கொள். "அனமின் நூரில்லாஹி குல்லு ஷையின் மினன்நூர் - நான் பரமனின் ஜோதி, படைக்கப்பட்டவை என்னுடைய நான் என்ற ஜோதியிலிருந்தும் உண்டானது" என்ற நபிமொழியை ஆராய்ந்து பார்!.

தவுறாத், ஜபூர், இன்ஜில், ஃபுர்கான் மற்றும் வேத கிரந்தங்களெல்லாம் உன் கல்பு என்னும் இதயக் கண்ணாடியிலிருந்து வெளிப்பட்டவை. இதை அறியாது , தங்கம் தன்னை தகரமென்று நினைப்பது போல நீ மறதியில் ஆழ்ந்து கிடக்கிறாய்".

இவ்வாறு ஸூஃபி மகான் சொன்னது போல தன்னை அறிவது ஃபர்லாகிய கடமை, தன் தலைவனாகிய இறைவனை அறிவது நபிவழி என்று எந்த மனிதன் அறிந்து தன் ஆன்மாவை கை வரப்பெற்றானோ அவன் ஜெயம் பெற்றான். அவன் சம்பூர்ண மனிதன், இன்ஸானே காமில்! ஆகிறான்.

"வஹுவல் ஹக்கு வயஹ்தி மன்யஷாவு- "இதுதான் உண்மை, இதையாரொருவன் நாடுவானோ அவன் வெற்றி பெறுவான்! மனிதா உன் சரீரமே மரணிக்கிறது உனக்கு மரணமில்லை.

* * * * * * *



சாதாரண உலக மாந்தர்களில் நிலைமைகளை எப்போதோ கடந்துவிட்ட எஜமான், (நப்ஸு) ஆன்மா ஒவ்வொன்றும் மரணத்தை சுகித்தே தீர வேண்டும், என்ற அருள்மறை திருக்குர்ஆனின் தீர்ப்பை ஏற்றவர்களாக உலக வாழ்வை முடித்து கொண்டார்கள்.

பிறை 27ம் நாளில் அதிகாலைப் பொழுதில் மரணமிலாப் பெருவாழ்வை நோக்கி கண்குளிர்ந்த எஜமான் கௌதுல் அஃளம் குத்புல் ஆலமீன் ஸுல்தானுல் ஆரிஃபின் சுல்தான் சையிது அஃகுமது கபீர்(ரலி) ஆன்ம கோலமாய் உடலை விட்டு வெளியில் நடந்தார்கள்.

அல்லாஹ் அவர்களைப் பொருந்தி கொண்டவர்களாக அவர்களின் நஃப்ஸு என்னும் ஆன்மா அல்லாஹ் என்ற ஆதி அந்தமற்ற நாயனைப் பொருந்திவிட்ட நிலையில், உலக வாழ்க்கையை விட்டு வெளியேறினார்கள்.

அதோ வானவர் கோன் ஜிபுரீல் (அலை) அவர்களும், இஸ்ராயீல் (அலை) முதலிய வானவர் கூட்டமும் பின்தொடர, அவர்கள் தங்கியிருந்த இல்லத்தின் வாசலைத்தாண்டி நடந்து தெருவீதியில் நின்றிருந்தப் பரியின் முதுகிலேறி, அண்ணல் நபி(ஸல்) அவர்களின் திருமதினா சந்நிதானத்தை நோக்கி ஆண்டவர்கள் விண்ணில் பறப்பதை உம்முல் உபைதாவின் பெருந்திரளான மக்கள் புறக்கண்களால் பார்த்து பிரம்மிப்படைகிறார்கள்.

தனது ஸ்தூலம் புற உடலை விட்டு வெளியேறி தன் சூக்குமம் என்ற உடலில் புகுந்து சூட்சுமப் பார்வையால் ரூஹ் என்னும் ஆன்மாவின் அகிலத்தையும், சிர்ரென்னும் இரகசியத்தின் அர்சென்னும் மூலத்தையும் நோட்டமிட்ட படி பறந்து செல்லும் ஸுல்தானுல் ஆரிஃபீன் எஜமானின் ஆன்மீகப் பிரவாகத்தில் நீந்தியபடி,

பூமியின் பரப்பில் நிற்கும் ஸ்தூல உடலுக்குரிய மாந்தர்கள், சில மணித்துளிகள் வரை தங்களுக்குள் இருக்கும் சூக்கும, ஆத்தும உஜூது உள்ளமை மேலோங்க, எஜமானின் விண்ணேற்ற காட்சியை பார்க்கிறார்கள்.

"அல்அமான் யா ரசூலுல்லா அல்மதத் யா முஹ்யித்தீன் அஃதினியா ஸுல்தானுல் ஆரிஃபீன்! யா ஷெய்கு யா ஷெய்கு யா ஷெய்கு!" என்று கூப்பிட்டு சீடர் கூட்டம் எழுப்பிய கோஷம் வானத்தின் எல்லைகளைத் தொட்டு புவியெங்கும் எதிரொலித்தது.

தொற்பொழிவுகள்



## ஸூஃபியின் பண்புகள்

அல்லாஹ்வுடைய நல்லடியார்களே அறிந்து கொள்ளுங்கள்! ஸூஃபி ஞானிகளின் பிரதான பண்பு அவர்கள் தங்கள் நஃப்ஸ் ஆகிய ஆன்மாவிலிருந்து அசுத்தங்களை நீக்கி கொள்வதுதான். மேலும் தங்கள் சொல்லிலும் செயலிலும் குமுகாய பழக்க வழக்கத்திலிருந்தும், மனிதர்களிடமிருந்தும், உலகின் தீய பழக்கங்களிலிருந்தும் விலகி இருப்பதாகும். அந்த ஸூஃபி ஞானி தன்னுடைய நஃப்ஸ் ஆகிய ஆன்மாவுடன் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர் அதன் இழிந்த பண்புகளிலிருந்து விலகி இருக்கிறார்.

பொதுமக்களோடு அவர் கூடி வாழ்ந்தாலும் அவர்களுடைய தீய செயல்களிலிருந்து அவர் விலகி இருக்கிறார். அவருக்கும் ஒரு இதயம் இருக்கிறது, அது அல்லாஹ்வுக்கு சொந்தமானது. அவர் மீதும் காலம் உதயமாகிறது. ஆனால் அவர்களை பொறுத்தவரை காலம் தன் வரையறைகளை கடந்தது.

ஸூஃபி ஞானி ஆனவர் (அல்ஹக்) சத்தியத்தின் ஒருமைப்பாட்டின் மீது உறுதியாகவும் நிலையாகவும் நின்றுவிடுகிறார். அந்த கம்பீரமான சத்தியத்தின் முன் பணிந்து தன்னை அர்ப்பணித்து கொள்கிறார். அல்ஹக் என்ற அந்த சத்திய பராபரனின் முன் வேறெவரையும் எதிர் பாராமல் அவனை போதுமாக்கி கொண்டுவிடுகிறார்.

அந்த ஸூஃபி தனக்கும் சத்திய பராபரனுக்கும் இடையிலே உள்ள உறவு சேதமடைந்து விடக்கூடாது என்பதற்காக, மற்ற யாருடனும் தன் இதயத்தை சார்ந்து விட விடாமல் எந்நேரமும் தன் கைகளில் சாட்டையை பிடித்திருக்கிறார்.

அவர் தன்னுடைய நஃப்ஸ் என்ற ஆன்மாவை தெய்வீக ஒளியைக் கொண்டு (நூர்) ஒளி மயமாக்கி இருக்கின்றார். அவர் தன்னுடைய இதயத்தை அதன் மீது நேசத்தைக் (முஹப்பத்) கொண்டு வெளிச்சமாக்கி இருக்கின்றார். தன்னுடைய உள்ளமையை மஹ்ரிபா என்ற மெய்ஞ்ஞானத்தின் ஒளியைக் கொண்டு ஒளிரச் செய்திருக்கிறார்.

அந்த பராபரனின் மீது கொண்ட ஆசை என்னும் சிறகுகளை விரித்து அவரது இதயப்பறவை பறந்து கொண்டிருக்கிறது. அவருடைய உள்ளமையானது சத்திய பராபரனுக்காக அவனுடைய பாதையில் அவனோடு சார்ந்திருக்கின்றது. அவர் அவனை நோக்கியவராக இருக்கிறார். அவனை உறுதியாக நம்பியவராக இருக்கிறார். அவனிடம் நிச்சயத்துவம் பெற்றிருக்கிறார்.

அவர் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் நன்றியுடன் அவனுடைய விருப்பங்களுக்கும் உவப்புக்கும் சரணடைந்திருக்கிறார். தன்னுடைய நாவாலும் இதயத்தாலும் எந்நேரமும் அவர், மறதி என்ற பாலைவனத்தில் தொலைந்து விடாமலும், தெய்வ நிந்தனை என்ற கடலில் மூழ்கி விடாமலும், அந்த சத்திய பராபரனை துதித்துக் கொண்டே இருக்கிறார்.

தன்னுடைய ரப்பாகிய இறைவன் தன்னை எந்நேரமும் கவனித்து கொண்டிருக்கிறான், தன்னுடைய ஒவ்வொரு நிலையையும் அவன் தெரிந்திருக்கிறான் என்பதை அவர் உணர்கிறார். சத்திய பராபரனின் மேல் அதிகாரத்தின் முன் அவர் கரைந்து விடுகிறார். அவனது வல்லமையின் கம்பீரத்துக்கு முன் ஸூஃபியின் தான் தன்மை உடைந்து சிதறிக்கிடக்கின்றது.

இறைவன் ரப்பின் மீது கொண்ட நேசம் (முஹபத்) என்ற இனிமையைத் தவிர, வேறு எல்லா ஆசா பாசங்களையும் ஒதுக்கிவிட்டு, மிக புனித நிலையில் அவனது ஆசிகள் என்ற கடலில் அவர் எந்நேரமும் நீந்திக் கொண்டிருக்கிறார்.

அல்லாஹ்வுடைய நல்லடியான் என்ற நேர் வழியில் ஸூஃபி நடந்து முன்னேறுகிறார். வணக்கத்தின் வெளிப்புறத்தில் அவர் நின்று விடுவதில்லை. அவனுடைய நெருக்கத்தை அடையும் வரை அவனுடைய மன்னிப்புடனும், ஆசியுடனும், அவன் மீது கொண்ட ஏக்கத்தின படிகளில் அவர் அமர்ந்து கொண்டிருக்கிறார். ஸூஃபியினுடைய இதயம் போன்றே அவருடைய நாவும் இருக்கின்றது. அவரது பேச்சிலும் அவருடைய உள்ளமையிலும் ஒருமைத் தன்மை காணப்படுகின்றது.

கீழேக்காணும் மறைவாக்கியத்தில் கூறப்படுவது போன்ற வெட்கக்கேட்டை விட்டு அவர் விலகி இருக்கின்றார்.



"உங்களால் செய்ய முடியாத காரியங்கள் பற்றி நீங்கள் எதற்காக சத்தியம் செய்கின்றீர்கள்?" -அல்குர்ஆன் 61:2.

அவனுடைய எந்த ஒரு சிறிய ஆசிக்கும் அவர் நன்றியுடையவரக இருக்கின்றார். மலை போன்ற துன்பத்துக்கும் வேதனைக்கும் நடுவில் அவனுக்காக சகித்துக் கொண்டு அமைதியாக இருக்கிறார். தன்னுடைய இரட்சகனின் முடிவுகளுக்கு தன்னை போதுமாக்கி கொள்கிறார். அவருடைய இதயம் அல்லாஹ்வுக்காக எந்நேரமும் விழிப்புடன் இருக்கிறது.

அவர் அவனையன்றி வேறுயாரையும் கண்டு அஞ்சுவதில்லை. அவர் அவனையன்றி வேறு யாரிடமும் எதையும் எதிர்ப்பார்ப்பதில்லை. அவர் கேட்டால் அல்லாஹ்விடமே கேட்கிறார். துன்பத்தை கொடுப்பதற்கும், ஆசிர்வதித்து சந்தோஷம் கொடுப்பதற்கும் தன்னை தாழ்த்துவதற்கும், உயர்த்துவதற்கும் தனக்கு துரதிர்ஷ்டத்தையும், நல் அதிர்ஷ்டத்தையும் தருவதற்கும் அவனைத் தவிர வேறு யாருமே இல்லை என்பதை அவர் அறிந்து உணர்ந்திருக்கிறார்.

பெருமானார் (ஸல்) அவர்களின் வெளிப்படையான சொல், செயல் என்ற (சுன்னத்தான) நடைமுறையோடு அவர் ஒத்துப் போகிறார். அவர்களுடைய நெறிமுறைகளுக்கும் அவர்களின் சஹாபாக்கள் என்ற தோழர்களின் நடைமுறைகளுக்கும் அவர் இணங்குகிறார். சாதாரண மக்கள் விதிவசத்தை பற்றி கவலை பட்டுக் கொண்டிருக்கிற போது, ஸூஃபி விதிவசத்தை இயக்கும் படைப்பவனை பற்றி கவலையுடன் இருக்கிறார்.

யா அல்லாஹ்! நீ அல்லாதவற்றை கொண்டு எங்களை விலக்கி நாஸ்தியாக்கு. உன்னைக் கொண்டே பேரின்ப நிலையடையும் படி செய்வாயாக!

அந்த ஸூஃபி அதப் தெய்வீக பண்புடன் மெய்த்தொண்டு என்ற ஆடையை அணிந்திருக்கிறார். அல்லாஹ்வுக்கு முன்பு ஃபக்கிர்களின் ஏழ்மை எளிமை என்ற பஞ்சு மெத்தையின் மீது தன்னுடையது என்று ஒன்றுமில்லாத சாய்மானம் மீது அவர் சாய்ந்திருக்கிறார்.

தன்னுடைய ரப்பாகிய ரட்சகனின் நெருக்கம் என்ற அறைக்குள் அனுமதிப்பதற்குரிய தகுதியை அவர் பெற்றிருக்கிறார். அவர் அந்த பராபரனின் (முஹபத்) நேசம், காதல் என்ற கிண்ணித்திலிருந்து அமுதை அருந்துகின்றார்.

அந்த ஸூஃபி அமைதியோடு அமர்ந்து தன்னுடைய கோபத்தை மென்று விழுங்கி விடுகிறார். தன் உலக ஆசைகளை துறந்து தன் இதயத்தின் இசைக்கு ஒத்து போகாமல் உலக இச்சைகளிலிருந்து விலகி இருக்கின்றார்.

தன்னுடைய விசுவாசத்தை பொறுத்தவரையில் ஸூஃபி அசைக்க முடியாத உயர்ந்த மலைச் சிகரங்களை போல் நின்று கொண்டிருக்கிறார். எந்த ஆவேசப் புயலும் அவருடைய இடத்திலிருந்து அவரை அசைத்து அகற்றி விட முடியாது.

தனக்கு உரியதல்லாத எதனையும் அவர் விரும்பமாட்டார். தனக்கு கொடுக்கப்படாததைப் பற்றி அவர் கிஞ்சித்தும் கவலைப்பட மாட்டார். படைக்கப்பட்ட எதற்கும் அவர் பணியாளனாகமாட்டார்.

ஈருலகையும் படைத்திருக்கின்ற ரப்பென்னும் ரட்சகனுக்கு தன்னை சமர்ப்பித்து அர்ப்பணமாகிவிடுகிறார். அவனிடமிருந்து வரும் துன்பங்களுக்காக அந்த சத்திய பராபரனை விட்டு முகம் திரும்பமாட்டார். தன் காதலுக்குரியவராக வேறு யாரையும் அவர் தெரிவு செய்து கொள்ளமாட்டார்.

ஸூஃபியின் மனம் என்ற ஆன்மா தவறுகளிலிருந்தும் சிலேசத்திலிருந்தும் பரிசுத்தமாகி விடுகின்றது. அவருடைய இதயம் மறதியையும் மடத்தனத்தையும் விட்டு வெகுதூரம் விலகிவிடுகின்றது. அந்த பராபரனின் வல்லமையைத் தவிர வேறு எதனைக் கொண்டும் ஸூஃபியின் இதயம் நிறைவடைவதில்லை.

அல்லாஹ் என்ற பரம்பொருளின் ஒப்புதல்தான் ஸூஃபியினுடைய போஷாக்கு. தன் தாயிடமிருந்து பரிக்கப்பட்ட குழந்தையின் அழுகுரலை போன்றது அல்லாஹ்வை நோக்கிய ஸூஃபியினுடைய அழுகுரல். அவருடைய இதயம் அல்லாஹ்வின் மீது மட்டும் சார்ந்திருக்கிறது. அவனுக்கு மட்டுமே அது அர்ப்பணிப்பாகும். அவனுக்கு மட்டுமே அவர்



நன்றியுடனிருக்கிறார். அவனிடம் மட்டுமே தன் தேவைகளை சாற்றுகிறார்.

தன்னுடைய ஒவ்வொரு செயலைக் கொண்டும் அவனை நோக்கி அவர் திரும்புகிறார். தன்னுடைய ஒவ்வொரு வார்த்தையைக் கொண்டும் அவனைப் பற்றி அவர் பேசுகின்றார். தன்னுடைய ஆசைகளை நோக்கங்களை அவனிடத்தில் அவர் ஒப்புவித்து விடுகிறார்.

அவருடைய உறக்கம் குறைவானது. அவருடைய உடல் பலவீனமானது. அவருடைய தோழன் அல்லாஹ் அவன் மாலிக் என்ற முதலாளி. ஜலீல் என்ற மாட்சிமை கொண்ட மேலாளன்.

அந்த அல்லாஹ் நமக்கு போதுமானவன். நம்மை கவனித்துக் கொள்ள அந்த கருணையாளனை தவிர வேறு யாருமில்லை. யா அல்லாஹ் எங்களை இரட்சித்தருள்வாயாக!

## 2. இறைநாம தியானம்

நல்லடியார்களே! எந்நேரமும் இறைவனாகிய அல்லாஹ்வின் திருநாமங்களை உச்சரித்து நினைவு கூறுங்கள். உங்கள் வார்த்தைகளுக்குள்ளும் உங்கள் செயல்களுக்குள்ளும் உங்கள் இதயத்திற்குள்ளும் அவன் நினைவுகளை அதிகப்படுத்துங்கள். தியானம்(திக்ர்) செய்யும் சாதகன் மிகுந்த பய பக்தியோடு அதில் ஈடுபட வேண்டும். அவனுடைய விருப்பமும், நோக்கமும் அந்த பயபக்தியிலிருந்து வெளிப்படுவதாகவே இருக்கட்டும்.

தியானிப்பதால் அவனுடைய அறிவு ஆன்மாவின் ஆசைகளை ஏற்று பண்படுகின்றது. அவனுடைய விருப்பமும் அவனுடைய எண்ணமும் பாதுகாக்கப்படுகிறது. அதன் முடிவாக அவனைத் தவிர வேறு எவருடைய நாமத்தையும் விரும்பாத நிலைக்கு சென்று விடுகிறான். அவனோடு மனோ திருப்தி கொள்வதிலேயே எல்லாவற்றையும் அடைவது சாத்தியமாகின்றது. அவனை விட்டு வேறெதிலும் காலம் கழிப்பது அனைத்தையும் இழக்கச் செய்கின்றது.

தியானிப்பவன் சத்திய பராபரனின் திருநாமத்தை கண்ணியத்தோடும் மரியாதையோடும் பணிவுடனும் தியானிக்க வேண்டும், மரியாதையுடனும் பக்தியுடனும் அவனுடைய நாமத்தை உச்சரிக்காவிட்டால் பக்தனுக்கும் பராபரனுக்கும் இடையில் ஒரு திரை விழுந்துவிடும். 'அதப்' என்னும் பணிவும் பக்தியும் தியானத்திலும் மேலானது.

தியானம் செய்பவன் தியானத்திலிருக்கும் போது அவன் திருநாமங்களை அர்த்தத்தோடு உச்சரிக்கின்ற போது உலகில் உள்ள மற்ற அனைத்தையும் மறந்து விடுகின்றார். அனைத்தும் அனைத்திலும் அல்லாஹ் அவனுக்கு பரிணமிக்கின்றான். ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானியின் இதயத்தில் பராபரனை பற்றிய பக்தியும் காம்பீரியமும் மேலோங்கி விடுகிறது.

அவன் நாவு கட்டப்படுகின்றது. அவனுடைய இதயம் இறைவனோடு ஒன்று கலப்பதற்காக பறக்கின்றது. அவன் இதயத்திலிருந்து காதல், பாசம், நேசம் ஆகிய ஒளிக்கற்றைகள் புறப்படுகின்றது. மேலும் அல்லாஹ்வுடைய அனுமதி கொண்டு மற்றவர்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் தெய்வீக சூட்சுமங்கள் தெய்வ வல்லமையின் மேலான்மை, ஜோதி ஆகியவைகள் ஆரிஃப் என்ற மெய்ஞ்ஞானிக்கு முன் திறந்து கொள்கிறது.



தியானத்தின் வகை தியானிக்கும் சாதகனை பொறுத்து வேறுபடுகின்றன. சில மனிதர்கள் அல்லாஹ் தங்களை இசுலாத்தைக் கொண்டு ஆசிர்வதித்திருப்பதற்காக அவனை தியானிக்கிறார்கள். சிலர் சுன்னத்தை பின்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களுக்கு ஒப்ப தியானம் செய்கிறார்கள். வேறு சிலரோ தங்களுடைய தியானத்தை கொண்டு அவனுக்கு நன்றி கூறுகிறார்கள். அவர்களுடைய இதயம் அவனுக்காக நொறுங்கிவிடுகின்றது.

அவர்களுடைய நாவு கட்டப்பட்டுவிடுகின்றது. அவர்களுடைய சிந்தனை மேலும் கீழுமாக புரண்டு வருகின்றது. அவனுடைய காம்பீரியத்தைக் கண்டு அவர்கள் திகைத்து விடுகிறார்கள். அவனுடைய முஹபத் என்ற நேசத்தில் அவர்கள் அச்சத்துடன் பணிந்து ஒடுங்கினார்கள். அவனைக் கொண்டே அனைத்தும் நிலைத்திருக்கிறது, நிகழ்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

திக்ர் என்ற தியானம் இரண்டு வகைப்பட்டதாகும். அறிவதை கொண்டும் மரியாதையை கொண்டும் விழிப்பு பெறுவது. இந்த விழிப்பு அச்சத்தால் ஆனது மற்றொன்று தியானிப்பவன் இதயத்தில் நேசத்தையும் காதலையும் உண்டாக்குவது. அச்சத்துடன் அவனை தியானிக்கும் சாதகன் பராபரனாகிய அவனை தியானித்து திருநாமங்களை உச்சரிப்பதை கொண்டுதான் அவனை தியானிக்க முடியும் என்று அவன் அறிந்திருக்கிறான்.

மற்றொரு தியானம் அல்லாஹ் தன்னுடைய ஆதி நிலையை எந்த உலகமும் உயிரும் உண்டாகியிருக்காத காலத்தில் யாருடைய திருநாமத்தை உச்சரிதானோ அந்த திருநாம தியானமாகும். அந்த தியானத்துக்கு உரியவர் அல்லாஹ் ஆதியும் அந்தமுமாக தன்னுடைய பெயரை உச்சரித்து தியானித்து வருகிறான் என்பதை புரிந்து கொள்கிறார். அந்த அடியானை நினைவு கூர்கிறான்.

### 3.மெய்ஞ்ஞானியின் இதயம்

மெய்ஞ்ஞானியின் இதயத்தில் அல்லாஹ் என்கின்ற பொக்கிஷம் பொதிந்து இருக்கின்றது. அவன் தன்னுடைய ரகசியத்தின் புனித ஆதி நிலையினை பொதிய வைத்திருக்கிறான். அவனுடைய ஹிக்மத் என்ற தத்துவ ஞானத்தின் கருணையும் அவனுடைய ஹக்கீகத் என்ற மறை பொருளான நேசமும்

அவனுடைய அறிவு என்னும் பிரகாசமும் அவனுடைய மஹ்ரிபா என்னும் தெய்வீக தன்மையின் அடையாளமும் ஆகிய, எந்த வானவரும் எந்த தூதரும் எந்த மனிதரும் அவனுடைய அனுமதியின்றி அடைந்து கொள்ள முடியாத பேரருளை மெய்ஞ்ஞாயின் இதயத்தில் மறை பொருளான பொக்கிஷமாக்கி வைத்துள்ளான்.

எனவே அந்த மெய்ஞ்ஞானி தன் இதயத்துக்கு எது நல்லது, பொருத்தமானது, எது இழிவானது, கலப்படமானது என்பதை கவனித்து நடந்து கொள்ள வேண்டும். எல்லா காரியங்களிலும் நடத்தைகளிலும் அவனுக்கு உண்மையும் அக்கறையும் இருக்க வேண்டும்.

அவன் எது உபயோகமானது எது தீங்கானது என்பதையும் ஆராய்ந்து கொள்ள வேண்டும். தன் மெய் நிலைக்கு எதிரானவைகளில் சதிவலைகளில் அவன் விழுந்து விடக்கூடாது, மற்ற எல்லாவற்றிலிருந்தும் அவன் எப்போதும் அல்லாவிடம் அடைக்களம் தேடிக் கொள்ள வேண்டும்.

மனிதனின் இதயம் என்பது அல்லாஹ்வின் இல்லமாகும். அந்த இல்லத்தில் அவனை தவிர வேறு யாரும் குடியேறக்கூடாது. பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள். “அடியானின் இதய நேர்வழியில் இல்லாதவரை அவனின் செயல்களில் நேர்மை இருக்காது. அவனுடைய நாவு நேர்மையாக இல்லாதவரை அவனுடைய இதயம் நேர்மையாக இருக்காது.

அவர்கள் மேலும் சொன்னார்கள், “கவனமாக இருங்கள் மனித உடலில் ஒரு துண்டு தசை உள்ளது. அது ஆரோக்கியமாக இருக்கும் வரை உடல் முழுவதும் ஆரோக்கியமாக உள்ளது. அது கெட்டுப் போய்விட்டால் உடல் முழுவதும் கெட்டுப் போய் விடும். அந்த ஒரு துண்டு தசைதான் இதயம் என்றார்கள். இதயத்தின் வழிப்பாதை பத்து நிலைகளை கொண்டுள்ளது.



1.ஞாபகம் (இதயத்திற்கு வந்து சேர்ந்திருக்கும் தகவல்கள்)
2.உள்ளார்ந்த தன்மையிலிருந்து வரும் வார்த்தைகள்
3.உள்ளுணர்வு (தெய்வீக கருணையினால் இதயத்துக்கு வரும் தகவல்கள்)
4.கருத்துக்கள் (அல்லாஹ்வின் ஆசியை சிந்திப்பதால் ஏற்படுவது)
5.தீர்மானம் (சத்தியத்தின் அழைப்பை உண்டாக்கும் இதயத்திலுள்ள காதல் தீ)
6.திருப்தி (விதியின் வருந்தத்தக்க நிகழ்வுகளில் தெய்வத்தின் மீது குறை காணாமல் இருப்பது)
7.தெரிந்தெடுத்தல் (சத்திய பராபரன் தெரிவு செய்வதை தேர்ந்தெடுத்து கொள்ளுதல்)
8.நோக்கம்(ஒவ்வொரு செயலினுடைய ஆரம்பமும் முடிவும்)
9.விடா முயற்சி(நஃப்ஸின் இச்சைகளுக்கு அஞ்சாமல் தெய்வீக உத்தரவுகளுக்கு பணிவது)
10.உத்தேசம் (நோக்கத்தை அல்லாஹ் அளவில் கொண்டு சேர்ப்பது)

ஃபக்கீர் தன்மை என்பது அடிமைத்தனத்தின் ஆரம்ப நிலையாகும். தூய்மையின் சாரமும் தக்வா என்கின்ற இச்சை அடக்கத்தின் ஆரம்பமும் விசுவாசத்தின் நிலையும் சத்தியத்தை நடக்கும் பாதையின் அடித்தளமும் ஆகிய இவை ஃபக்கீரின் பண்பாகும்.

ஃபக்ர் என்னும் இறை ஏழ்மை எளிமையை தேர்ந்தெடுத்து கொள்பவர் தனக்காகவும் தன் குடும்பத்தினருக்காகவும் ஆதாயங்களின் மீது கவனம் கொள்பவர் தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் ஆதாயங்களில் மீது கவனம் வைக்க கூடாது. அல்லாவின் முன்பு அவன் மன்றாடி பிச்சை கேட்க வேண்டும். மற்ற எவரிடத்திலிருந்தும் எதிர் பார்க்காமல் அல்லாவிடமிருந்தே எதிர் பார்க்க வேண்டும்.

அந்த ஃபக்ர் என்ற இறை எளிமையை கொண்ட மனிதனின் நிலை ஒரு இருண்ட கிணற்றில் விழுந்து விட்டது போன்றதாகும். அந்த கிணற்றின் வாய் மூடப்பட்டுள்ளது. அதன் நுழைவு தடுக்கப்பட்டுள்ளது. அந்த கிணற்றுக்குள் விழுந்துவிட்ட மனிதனுக்கு உதவி செய்ய வேறு எவருமில்லை. அங்கிருந்து வெளியேறவும் எந்த வழியும் கிடையாது. இந்த இக்கட்டான நிலையில் தன் இறைவனாகிய ரப்பை தவிர வேறெவரிடத்தில் அந்த மனிதன் உதவி தேட முடியும்?

தன் அடியான் தன் கடமையை நிறைவேற்றுவதற்கான ரசியத்தை இறைவன் தன் திருமறையில் வெளிப்படுத்தி இருக்கிறான். நாங்கள் உனக்காகவே வணங்குகிறோம், உனக்காகவே வணங்குகிறோம். (அல்ஃபாத்திஹா வசனம் 5) மேலும் இந்த வசனத்தின் தன் அடியான் தன் இயலாமையின் பலவீனத்தின் உச்சியில் இருந்துக் கொண்டு நாங்கள் உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம். (அல் ஃபாத்திஹா 5) என்று கூற வைக்கிறான்.

அடியானின் மீது ஆண்டவனின் முழுமையான வல்லமை இந்த வசனங்களில் பொதியப்பட்டுள்ளது. நாங்கள் உன்னையே வணங்குகிறோம், உனக்காகவே வணங்குகிறோம். அடியானின் முழுமையான தேவைகளை உன்னிடமிருந்தே உதவி தேடுகிறோம் என்ற வசனத்தில் ஒளிந்திருக்கிறது.

அரஃபாத் பெருவெளியில் நின்று கொண்டு ஒரு காட்டரபி பின் வருமாறு பிரார்த்தித்ததாக கூறப்படுகிறது, "யா அல்லாஹ் நான் என்னுடைய வீட்டையும் நாட்டையும் விட்டுவிட்ட உன்னிடத்தில் வந்திருக்கிறேன், ஆனால் நீதான் என்னை இங்கு கொண்டு வந்திருக்கிறாய். உன்னுடைய சன்னிதானத்திலும் நான் வந்து நிற்கிறேன்.

ஆனால் நீயே நான் இங்கு நிற்கும்படி செய்திருக்கிறாய். உன்னுடைய உத்தரவுகளுக்கு நான் எதிர்த்து புரட்சி செய்த போதும் நீ என்னை பரிதாபத்துக்குரியவனாக ஆக்கி விடவில்லை. ஆனால் இதற்காக நான் மன்னிப்பு கோரவில்லை. நீ என் மீது கருணைக் காட்டி நீ என்னை மன்னித்துவிட்டால் உன்னை நாடும் நல்லடியார்களில் என்னை போன்று எவரும் கிடையாது. என் தலைவனே என் தோழனே என் மீது கிருபை செய்.

மகத்தான இறைவன் தன் நல்லடியார்களை ஃபக்கீர்களோடு இருந்து கொள்ளும்படி பணித்தான். அவர்கள் அடிமைத்தனத்தின் எல்லையை கடந்துவிடக் கூடாது, உலக ஆசையின் பின்னால் ஓடிவிடக்கூடாது. ஆன்மீக புனிதத்தை இழந்துவிடக் கூடாது, ஃநப்ஸின் இச்சைகளுக்கு பின்னால் ஓடக் கூடாது தாழ்ந்த இச்சைகளை துரத்திக் கொண்டு உன்னதமான ஆன்மீக அற்புதங்களை கைவிட்டு விடக்கூடாது என்பதற்காக தன் அடியார்களை இறைவன் அவ்வாறு எச்சரித்தான்.



இதை மேலும் விளக்குவதென்றால் இறைவன் தன் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிட்டான், "இந்த செயலில் உமது பங்கு எதுவுமில்லை" குர்ஆன் *3:128*, ஒவ்வொரு செயலும் அல்லாவுக்கே சொந்தமானது குர்ஆன் *3:154* . ஆனால் ஒவ்வொரு செயலும் அல்லாவுக்கு சொந்தமானது, குர்ஆன்*(13 : 34)*, தெரிந்து கொள்ளுங்கள் உண்டாக்குவதும் உத்தரவிடுவதும் அல்லாஹ்விடத்தில் இருக்கிறது, *7 : 54*.

ஆம்! அவனுடைய விடுதலை அவனுடைய அனைத்து தேவைகளும் அல்லாஹ்விடத்தில் இருக்கிறது என்று அவன் உணர்ந்து கொள்வதில்தான் இருக்கின்றது. அடியான் தன்னுடைய ஆண்டவனிடம் மட்டுமே கேட்க வேண்டும் என்ற புரிந்து கொள்கிறபோது அவனுக்கு தெய்வீக உதவி கிட்டுகிறது. தெய்வ வழிகாட்டுதலினால் அல்லாஹ் உடன் ஐக்கியமாகும் பாக்கியம் அவனுக்கு கிடைக்கின்றது. இறை நேசர்களான அவுலியாக்களை சேர்ந்திருப்பது என்பது ஃபக்ர் என்கின்ற இறைவழி எளிமை ஏழ்மை பண்பிலிருந்துதான் உண்டாகிறது.

## 4. பரமனாகிய இறைவனை சார்ந்திருத்தல்

ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானி அச்சம், வணக்கம், ஆசை, காதல்(முஹபத்) ஆகிய சிறகுகளை பெற்றிருக்கிறான். அச்சமென்னும் சிறகை விரித்து பறக்கும் அடியான் ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். வணக்கம் என்னும் சிறகை புனைந்த நல்லடியான் தனது ஆசைகளை நோக்கி சென்றடைகிறான். பாசம் என்னும் சிறகை விரிக்கின்ற அடியான் உத்வேகம் பெறுகிறான். காதல் சிறகை விரிப்பவனோ பேரானந்தத்தை அடைந்து கொள்கிறான்.

திருக்குர்ஆனில் அந்த நல்லடியார்களை பற்றி குறிப்பிடுகின்ற இறைவன் நீ தேர்ந்தெடுத்து இருக்கின்ற நல்லடியார்களின் கூட்டத்தில் எங்களை சேர்த்து வை என்று அவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள். *(அல் குர்ஆன் 5:83)* *"அவர்களுடைய வர்த்தகமோ அல்லது வர்களின் கொள்வினை குடுப்பினைகளோ பரமனின் திருநாமங்களை ஸ்தோத்திரம் செய்வதிலிருந்து அவர்களை தடுத்து விடுவதில்லை. (அல் குர்ஆன் 24: 37)*

அதனால்தான் அந்த ஆரிஃபாகிய மெய்ஞ்ஞானியின் செயல் அல்லாவுக்கு சொந்தமாகிவிடுகின்றது. அவர்களுடைய நாவு அவனுடைய திருநாம உச்சரிப்பிலேயே பயன்படுத்தபடுகிறது. அவனுடைய நஃப்ஸ் என்னும் ஆன்மா இன்னல்களுக்கிடையே பொறுமையாக அமைதிக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு கணமும் அந்த அடியானின் இதயம் ஆண்டவனிடம் மௌனமாக முறையிட்டு கொண்டிருக்கிறது. அவனுடைய எண்ணங்கள் உன்னதத்தை நோக்கி உயர்ந்து செல்கிறது. ஒரு கணநேரம் அவன் தன்னுடைய ரப்பாகிய இறைவனின் ஆசிகளைப் பற்றி சிந்திக்கிறான். அடுத்த கணம் அவனுடைய தெய்வத்துவத்தை பற்றி சிந்திக்கிறான்.



இவ்வாறு அவன் எந்நேரமும் ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானி சுதந்திரமாக இருக்கும்பொழுது அவனுடைய அடிமையாக இருக்கிறான். அவனுடைய அடிமையாக இருக்கும் பொழுது ஏழையாகவும் அவன் ஏழையாக இருக்கும் பொழுது செல்வந்தனாகவும் இருக்கின்றான். இப்பொழுது அந்த ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானியிடம் எல்லா விதமான பின்வரும் நற்குணங்களும் தெய்வீகமாக பிரதிபலிக்கின்றது.

ஞானம், கண்ணியம், இரகசியம், நெருக்கம், உணர்தல், கரைந்து விடுதல், கதறுதல், நகைத்தல், தன்னை இழத்தல், ஏற்றுக் கொள்ள படுதல் பாராட்டுக்குரித்தாகுதல் ஆகியன. அவனுடைய துக்கத்தில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. அவனுடைய சந்தோஷத்தில் ஒரு துக்கம் இருக்கிறது. அவனது நேசத்தில் ஒரு விசனமும் விசனத்தில் ஒரு நேசமும் மறைந்திருக்கிறது.

அவன் அச்சத்தில் ஒரு நம்பிக்கையும், நம்பிக்கையில் ஒரு அச்சமும் இணைந்திருக்கிறது. அவனுடைய அச்சம் அவனுடைய நம்பிக்கையை சொல்லுவதில்லை. அவனுடைய நம்பிக்கை அவனுடைய அச்சத்தை துடைத்துவிடுவதில்லை. தன்னுடைய சட உடலோடு அவன் மற்ற மனிதர்களோடு வாழ்ந்து கொண்டு தன்னுடைய இதயத்தாலும் தன்னுடைய ஆன்மா என்னும் நஃப்ஸாலும் அவன் ஆண்டவனுடன் இருக்கிறான். மனதர்களுடனான அவனது நஃப்ஸ்ஸின் உறவு இறைவனுடனான அவனது இதயத்தின் உணர்வில் தீங்கு ஏற்படுத்துவதில்லை. அவனுடைய துக்கம் கம்பீரமானது. அவனுடைய ஏழ்மை செல்வீகமானது.

ஒருநாள் ஹஜரத் பாயெஜீப் பிஸ்தாமி(ரலி) தன்னுடைய பிரார்த்தனையின் போது இறைவா! என்னுடைய ரப்பே முடிவாக என்னை பிணித்திருக்கும் சங்கிலி உடைந்து சிதறும் என்று நான் சொல்லும் போதெல்லாம் அதன் ஆணிகள் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிந்துவிடுகின்றன.

இந்த வார்த்தைகளை அவர்களுடைய உதடுகள் உச்சரிக்கின்ற போது அவருடைய கண்கள் கண்ணீரை பொழிந்தது. பக்தியின் அடையாளங்கள் காட்டுகின்ற ஒவ்வொருவனும் உண்மையான பக்திமான் ஆகிவிடமாட்டான். நேசம் முட்டாள்தனம், மடமை, வீரம், அறியாமை ஒவ்வொன்றும் இப்படித்தான்.

ஹலரத் ராபியா ஹாத்தூன் (ரலி) அவர்களிடம் ஆரிஃப் என்ற ஞானி முக்தி அடைந்துவிட்டான் என்பதற்கான அடையாளம் என்ன? என்று மக்கள் கேட்டார்கள். அவ்வம்மையார் சொன்னார்கள். அவன் தன் ரப்பின் மீது கொண்ட காதல் தீயில் கனன்று கனன்று கொண்டிருப்பான். அந்த தீ கனன்று கொண்டிருக்கின்றது என்பதற்கான அடையாளம் அந்த காதலன் வழங்கும் ஆசிகளில் அல்லாமல் அந்த படைத்தவனிடமே அவன் திருப்தி கொண்டிருப்பான்.

அவன் அவனது ஐக்கியம் என்னும் சந்தோஷக் கடலில் ஆழ்ந்து கிடப்பான். அவன் அந்த பரமனிடத்தில் மட்டுமே அவன் சமாதானத்தைக் காண்பான். தன்னுடைய அனைத்து விருப்பங்களையும் அவரிடத்தில் அர்ப்பணித்து சரணடைந்திருப்பான்.

அல்லாஹ்வாகிய அவனது உணர்விலேயே ஆழ்ந்து கிடப்பதன் காரணமாக ஏற்படும் சிரமங்களை அவன் சுமையாக கருதமாட்டார்கள். அவனுக்கு அவனுடைய அல்லாஹ் மற்ற எந்த பொருளையும் விட நெருக்கமாக இருப்பதை அவன் அறிந்திருப்பான். அவன் தன்னுடைய இறைவன் மற்ற எதை விடவும் எவரை விடவும் தன்மீது அன்பு கொண்டிருப்பதை அறிந்திருக்கிறான்.

அவனுக்கு அந்த இறைவன் எதனை விடவும் உயர்ந்ததும் மேலானதமானதாகும் எதற்கு பின்னும் தன்னுடைய இறைவனை தவிர வேறெவரும் இல்லை என்று அவன் அறிந்திருக்கிறான். அந்த ஆரிஃப் எப்பொழுது நஃப்ஸின் தூண்டுதல்களிலிருந்து ஆன்மாவின் உணர்ச்சிகளை பிரித்தறிந்து கொள்கிறானோ, எப்பொழுது தெய்வீக ஆசைகளிலிருந்து உலக ஆசைகளை பிரித்தறிகிறானோ, பரமார்த்த நோக்கங்களிலிருந்து உலகாயத நோக்கங்களை பிரித்தறிகிறானோ அப்போது அவன் மஹரிபா என்னம் தெய்வீக ஞானத்தை அடைந்து கொள்கிறான்.

அறிவின் பாதையில் வெற்றி கொண்டவன் மரியாதையின் எல்லைகளை பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறான். அவன் அடியானுக்குரிய பண்புகளில் பொறுப்புடன் இருக்கிறான். ஒரு அடியானுக்குரிய அவசியங்களை நடைமுறைப் படுத்துகிறான். அடிமைத்தனத்தின் சாரத்தை பாதுகாத்துக் கொள்பவன்தான் இந்த பாதையில் நடக்க முடியும்.



இப்போது அவன் சத்திய நேசனை கொண்டு தியானிக்கிறான். அவன் ஜிக்ரின் ஜிக்ரை அதாவது தியானத்தின் அந்தரங்க தியானத்தில் ஆழ்ந்து விடுகிறான்.

அவன் அந்த சத்திய பராபரனுக்கு நன்றி உடையவனாக உணர்கிறான். தன்னுடைய நன்றி உணர்வுகளுக்காகவும் அடியான் ஆண்டவனுக்கு நன்றி உடையவனாக இருக்கிறான். முடிவில் நஃப்ஸுக்கு ஒத்துப் போகாத நஃப்ஸ் உடையவானகவும் தன்னுடைய ஆன்மா அல்லாத ஆன்மாவை உடையவனாகவும் சக மாந்தர்களுடன் சக மாந்தர்களுக்கிடையே சக மனிதனாக அவன் இல்லாமல் இருக்கிறான்.

தன்னுடைய மஹரிபா என்னும் இறை ஞானத்துக்கு ஏற்ற அளவில் தன் நஃப்ஸை ஆரிஃபாகிய ஞானி அடக்கி வைக்கிறான். தன்னுடைய நஃப்ஸ் அடக்கி வைக்கும் அளவிற்கு தன்னுடைய ஆண்டவனின் பெருமையையும் மேலாண்மையையும் அவன் கிரகித்துக் கொள்கிறான். அவன் அவனுடைய மஹரிபா என்னும் மெய்ஞ்ஞானத்தின் அளவிற்கேற்ப தன் நாயனுக்கு தொண்டு செய்கிறான். தன்னுடைய தொண்டின் அளவிற்கேற்ப அல்லாஹ்வுடைய ரட்சகத்தன்மையின் ரகசியத்தை அறிந்து கொள்கிறான்.

தன்னுடைய மஹரிபா என்னும் மெய்ஞ்ஞானத்தின் அளவு கொண்டு அவன் தன் ஆண்டவன் மீது சார்ந்திருக்கிறான். அவன் மீது அவன் சார்ந்திருக்கும் அளவுக்கு அவன் இறைவனுடைய கருணையையும் ஓர்மை உணர்வையும் அவன் அறிகிறான். தன்னுடைய மஹரிபா என்னும் ஞானத்தின் அளவுக்கு அல்லாஹ்வை நோக்கி தன் செல்களால் அவன் திரும்புகிறான்.

அவன் மீது அவன் வைத்திருக்கும் நம்பிக்கையின் அளவுக்கு ஆண்டவனின் வல்லமை சக்தியை அவன் உணர்ந்து கொள்கிறான். அவனுடைய மஹரிபா என்னும் ஞானத்தின் அளவுக்கு அவன் சத்தியார்த்தத்தில் அடைக்களம் பேறும் போதுதான் அந்த ஆண்டவனுடைய ஆட்சியையும் முதலாளித்துவத்தையும் அந்த ஆரிஃப் ஆகிய ஞானி புரிந்து கொள்ள முடிகிறது. இந்த அனைத்து பண்புகளையும் பெற்றவனைத்தான் இறைவனை அறிந்த மெய்ஞ்ஞானி ஆரிஃப் என்று நாம் அழைக்கிறோம்.

## 5. ஆரிஃப் - மெய்ஞ்ஞானிகளின் பாதை

தெய்வீக காதலில் கவிழ்ந்து விழுந்துவிட்டதன் காரணமாக தங்களை சிக்கலில் வீழ்த்தி கொண்டவர்கள்தான் ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானிகள் ஆவார்கள். அவர்களுடைய ஆன்மா மறுமையையே பார்த்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய இருதய வார்த்தையின் அர்த்தத்தையே உற்று பார்க்கின்றது. தங்கள் அனைத்து ரகசியங்களையும் தங்கள் ரப்பினிடத்திலேயே அவர்கள் மறைத்து வைக்கிறார்கள். அவர்களுடைய நஃப்ஸ் உலகத்தை விட்டும் நீங்கி விடுகிறது. அது பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்கிறது.

அவருடைய ஆன்மா உன்னதத்தை நோக்கி உயர்ந்திருக்கிறது. இப்போது மறுமையை பற்றியும் அவர்கள் கவலைப்படுவதில்லை. அவர்களின் இதயத்திற்கு திருநாம தியானம் பழக்கப்பட்டுவிட்டது. அவர்களுடைய ஆன்மா அல்லாஹ்வின் மீது கொண்ட முஹபத் என்ற காதலால் தீப்பற்றி எரிகிறது.

அவர்களுடைய இதயம் கண்ணியத்துக்குரியது. பெருந்தன்மை உடையது. அவர்களுடைய நாவு அவனுடைய புகழை சிலாகித்து பேசுகின்றது. அவர்களுடைய ஆன்மா அவன் மீது கொண்ட முஹபத்துக்கும் காதலுக்கும் அரண்மனையாக விளங்குகிறது. பேரரசரின் பேரரறிவுக்கும் தீர்க்க தரிசனத்துக்கும் முன்னே அடியானுடைய நஃப்ஸ் பணிந்து கிடைக்கின்றது. அவனுடைய எண்ணங்கள் ஆண்டவனுடைய சிந்தனையில் ஆழ்ந்து கிடக்கின்றது.

அவனுடைய வார்த்தைகள் புகழனைத்தும் அல்லாஹ்வுக்கு உரியது என்ற சொல்லை அடிக்கடி உச்சரித்து கொண்டிருக்கிறது.அந்த அடியானுடைய வேலை என்பதெல்லாம் ஆண்டவனுக்கு அடி பணிவதும் தொண்டு செய்வதும் மட்டும்தான். அவர்கள் எங்கு நோக்கினும் சங்கைக்கும் சக்திக்கும் உரியவனான சத்திய கலைக்காட்சியை காண்கிறான்.

ஆரிஃப்களின் பாதை ஹஜரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பாதையாகும். இந்த உலகை அவர்கள் கை கழுவி விட்டார்கள்.



நபி அவர்களின் பாதையில் நடக்கும் இவர்கள் இந்த பாதையில் ஏற்படும் தொந்தரவுகளையும் வருத்தங்களையும் இனிமையாக மாற்றிக் கொள்கின்றனர். அவர்களுடைய ஒவ்வொரு செயலிலும் அடி பணிதலும் நியம நீதியும் மேலோங்கி நிற்கிறது.

இந்த உலகிலே அவர்கள் தங்களை அந்நியனாகப் பார்க்கிறார்கள். அவர்களுடைய மார்பில் இதயத்தின் ராகம் வித்தியாசமாக காணப்படுகின்றது. அவர்களுடைய உள்ளமையும் மனமும் புதுமையானதாக இருக்கின்றது. தேச பிரஷ்டம் செய்யப்பட்டது போன்ற இந்த நிலையில் அவர்களுடைய தனிமையும் வருத்தமும் கடைசிவரை அவர்கள் அமைதியற்ற நிலையிலே வைத்திருக்கிறது.

சத்திய பராபரனுடன் ஐக்கியமாகும் வரை அவர்களுடைய இந்த துக்கமும் புதுமையும் நீடிக்கின்றது. அவர்களுடைய காரியங்கள் புத்திக்கு அப்பாற்பட்டது. அவர்களுடைய அங்கங்களுக்கு எல்லாம் ஒரே தீர்வு சத்திய பராபரன் மட்டுமே ஆகும்.

உதடுகளும் நாவும் இல்லாமல் தங்களுடைய ரப்பிடத்தில் ஆரிஃப் பேசிக்கொண்டே இருக்கிறார். அவருடைய முஹபத் ஆகிய நேசம் அவருக்குள் பொங்கிக் கொண்டே இருக்கிறது. அவருடைய இருதயம் தனிமையில் இருக்கிறது. அவருடைய சிந்தனை தெய்வீக ஒளியை கொண்டு சிந்திக்கிறது.

சுயநலம் இழிவான எண்ணங்களுக்கு அங்கு இடமில்லை. அவர்களுடைய ஆசைகள் மனிதனின் கணக்குகளுக்கு அப்பாற்பட்டது. அது தெய்வீக நிலைமை அடைந்திருக்கிறது. உலகை விட்டும் சுத்தம் செய்யப்பட்ட ஆன்மீக எல்லையில் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களின் வார்த்தைகளில் தெய்வீக ஞானம் பொங்குகிறது.

அவன் தன்னுடைய தெய்வ இரகசியங்களை தன்னுடைய ஆரிஃப்களான மெய்ஞ்ஞானிகளின் இதயத்தில் அவன் புதைத்து வைத்திருக்கிறான். அவர்களுடைய இதயம் தெய்வீக கண்காணிப்பாளராக அமைந்துவிடுகிறது. தன்னுடைய தான் தன்மையின் இருப்பைக் கொண்டு அடியார்களின் இதயத்தை அவன் அழகு படுத்தி வைத்திருக்கிறான்.

அவன் தன்னுடைய தெய்வீக பிரசன்னத்தில் அவர்களை நுழைய அனுமதிக்கிறான், அவர்களின் ஆன்மாவின்அழகுக்காக தன் ஆதிக்க பிரதேசங்களில் அவர்களை சுல்தான் ஆக்குகின்றான்.

ஆரிஃப்களுக்கு அடையாளம் உண்டு. ஆனால் ஒருசில மனிதர்களே அதனை அறிந்திருக்கிறார்கள். அவற்றில் வெளிப்படையாக காணக்கிடப்பது. சங்கடங்களையும், சிக்கல்களையும் அவர்கள் தேனைப் போன்ற இனிமையானதாக எடுத்துக் கொள்வதாகும். அவர்கள் துக்கத்தையும் வருத்தத்தையும் பழுத்த பேரீச்சை கனிகளாக பார்க்கின்றார்கள்.

எல்லோரும் தங்களது மறுமையின் என்னுடைய நஃப்சே என்னுடையே ஆசையே என்று கதறுகிற போது என்னுடைய ரப்பே என்னுடைய ரப்பே நீயே என்னுடைய ஆசையும் பாசமும் என்றழைக்கிறார்கள்.

ஆரிஃப்காளாகிய மெய்யஞ்ஞானிகளுக்கு 4 அடையாளங்கள் உண்டு. அவர்கள் அவன் மீது வைத்திருக்கும் அன்பை கணக்கிட முடியாது. குர்ஆனின் கட்டளைக்க அடி பணிவதிலும் எங்கே தங்களது நிலை மாறிவிடும் என்று அச்சப்படுவதிலும் அவர்களுடைய அடையாளம் இருக்கிறது.

அடியான் காத்திருக்கிறான், மீண்டும் காத்திருக்கிறான். கோழை தலைத்தெறிக்க ஓடி விடுகிறான். உலக காதலன் சக்க விடுகிறான். ஆரிஃப் ஆகிய மெய்ஞ்ஞானி தெய்வீக பேரானந்தத்தில் தன்னை இழந்து விடுகிறான்.



## 6.மெய்ஞ்ஞானிகளின் மகாம் என்னும் பதவிகள்

ஆரிஃப் என்னும் மெய்ஞ்ஞானிகள் பல தரத்தினராக பிரிந்து விடுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு படித்தரம், ஒரு நிலை உண்டு. சிலர் அல்லாஹ்வாகிய ஆண்வனுடைய வலிமையை அறிந்திருக்கிறார்கள். அவனுடைய வல்லமை என்னும் ஜன்னலில் அவனை பார்க்கின்றவர்கள் அவர்கள் அச்சத்திலேயே வாழ்கிறார்கள்.

சிலர் இறைவனுடைய கிருபையை கொண்டும் ஆசியை கொண்டும் மஹரிபா என்னும் ஞானத்தை அடைந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஆச்சரியமடைவதில்லை, அவர்கள் தங்கள் பேரின்ப காதலனாகிய அல்லாஹ்வோடு ஆனந்தத்திலேயே மூழ்கி இருக்கிறான். சிலர் அனுபவத்தை அடிப்படையாக கொண்ட அறிவை மெய்ஞ்ஞானமாக கொண்டிருக்கிறார்கள்.

எனவே அவர்கள் அவனுடன் விசுவாசத்தோடும் பக்தியோடும் இருந்து வருகிறார்கள். அவனுடைய எல்லாம் வல்ல தன்மையை கொண்டு அறிந்திருப்பவர்கள் அவர்களுடைய இதயத்தில் அவனைப் பற்றி பேரிகர்ச்சி என்ற நிலையிலேயே இருக்கிறார்கள். அனைத்து உயிர்களுக்கும் அவன் உணவளிப்பதை கொண்டு அறிந்திருப்பவர்கள் தங்களை எவ்வித சக்தியும் அற்றவர்களாக பார்க்கிறார்கள். அவனுடைய ஓர்மை ஒருமைப்பாட்டைக் கொண்டு அவனை பார்ப்பவர்கள் அவனோடு வசனித்து அவனோடு ஒன்றியிருக்க விரும்புகிறார்கள்.

அவனுடைய வல்லமையின் மூலம் அவனை அறிந்தவர்கள் அவர்களுடைய அறிவுக்கு தக்கபடி அவனை அஞ்சுகிறார்கள். அவனுடைய கிருபையைக் கொண்டு அவனை அறிந்திருப்பவர்கள் அவர்களுடைய அறிவுக்கு தக்கபடி அவனுடைய கிருபையை அறிந்திருக்கிறார்கள். அவனிடம் பணிவைக் கொண்டு அவனை அறிந்தவர்கள் தாங்கள் அறிந்த வண்ணம் அவனிடம் பணிவுடன் இருக்கிறார்கள்.

அவனுடைய கம்பீரத்தை கண்டவர்கள் அவர்கள் கண்ட அளவுக்கு அவனை அஞ்சுகிறார்கள். எல்லாவற்றுக்கும் அவன் போதுமானவன் என்று அறிந்து கொண்டவர்கள் ஃபக்ர் என்னும் ஏழ்மை எளிமை நிலையை அடைகிறார்கள்.

ஏகமாகிய அவன் ஒருவனே எங்கும் இருக்கிறான் என்று அறிந்து கொண்டவர்கள் அவனை அறிந்து கொண்ட அளவுக்கு பரிசுத்தம் ஆகிவிடுகிறார். அவனோடு ஐக்கியம் ஆகிவிடுவது என்பது அவனது ரப்பானியத் ஆகிய இரட்சகத் தன்மையை அறிந்து கொள்ளும் அளவுக்கு ஆகிறது.

மெய்ஞ்ஞானியம் பெற்ற ஒவ்வொரு ஆரிஃபும் அவரவர்க்குரிய மகாம் ஆகிய நிலைகளிலிருந்து செயல்படுகிறார்கள். சிலர் அடக்கம், மரியாதை என்னும் மகாமிலிருக்கிறார்கள். சிலர் நெருக்கம், நேர்மை என்ற நிலையிலிருக்கிறார்கள். சிலர் ஆசிர்வாதம் கிருபாகடாட்சம் என்பதனால் ஆளப்படும் மாகம்களில் அமர்ந்திருக்கிறார்கள்.

சிலர் அவனைக்கொண்டு அறிந்தவர்களாகவும் சிலர் அவனது மகத்துவத்தைக் கொண்டு அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இது பற்றி திருக்குர்ஆனின் கூற்று பின் வருமாறு கூறுகிறது. நாம் ஒவ்வொருவரும் ஒரு தனித்தன்மையான நிலையிலிருந்து வருகிறோம் (அல் குர்ஆன் 37 : 164).

மஹரிபாவின் தாழ்ந்த படித்தரத்தில் இருக்கின்ற மகத் இறைவனுடைய தூதரும் ஈருலகத் தலைவரும் தன்னுடைய சாரத்தாலும் வார்த்தைகளாலும் உண்மையையுடையவர்களான திருத்தூதர் (ஸல்) அவர்கள் ஹதீஸ் மூலம் தவ்ஹீத் என்னும் அத்வைதத்தை உணர்கிறார்கள்.

நம்முடைய தலைவர் ரசூல் (ஸல்) அவர்கள் அவர்களை உண்மையாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல காரியங்களை எப்பொழுதும் சொல்கிறார்கள். ஆனால் எப்போதாவது தங்களின் நஃப்ஸின் தூண்டுதலின் காரணமாக தவறு செய்து விடுகிறார்கள். பாவ காரியங்களை செய்விடுகிறார்கள். அந்த மாபெரும் கருணையாளர்களிலெல்லாம் கருணையாளன் அவர்களின் மீது இரக்கம் காட்டாவிட்டால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அறியாமைக்கும் பாவத்துக்கும் ஆளாகிவிடுகிறார்கள்.



இவர்களை விட சற்று உயர்ந்த படித்தரத்தில் இருப்பவர்கள் அடையாளத்தையும் அத்தாட்சியும் கொண்டு சத்திய பராபரனை பற்றிய அறிவை கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் சிந்தனைக்கும் கருத்துகளுக்கும் மதிப்பு கொடுத்து சிந்தனையின் அடிப்படையில் கிடைத்த அறிவைக் கொண்டு அவனை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் குர்ஆனின் வாக்கியங்களை படிப்பதற்கு முன்பே வேத முடிவுகளை படித்தறிவதற்கு முன்பே அவர்கள் ஏகத்துவத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

வெளிப்படையாக தெரிவதைக் கொண்டும் திடமாக தெளிவாக தெரிகின்றதைக் கொண்டும் கண்ணுக்குத் தெரியாதவைகள் உண்டென்னும் உண்மை கொண்டு அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் ஆதாரங்கள் உண்மையானதென்றும் நம்பத்தக்கவை என்றும் உறுதி செய்து கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆதாரங்கள் மீது ஆதரவு வைத்திருப்பதால் சத்திய பராபரனுக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு திரை விழுந்து விடுகின்றது. உயர்ந்த நிலையில் உள்ள ஆரிஃப்களாகிய மெய்ஞ்ஞானிகள் கண்கண்ட காட்சியில் நம்பிக்கை கொண்டுள்ள அறிஞர்களை போன்றவர்கள் அல்ல.

அவர்களை பொறுத்தவரை ஆதார அறிவைவிட இறை நெருக்கத்தால் கிடைக்கின்ற அறிவு மேலானது. அவர்கள் கிடைத்த அடையாளங்களால் அல்ல அவனோடு அவர்களின் நெருக்கத்தைக் கொண்டு அவர்கள் அல்லாஹ்வை அறிந்திருக்கிறார்கள். அடையாளங்கள் அவர்களது கண்களில் ஆச்சரியத்தை உண்டாக்காது. பகுத்தறிவால் பரமனிடத்திலேயே அவர்கள் நெருங்க மாட்டார்கள். அவர்கள் தங்கள் மகாம் என்னும் நிலைகளை இர்ஃபான் என்னும் மெய்ஞ்ஞானம் கொண்டு அறிந்து நிரந்தரமாக அங்கேயே தங்கியிருக்கிறார்கள்.

ஆரிஃப்களின் வழிகாட்டுபவர்களாகவும் ஆதாரமாகவும் இறைவனுடைய தூதர் நபி (ஸல்) அவர்களாகவே இருக்கிறார்கள். ஓதுகின்ற குர்ஆன் தான் அவர்களுடைய ஒப்பற்ற தலைவர். பரமனுடைய தெய்வீக ஒளி அவர்களுடைய பாதையை ஒளிமயமாக்குகின்றது.

www.netsufi.com